பேய்ப்பித்து

(ஒரு நாடகம்)

ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர் M. A., I. C S. *Bar-at-law*

ஆங்கிலத்தில் ஆக்கியதைத் தழுவி

இங்கிலீஸ் - தமிழ் அகராதி நூலாசிரியர்

(மாஜி "ஆரியா" பத்திராதிபர்)

ஸ்ரீ. தி. அ. சாமிநாத ஐயர்

தமிழில் எழுதியது

சென்னை

பி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்

1942

ரிஜிஸ்தர் செய்தது]

[விலை 10 அணா

நாடக பாத்திரங்கள்

புருஷர்கள்

1. ரகுராமன்	பெருங்குளம் கிராமத்து ஸ்டாம்ப்-வெண்டர்.
2. கோபாலன்	ரகுராமனது தமையன், எம். ஏ. பரீட்சைப் பட்டம் பெற்றவன், கலாசாலே ஆசிரியன்.
3. ராமன்	ரகுராமனது அண்டை வீட்டுக்காரன். உத்தியோகமில்லாதவன்.
4. சங்கரன்	வட்டி வியாபாரி.
5. கோவிந்தன்	மற்ெருரு வட்டி வியாபாரி.
6. ஈசுவரன்	இன்னுமொரு வட்டி வியாபாரி.
7. நாராயணன்	வேதாந்தம் படித்த கிராமத்தான்.
8. திரிவிக்கிரமன்	பள்ளிக்கூடத்துப் பிள்ளே.
9. கிருஷ்ணன்	கிராமத்துள் முதியோன், கிராம மூப்பனுமாவன்.
10. நாகன் 11. கேளு 12. சாத்தன் 13. கருப்பன்	சூனிய மந்திரக்காரர், பேயாடிகள்.
14. அப்பாசாமி	கிராமப் புரோகிதன்.
15. கேசவன்	மீனுக்ஷியின் தமையன்.
16. சாமி பணிக்கர்	ஜோஸியன்.
17. வீரராகவன்	மந்திரவாதி
18. பிரம்மதத்தன் நம்பூத்திரி	ஏத்துமானூர்க் கோவிலிற் பேயோட்டி.
19. அப்பு ஐயர்	ஹோட்டற்காரன்.

401

ஸ்திரீகள்

1. மீனாக்ஷி	ரகுராமனது மனைவி.
2. ஜானகி	கோபாலனது மனைவி.
3. அம்மு	ராமனது மனைவி.
4. லக்ஷ்மி	மீனாக்ஷியின் அயலகத்தாள்.
5. முத்து	கிராமத்துக் கிழவிகள்.
6. சேஷி	
7. ருக்மிணி	
8. தேவகி	பணிப்பெண்.
9. குஞ்சி	சாமிபணிக்கருடைய மனைவி.
10. பாகீரதி	கேசவனது மனைவி.

முகவுரை

பொதுவாகத் தென் இந்தியாவில், முக்கியமாக மலையாளத்தில் கிராமாந்தரங்களில் நடக்கிற காரியங்களை இந் நாடகம் விளக்கிக் காட்டுகின்றது. இவை கோரமான சடங்குகளாகும். உயர்குலத்தாரும் இச் சடங்குகளைச் செய்கிறார்கள். அப்போது இழிதன்மையும் இழிவழக்கும் மேம்பட்டு அவர்களது உயர் பண்பையும் பயிற்சியையும் தாற்காலிகமாக ஆழ்த்தி விடுகின்றது என்று சொல்ல வேண்டும். இச் சடங்குகளுக்குரிய காரியங்களை நடத்துகிறவர்கள் கல்வி கேள்வியில்லாத இழிகுலத்தவராவர். இவர்களுக்கு இதுவே தொழிலாகும். தங்களால் இவ்வாறு ஏமாற்றப் படுகிறவர்களிடமிருந்து பணம் பறிக்கும் பொருட்டு இவர்கள் அச் சடங்குக் காரியங்களைப் பிரமாதப்படுத்திப் பெருக்குகிறார்கள். இது இயல்பேயன்றோ? இத்தொழில் செய்யும் வகுப்பினரெல்லாருமே கண்கூசத்தக்க கோரமான குரூபிகள். எவ்வளவு அந்தக் கேடு செய்யக்கூடுமோ அவ்வளவு விகாரமாக இவர்கள் பூதப்பிரேத பிசாசுகளின் வடிவங்களை அமைக்கிறார்கள். சுத்தமான உயர்தன்மையும் அசுத்தமான இழிதன்மையும் ஒரே இடத்தில் கலந்திருக்கும், ஒரே மனிதனிடத்தில் பொருந்தியிருக்கும் அவை இரண்டும் எப்போதும் இணைந்திருப்பதை உலகத்தில் எங்கெங்கும் எவ்வெவரிடத்தும் காணலாம். ஆனால், இதற்கான உதாரணங்களை இந்திய கிராமாந்தரங்களில் மிகத் தெளிவாகக் காண்பதற்காகும். இந்தியாவில் கல்வி கேள்விகளிற் சிறந்த பயிற்சியுள்ளோர் தெய்வத்தைப் பற்பல அழகிய வடிவங்களாக அமைத்து ஆலயங்களிற் பிரதிஷ்டை செய்து, நறுமணமுள்ள நானாவித புஷ்பங்களினாலும் சந்தனாதி பரிமளங்களினாலும் இனிமையான கனிவர்க்கங்களினாலும் அலங்காராதிகளினா

லும் ஆராதிக்கிறார்கள். இங்ஙனம் செய்வது அவர்களு டைய மனம் உயர்நிலையை நாடிநிற்கும் போதாகும். இவ் வாராதனைச் சாதனங்களெல்லாம் குற்றமற்றனவாகவும், உயரேற்றுவனவாகவும் இருக்கின்றன. ஆனால், பயம் பிடித்து உழற்றும் போதும், பழிவாங்கும் பொல்லா நினைவு மேலிடும்போதும் அவர்கள் இழிதன்மையினரா கிறார்கள். இங்ஙனம் இழிவுற்றவர்களாய் அவர்கள் அடாத விருப்பங்களை ஈடேற்றிக்கொள்ளப் பிசாசு முதலான துர் தேவதைகளுக்கு அருவருக்கத்தக்க உயிர்ப்பலிகளிட்டு அவைகளைத் திருப்திசெய்ய முயலுகிறார்கள். அந்தத் துர் தேவதைகள் க்ஷுத்திரங்கள், அற்பமானவை, இழிதன்மை யுடையவை, மகாமந்திரங்களினால் ஆராதிக்கப்பட்ட பெருந்தன்மையுள்ள நல்ல தேவதைகளினால் அந்தத் துர் தேவதைகள் பாதாளலோகத்திற்கு அடித்து ஓட்டி அகற்றப்பெற்றுள்ளன. ஆலயங்களில் நிலைகொண்டு எழுந் தருளியுள்ள மகாதேவதைகளினாற் குறிக்கப்படும் தெய் வம் இப்படிப்பட்ட உயிர்ப்பலிகள் கொடுத்துத் துர்தேவ தைகளைத் திருப்திப்படுத்துவதற்கு ஒருபோதும் ஒப்புக் கொள்ளமாட்டாதென்று இங்ஙனம் ஆராதிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால், அவர்கள் எத்தகைத் தீச் செயலும் செய்வதற்குச் சித்தமாயிருக்கிற இரத்தப் பிரிய முள்ள பேய்களை நாடி வழிபடுகிறார்கள். தென் இந்தியா வில் அநாதிக்குடிகள் சிலர் இருந்தனர். ஆரியர்களும் திராவிடர்களும் அவர்களை வென்று ஆட்கொண்டனர். அவ்வநாதிக் குடிகளே பேய் பிசாசுகளுக்கு அடிமைத் தாற்காலிகளாகிறார்கள். இங்ஙனம் முன்னரே வெல்லப் பெற்ற அவ்வாதிக் குடிகளே அப் பிசாசுகளுக்குப் புரோ கிதர்களாகவும் க்ஷுத்திரமான அபிசாரப் பிரயோகங்கள்

செய்வதற்கேற்ற ஆட்களாகவும் இருக்கிறார்கள். இன்றைக்கும் உயர்குலத்தாரால் இகழப் படுகிறவர்கள் அவ்வனாதிக் குடிகளே. பழிக்குப்பழி வாங்கும் தன்மை செய்யும் காரியங்கள் இவ்வளவு விசித்திரமாய் இருக்கின்றன.

மலையாள தேசத்திலுள்ள நாட்டுப்புறத்துக் கிராமங்களில் குழந்தையேனும் பசுவேனும், நோய்ப்படின், துர்தேவதைக்கு நான்கு அணாவும் ஒரு கோழியும் சமர்ப்பிப்பது இன்றைக்கும் பெரும்பாலும் வழக்கமாயிருக்கின்றது. எந்தத் துர்தேவதைக்குப் பலியிட வேண்டுமென்பது பலியிடும் குடித்தனக்காரனுடைய இஷ்டத்தையும் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறவனுடைய அபிப்பிராயத்தையும் பொறுத்தது. துர்தேவதைகளோ எண்ணிறந்தவைகளிருக்கின்றன. இந்துக்களின் தேவதைகளும் பூதாதிகளும், மானிடரைப்போலவே ஏற்றத்தாழ்வுறும் தன்மையனவென்று எல்லாரும் நினைக்கிறார்கள். காலத்தையும் காரணத்தையும் தழுவி அவை உச்சமுறுவதும் நீசமடைவதும் இயல்பென்பர். ஆனால், இவைகளுக்கெல்லாம் ஆதார பூதமாய், இவைகளுக்கு ஒட்டாமல் இவைகளைக் கடந்து அப்பால் அறிவுக் கெட்டாததாய், அண்டகோடிகளை யெல்லாம் படைத்துக்காத்து அழிக்கும் தன்மையதாய் அனைத்திற்கும் ஆதாரமாய்க் கடவுள் இருக்கின்றார். அந்தக் கடவுள் ஸ்திதியாத்மிகமாகவும் கதியாத்மிகமாகவும் இருக்கின்றார். அதாவது, ஒரே நிலையிலிருப்பினும் இருப்பர், அந்நிலை குலைந்து வேகங்கொண்டு விவகரிக்கினும் விவகரிப்பர். அவர் ஸத்துமாவர், அஸத்துமாவர்; சத்திய சொரூபி; ஞான சொரூபி; ஆதியந்தமற்றவர்; சாந்த சொரூபி; ஆனந்த சொரூபி; நமக்கு உள்ளும் புறமும் எங்கும் வியாபித்துள்ளவர். ஆதலால் எப்போதும்

நம்முடனே இணைந்திருப்பவர். அவருக்கு முன்னணியில் அநேகமான தேவதைகளும் பூதங்களும் இருக்கிறார்கள். அவர்களெல்லாரும் காலத்திற்கும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கபடி மாறும் தன்மை யுடையவர்கள். புதிதுபுதிதாகத் தேவதைகள் தோன்றவே பழைய தேவதைகள் பின்னிட்டு ஒதுங்கி அவைகளுக்கு இடங் கொடுக்கின்றன. இவ்வாறு புதிய தேவதைகள் தோன்றி முதன்மை பெறுவது நெடுங் காலத்திற்கப்பால் நடக்கத் தக்க காரியமாகும். பிசாசு வகையிலொருவனின், பழமை யானவைகள் அடிக்கடி சிக்கிரத்தில் ஒழிந்து புதிய பிசாசுகளுக்கு இடந்தருகின்றன. முன்னர்ப் பிரபல்மாயிருந்த பழைய பிசாசுகளுக்கு இரண்டார்ந்தரப் பிராதான்யமும் இல்லாமற் போகின்றது. சிறிது காலத்திற்கு முன்னால் அவை மிக முக்கியமானவைகளாக விளங்கிய போதிலும் அவைகளை ஜனங்கள் மறந்துவிடுகிறார்கள். இவ்வாறு மறந்தொழிந்த பிசாசுகளுள் **தந்துகச்சன்** என்பது ஒன்று. அது முன்னர்ப் பிரபலமாக விளங்கிக் கொண்டிருந்தது. அதன் பெருமையைச் **சாணக்கியர்** என்னும் மகாபுருஷரும் கொண்டாடி இருக்கிறார். அது போலவே **குட்டிச்சாத்தன்** என்று மலையாளத்தில் வழங்கப் பெறும் பிசாசு சிறிது காலத்திற்கு முன்னரே பேயரசுப் பதவி பெற்றது. குட்டிச்சாத்தன் என்பது மேனாட்டினின்று நம்மவர் கைக்கொண்டதொரு பேய் எனத் தோன்றுகின்றது. மேனாட்டார் தேவவைரியென **ஸேட்டன்** என்னுமொரு பேயைக் கற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த ஸேட்டன் என்னும் பேயையே நம்மவர்கள் **சாத்தன்** என்றும் சாத்தான் என்றும் **ஷைத்தான்** என்றும் வழங்குகிறார்கள் போலும். அது மேனாட்டினின்று கைக்கொள்ளப்பட்ட பிசாசாயிருப்பினும், இந்நாட்டிற்

பழகி இந்தியப் பாங்கு வாய்ந்து இந்தியாவுக்கே உரிய அடைமொழிகளினால் வருணிக்கப்படுகின்றது. சாத்தன் என்பதற்குக் குட்டி என்னும் செல்லப்பெயரைச் சேர்த்துச் சொல்வதனாலேயே அது மலையாளத்துச் சூனிய மந்திர வாதிகளுக்கு எவ்வளவு பிரியமானதென்று தெரிகின்றது. இந் நாடகத்திற் குறிக்கப்பட்ட மற்றப் பிசாசுகளெல்லாம் குட்டிச் சாத்தனுடைய பரிவாரங்களே யாகும். ஆனால், அவையெல்லாம் முன்னொரு காலத்தில் தனித் தனியே பிரபலமுற்று விளங்கினவைகளே.

இந் நாடகத்தில் வருணிக்கப்பட்டுள்ள கோரமான பேய்ச் சடங்குகள் நல் வேலையாக இந் நாளிற் கல்வி வளர்ச்சியால் மிக அரிதாயின. கௌரவமும் சீலமும் வாய்ந்த குடும்பத்தவர்கள் இப்படிப்பட்ட சடங்குகள் செய்யலாகாதென்று எப்பொழுதுமே தடுத்துரைத்துக் கொண்டிருக்கிறார்கள். இச் சடங்குகளைச் செய்ய மேன் மக்களே துணிந்த போதிலும் அவைகளை உயர்குலத்தவர்கள் ஆக்ஷேபித்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். இந் நாளில் இச் சடங்குகளை நம்மவர்கள் மிகப் பலமாக ஆக்ஷேபித்து எதிர்த்துத் தடுக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இனி இவை சீக்கிர காலத்திலே ஒழிந்து போகும்.

இந் நாடகத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு "சுவதேச மித்திரன்" வாரப்பத்திரிகையில் தொடர்ச்சியாக முதன் முதல் வெளிவந்தது. அம்மொழி பெயர்ப்பைப் புத்தக வடிவமாக வெளிபிடுவதற்குத் தமக்குள்ள உரிமையைத் துறந்து அவர்கள் இப்போது அதை திருந்திய முறையிற் புத்தகமாக நான் வெளியிடுவதற்கு அனுமதி அளித்த தற்கு நான் அவர்களுக்கு நன்றி பாராட்டுகின்றேன்.

ஏ. எஸ். பி. ஐயர்.

பேய்ப்பித்து

அங்கம் - 1.

களம் - 1.

[பெருங்குளம் என்னும் கிராமத்தில் ரகுராமன் என்பவனது வீட்டில் ஓர் அறை. ரகுராமனது மனைவி மீனாக்ஷி என்பவளுக்கு வயது 30. அவள் வாடின முகமும் வெறித்த பார்வையும் உடையவளாய், கடையிலிருந்து வாங்கிவந்த துவரம்பருப்பைத் தாற்றிப் புடைத்துக்கொண்டிருக்கிறாள். அப்போது அவள் 50 வயதுள்ள விதவையாகிய லக்ஷ்மி என்பவளுடன் பேசிக்கொண் டிருக்கிறாள். காலம் — நடுப்பகல்.]

மீனாக்ஷி — வாழ்க்கையில் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி வருமென்று யார் சொன்னார்? எனக்குத் துக்கங்களே தொடர்ச்சியாக மேலும் மேலும் வந்துகொண் டிருக்கின்றன. ஜானகிக்கோ, வாழ்நாள் முழுதும் பலவகைச் சந்தோஷங்களே நிரம்பியிருக்கின்றன. அவளுடைய கணவன் பிரபல

மான பள்ளிக்கூடத்து வாத்தியார்; மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 சம்பளம் வாங்குகிறான். அவளுக்கு நேர்த்தியான வீடொன்று சொந்தமாக இருக்கின்றது. என் கணவனோ ஒருபோதும் வளமை வாய்ந்திருக்கவில்லை; தரித்திரம் பிடித்த ஸ்டாம்ப் வெண்டர் வேலையும் சில நாளைக்கு முன்னால் போய்விட்டது. இழி நாயான அந்த பேராசை பிடித்த Post master அந்த வேலையைத்தானே கவர்ந்து கொண்டான். இந்த வீடும் ஜானகியின் கணவன் மிக்க அருவருப்போடு தயாளங்காட்டி எங்களுக்குக் கொடுத்திருக்கிறான். அவளுடைய குழந்தைகளெல்லாரும் உயிரோடு க்ஷேமமா யிருக்கிறார்கள். எனது கண்மணி போன்ற குமாரர்களான சிவம் என்பவனும் செல்லப்பன் என்பவனும் வளர்பிறைபோல் 6 வயது வரையில் வளர்ந்தார்கள். அப்பொழுது திடீரென்று விபரீதமான கண்ணோவொன்று கண்டு இறந்து போனார்கள். (அழுகிறாள்).

லக்ஷ்மி — அழாதே. போனது போயிற்று. ஜன்னற் கதவை ஏன் நன்றாகத் திறவாதிருக்கிறாய்? இந்த இருட்டில் பருப்பிலுள்ள கற்களை எப்படி பொறுக்குவாய்?

மீனாக்ஷி — இப்போது என் அருமைச் செல்லப்பன் அந்த மூலையில் படுத்துக்கொண் டிருப்பதாக என் மனக் கண்ணுக்குத் தோன்றுகிறது. வெளிச்சம் அதிகமானால் அது தோன்றாது.

லக்ஷ்மி — என் அன்பே! இறந்தவர்களை நினைந்து நீ இவ்வளவு வருந்தி வாடுவாயானால் நீ சீக்கிரத்தில் இறந்துபோவாய்.

மீனாக்ஷி — நான் வேண்டுவது அதுவே. பக்ஷிகள் பறந்து போனபின் கூட்டை ஏன் வைத்திருக்க வேண்டும்?

லக்ஷ்மி — ஆனால், உன் கணவன் இருக்கிறானே அவனை நீ கவனிக்கவேண்டுமே.

மீனாக்ஷி — அவரும் துக்கத்தில் ஆழ்ந்து வருந்திக்கொண்டிருக்கிறார். அவர் இல்லாவிடின், நெடு நாளைக்கு முன்னரே நான் தற்கொலை புரிந்துகொண்டிருப்பேன்.

லக்ஷ்மி — தற்கொலை என்னும் பேச்சே பேசாதே. 22-ம் வயதில் கணவனை இழந்தேன். மிக அருமையாகவும் அன்பாகவும் நான் வளர்த்த பிள்ளைகளிருவரும் என்னைக் கைவிட்டார்கள். கடந்த 15 வருஷகாலமாக வெறுக்கத் தக்க வறுமையில் உழன்றுகொண்டிருக்கிறேன். பிச்சை எடுத்து வயிறு வளர்க்கிறேன். இப்படியிருந்தும் தற்கொலை செய்துகொள்ள நான் நினைக்கவே இல்லை. ஏனென்னையோ தீர்க்கமாகக் காத்திருந்தால் ஒருவருக்கு நல்ல காலம் நிச்சயமாகத் திரும்புமென்று நான் திடமாக நம்புகிறேன்.

மீனாக்ஷி — அதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை.

லக்ஷ்மி — உலகத்தில் எத்தனையோ நீ பார்த்திருக்கிறாய். எனக்குள்ள அனுபவம் உனக்கு வருகிற வரையில் பொருத்திரு. அப்போது, நான் சொல்வது சரியென்று ஒப்புக்கொள்வாய்.

மீனாக்ஷி — லக்ஷ்மி! என் மக்கள் இறந்துபோனதற்கான இரகசிய காரணம் இன்னதென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு ஆலோசனையிலாழ்ந்து நான் தலையை உடைத்துக் கொள்கிறேன். அதற்கெல்லாம் மூலகாரணமொன்று இருக்கவேண்டும்.

லக்ஷ்மி — சத்துருவானவர் எவரோ சூனியம் வைத்து அந்தப் பிள்ளைகளைக் கொன்றிருக்கக் கூடுமென்று நினைக்கிறேன்.

மீனாக்ஷி — அப்படியே இருக்கலாம், அப்படியே இருக்கலாம். இப்படி ஒளிந்து வேலை செய்யும் பகைவர் யாரென்று எவரேனும் கண்டு பிடித்துச் சொல்வார்களா ?

லக்ஷ்மி — சொல்லக்கூடும். சோதிட சாஸ்திரி சொல்வான். ஆனால், அவன் **சாமி பணிக்கரைப்** போன்ற கெட்டிக்காரனா யிருக்கவேண்டும்.

மீனாக்ஷி — அவர் சொல்வரா ? முன்னால் எனக்குத் தெரியாமற் போயிற்றே. நீ ஏன் எனக்குச் சொல்லவில்லை ?

லக்ஷ்மி — நீ கேட்கவில்லை, நான் சொல்லவும் இல்லை.

மீனாக்ஷி — ஜானகி சூனியம் வைத்திருப்பாளென்று உனக்குத் தோன்றுகிறதா? தன் குழந்தைகளைக் காட்டிலும் என் குழந்தைகள் மிகச் செழுமையாய் இருக்கிறார்களென்று அவள் ஒரு நாள் சொல்லிக் கொண்டிருந்தாள். ஓ! அப்போது அவளுடைய குரலில் பொறாமை ததும்பியது.

லக்ஷ்மி — என் அன்பே! இப்பொழுது நான் ஒன்றும் சொல்லமுடியாது. சோதிட சாஸ்திரியைக் கலந்துபேசுகிற வரையில் நிதானி.

மீனாக்ஷி — அவரை எப்போது காண்பதற்காகும்?

லக்ஷ்மி — அதற்கென்ன! நாளைக்கே வேண்டுமானாலும் பார்க்கலாம். ஆனால், அவர் அதிகப் பணம் கேட்பரே.

மீனாக்ஷி — எவ்வளவு கேட்பார்?

லக்ஷ்மி — ஐந்து ரூபாய்க்குக் குறையாது.

மீனாக்ஷி — இந்த உளவு சொல்வதற்கு அது ஒரு அதிகமாகாது. நாளைக் காலையில் 7 மணிக்கு இங்கே வரும்படி சாமிபணிக்கருக்குச் சொல்லிவை.

லக்ஷ்மி—அப்படியே ஆகட்டும்.

(லக்ஷ்மி போகிறாள்.)

திரை.

களம் - 2.

[அதே தினம் மாலை 4 மணி நேரம். ஒரு கூரைக் குடிசை. தாழ்வாரத்தில் சாமிப் பணிக்கர் ஒரு பாய் மீது உட்கார்ந்திருக்கிறார். அவனது மனைவி குஞ்சி என்பவள் அருகில் நிற்கிறாள்].

குஞ்சி — நாதா, ராத்திரி என்ன சமைக்கட்டும்? பதார்த்தம் ஒன்றும் இல்லையே.

சாமி — பையிலும் பணமில்லை. ஏதேனும் வேலை கிடைக்கிற வரையில் புழுங்கலரிசிக் கஞ்சி குடிப்போம். நீ போய் ஒரு படி அரிசி கடன் வாங்கிக் கொண்டு வந்து கஞ்சி காய்ச்சு.

குஞ்சி — கறி என்ன சமைக்கட்டும்?

சாமி — கொல்லையிலிருந்து பசளைக் கீரை பிடுங்கி நன்றாக மசித்துவிடு.

குஞ்சி — ஐயோ! இன்று காலையில் வெள்ளாடு ஒன்று வந்து, நம் பெண் குழந்தை ஓட்டு முன், கீரையை எல்லாம் தின்று விட்டது.

சாமி — என்ன கொடிய துரதிருஷ்டம். அவ் வாட்டை அப்படியே தின்றுவிடலாம் போலக் கோபம் எழுகின்றது.

குஞ்சி — 'நமக்கு அப்படித்தான் 'தோன்றுகிறது. ஆனால், அது அடுத்த வீட்டு ஸௌகாருடையது. அவன் உடனே நம்மை ஜெயிலுக்கு அனுப்பி விடுவான்.

சாமி — அவன் ஏன் தன் ஆட்டை நமது பசளைக் கீரையை மேய விட்டான்?

குஞ்சி — நம்முடைய பெண் அதைப்பற்றி அவனிடம் போய்க் குறை கூறியதற்குஅவன் கச்சேரிக்குப் போய் பிராதுசெய்து கொள்ளும்படி சொன்ஞன். அன்றியும், இந்த மாதிரி விபத்து நேரிடுமென்று முன்னுலேயே நீங்கள் தெரிந்துகொள்ள முடியவில்லையே யென்று ஏசினன்.

சாமி — அவன் நாசமாய்ப் போக! வக்கீல்களும் சட்ட நியாயங்களும் மலிந்துள்ள இந்நாளில் பணக்காரர்கள் அதிக இறுமாப்புற்றிருப்பது அதிசயமாயிருக்கின்றது.

குஞ்சி — பணக்காரர் எப்போது துடுக்கில்லாமல் இருந்திருக்கிருர்கள்?

சாமி — ஆம். உலகத்தில் எளியாரை வலியாரும் பணக்காரரும் எப்பொழுதுமே வெருட்டி வறுத்திக் கொண்டே இருந்திருக்கிருர்கள்.

குஞ்சி — நமக்கு ஐஸ்வரியம் வந்தால் நாமும் அதிகப் பிரசங்கிகளாவோம்.

சாமி — அது ஒரு போதும் நேராது. நமக்கு சம்பத்தும் வராது துஷ்ட புத்தியும் வராது.

குஞ்சி — இங்கே யார் வந்து கொண்டிருக்கிருர்? அது லக்ஷ்மியல்லவோ? அவள் என்ன காரியமாக வரக் கூடும்?

சாமி — எனக்குத் தெரிந்த வரையில், ஏதாவது பணம் வேண்டுமென்று கேட்க வருவாள், அல்லது, காய் கறி ஏதாவது வேண்டுமென்று கேட்பாள்.

குஞ்சி — அவள் ஏழை விதவை. அவளை ஏன் ஏளனம் செய்கின்றீர் ?

சாமி — அவளை நான் இகழ்ந்து பேசவில்லையே. உள்ளதைத்தான் சொன்னேன்.

குஞ்சி — நல்லது இனி பேசாதிருங்கள். அவள் நம் வாசலண்டை வந்து விட்டாள். நான் போய் அவளை எதிர் கொள்கிறேன். (வாசலுக்குப் போகிருள்) என்ன, லக்ஷ்மி ! நீ எப்படி இருக்கிருய் ?

லக்ஷ்மி — சாமிப்பணிக்கரண்டை ஒரு காரிய மாகப் பேச வந்தேன்.

குஞ்சி — (ஒரு புறமாக) இவளோ ஏழை, கோவி லில் ஒளிந்து ஓடும் சுண்டெலியைப் போன்றவள். இவளோடு பேசுவதனல் என் கணவனுக்கு என்ன லாபம் கிடைக்கும் ? (உரக்க) அம்மா ! என் கணவர் பணமில்லாமல் எவருக்கும் ஜோசியம் பார்த்துச் சொல்வதில்லையென்று உனக்குத் தெரியாது போலும்.

லக்ஷ்மி — அது எனக்கு நன்ருகத் தெரியும். என் காரியத்திற்காக நான் வரவில்லை. ஆனல் — — —

குஞ்சி — உள்ளே வா, உள்ளே வா ; வாசலில் ஏன் நிற்கிருய் ? (சாமியும் எழுந்து கதவண்டை வேகமாகப் போகிருன்).

சாமி — வா, அம்மா! எங்கள் ஏழைக் குடிசைக்குள் வா. நாங்கள் உன்னைப் பார்த்து வெகு நாளாயிற்று.

லக்ஷ்மி — ஜோசியரே! நாளைக் காலை 7 மணிக்கு நீங்கள் பெருங் குளத்திற்கு வரவேண்டும்.

சாமி — 10 ரூபாய்க்குக் குறைவாக நான் வாங்குவதில்லை யென்று உனக்குத் தெரியுமல்லவா?

லக்ஷ்மி — உமக்கு நான் 4 ரூபாய் கொடுக்கிறேன். அதற்கு அதிகம் கொடுக்க முடியாது. ஜோசியம் கேட்கப் போகிறவள் 5 ரூபாய் கொடுப்பாள் அதில் நீர் எனக்கு ஒரு ரூபாய் கொடுத்து விடவேண்டும்.

சாமி — 5 ரூபாய்க்கு எவன் வருவான்? சாமிப் பணிக்கர் வரமாட்டார் ஒரு நாளும்.

லக்ஷ்மி — நல்லது, நான் வேறு ஜோசியரைப் பார்க்கிறேன். (திரும்பிப் போவதற்கு லக்ஷ்மி எழுந்திருக்கிருள்).

குஞ்சி — அம்மா, உட்கார். என் கணவர் 5 ரூபாய்க்கு வருவார். ஆனல் உனக்கு வட்டம் கொடுக்கமாட்டார்.

லக்ஷ்மி — வட்டம் கொடுக்காவிட்டால் வேலை வராது. பலதானம் இல்லாத ஊர் பாழ்.

சாமி — நல்லது, அம்மா! உன் சிரமத்திற்காக 4 அணு வாங்கிக்கொள், அதோடு திருப்தியடை.

லக்ஷ்மி — ஒரு ரூபாய்க்குக் குறைந்து நான் ஏற்க மாட்டேன், உண்மையில் நான் 2 ரூபாய் கேட்டிருக்க வேண்டும்.

சாமி — போனுற் போகிறது, உனக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறேன். ஜோசியங் கேட்க விரும்புகிற உன் தோழி யார்?

லக்ஷ்மி — ரகுராமனது மனைவி மீனுக்ஷியே.

குஞ்சி — சில நாளைக்கு முன்னுல் இரண்டு குழந்தைகள் இறந்து போயினவே, அவள் தானு?

லக்ஷ்மி — அவள் தான்.

சாமி — எதைப்பற்றி அவள் என்னை ஜோசியங் கேட்கப் போகிருள்?

லக்ஷ்மி — அவளுடைய குழந்தைகள் மாயமாக இறந்து போனதற்கான இரகசிய காரணம் என்னவென்று தெரிய விரும்புகிருள்.

சாமி — அவள் அனுமானப்படுகிற காரணம் எது?

லக்ஷ்மி — ஓரகத்தியாகிய ஜானகி சூனியம் வைத்து அந்தக் குழந்தைகளைக் கொன்றிருக்கக் கூடுமோவென்று அனுமானிக்கிருள்.

சாமி — அப்படியா! நாளைக் காலையில் நான் 7 மணிக்கு ரகுராமன் வீட்டிற்கு வருகிறேனென்று நீ போய் அவர்களுக்குச் சொல். (லக்ஷ்மி போகிருள்.)

குஞ்சி — (சாமியைப் பார்த்து) நாதரே, சாவுக்கு இரகசிய காரணம் என்ன? தலை விதியும் தெய்வமும். வேறு என்ன காரணம் உண்டு?

சாமி — நீ சொல்வது நிஜம்தான். ஆனால், இந்த மூட பக்திக்காரர்கள் அந்தக் காரணங்களினால் திருப்தியடைய மாட்டார்கள்.

குஞ்சி — ஜானகியும் கோபாலனுமே அந்தச் சாவுகளுக்குக் காரணமென்று நீங்கள் சொல்லப் போகிறதில்லையே.

சாமி — நான் அப்படித்தான் சொல்லவேண்டும்.

குஞ்சி — ஆனால், நிரபராதிகளான அவர்கள் மீது அநியாயமான அனுமானங்கள் உண்டாக்குவது கொடிய பாபமாகுமே.

சாமி — அதற்கென்ன செய்கிறது? வேறு வழியில்லை. அது இருக்கட்டும்; நான் சொல்லாமலே அவர்களுக்கு அந்த அனுமானம் ஏற்பட்டிருக்கிறதே.

குஞ்சி — ஆனாலும், அநியாயமான அனுமானங்களை நாம் உறுதிப்படுத்தலாகாது.

சாமி — என் கண்ணே, நீதிக்கும் நிதிக்கும் வெகுதூரம். நியாயமாக நடந்தால் ஆதாயம் வராது. ஆகாத்தியக்காரனுக்குத் தான் ஐஸ்வரியம் வரும். நாம் ஜீவிக்கவேண்டும். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்றால் சரிப்படாது. நியாயமாக நடந்தால் பணம் வராது. நாம் வாழ முடியாது. குழந்தை

களும் நாமும் பட்டினி கிடந்து சாவோமா, அல்லது, சங்கைகளை ஒழித்து நீ மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுகிறாயா? இரண்டிலொன்று செய்ய நீ உடன்பட வேண்டும்.

குஞ்சி — உங்கள் இஷ்டம்போலச் செய்யுங்கள்.

சாமி — அப்படியானால் சரி, நான் சொல்லியது போலவே செய்வேன். வா, உள்ளே போவோம். நாளைச் சோற்றுக்கு வழி இருக்கிறது.

திரை.

களம் - 3.

[மறு நாள் காலை 7 மணி நேரம், ரகுராமனது வீட்டுக்கு வெளியே, மீனாக்ஷியும் லக்ஷ்மியும் நிற்கிறார்கள்].

மீனாக்ஷி — ஜோசியர் ஏன் இன்னும் வரவில்லை? என் கணவர் மிக ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

லக்ஷ்மி — அவர் நிச்சயமாகச் சீக்கிரம் வந்துவிடுவார். அவர் எப்போதும் தாம் சொல்லிய வாக்கைக் காப்பாற்றிக் கொள்கிறவர்.

மீனாக்ஷி — அதோ, யாரோ இந்த வழி வந்து கொண்டிருக்கிறாரே, அவர்தான் ஜோசியரோ?

லக்ஷ்மி — ஆம், அவர்தான்.

மீனாக்ஷி — என் கணவருக்குப் போய்ச் சொல்ல வேண்டும் (கூப்பிடுகிறாள்) ஜோசியர் வந்துகொண்டிருக்கிறார்.

ரகுராம் (உள்ளிருந்தபடியே) அவர் எங்கே? (எழுந்து தெருவுக்குப் போகிறார், மீனாக்ஷி பின் தங்குகிறாள், லக்ஷ்மி தன் வீட்டிற்குப் போகிறாள்.)

ரகுராமன் — ஆமாம், இது சாமிப்பணிக்கர் தான். (சாமியைப் பார்த்து) என்ன, க்ஷேமமா?

சாமி — எல்லாம் க்ஷேமந்தான், குறைவொன்று மில்லை. நீர் எப்படி இருக்கிறீர்?

ரகுராமன் — என் குழந்தைகளிருவரும் இறந்து போனபின் என்னிலைமை என்னவாயிருக்குமென்று உங்களுக்குத் தெரியாதா?

சாமி — (ஒரு புறமாக) எப்போதும் அந்தக் குழந்தைகள் சங்கதியே. இந்த புருஷன் பெண்சாதி இருவருக்கும் பித்துப் பிடித்திருக்கிறது. (உரக்க) ஆமாம், அது எனக்கு ஞாபகமில்லை.

ரகுராமன் — நீங்கள் அதை எளிதில் மறக்கலாம். ஆனால், நான் மறக்க முடியுமா?

சாமி — நீர் ஏதோ ஜோசியம் கேட்க விரும்புவதாக லக்ஷ்மி எனக்குச் சொன்னாள்.

ரகுராமன் — அவ்விரண்டு சாவுகளுக்கும் உள்ள இரகசியமான காரணத்தை நீங்கள் கண்டு சொல்ல வேண்டும்.

சாமி — தாழ்வாரத்தில் உட்காரட்டுமா?

ரகுராமன் — சரி, உட்காருங்கள். இதோ என் ஜாதகக் குறிப்பு.

(அதைக் கொடுக்கிறான். தாழ்வாரத்தில் உட்கார்ந்து சாமி மிகக் கணக்கிடுபவன் போல ஆலோசனை செய்து தன் சோகிகளை ஜோசிய முறைப்படிப் பரப்புகிறான்).

சாமி — (ஆழ்ந்து ஆலோசிக்கும் தோற்றங் காட்டி) சனி உச்சமாயிருக்கிறான், குரு நீசமாய் மறைந்திருக்கிறார், குஜனிருக்கும் ஸ்தானம் திருப்திகரமாக இல்லை. (மீனாக்ஷியும் வெளியே வந்து, உட்புறம் போகும் வாசற் கதவினண்டை நிற்கிறாள்).

மீனாக்ஷி — என்ன, சனி உச்சமாயிருக்கிறான் என்று சொல்கிறீரா, அதுதானா? சனிப் பீடைதான் அதிகமென்று என் வீட்டுக்காரருக்கு நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன்.

ரகுராமன் — ஜோசியரே! எத்தனை நாளாகச் சனி உச்சத்தில் இருக்கிறது?

சாமி — கடந்த 18 மாதங்களாக.

மீனாக்ஷி — நமது எளிய சிவம் நோய்ப்பட்ட தினம் முதல்.

சாமி — ஆம். உங்களுக்குத் தெரியாத சத்துருக்களிரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்கள் கடும் பகை கொண்டவர். அவர்களுடைய அபிசார மந்திரப் பிரயோகத்தினால் குருவின் பலத்தை ஒழித்துச் சனி மேம்பட்டு ஆதிக்கியம் பெறலானான்.

ரகுராமனும் மீனாக்ஷியும் — (இருவருமாக) ஹா !! அந்தத் துரோகிகள் யார் ?

சாமி — பற்களே நாவைக் கடிக்கின்றன.

ரகுராமன் — அதற்கென்ன அர்த்தம் ?

சாமி—உமக்குத் துணை செய்யவேண்டியவர்களே உமக்குத் தீமை விளைக்கிறார்கள்.

ரகுராமனும் மீனாக்ஷியும் — (இருவருமாக) அவர்கள் யார் ? உடனே பெயரைச் சொல்லும்.

சாமி — பெயர் சொல்லமாட்டேன். அவர்கள் மிக்க செல்வாக்குடையவர்கள்.

ரகுராமன் — இருந்தா லென்ன ? அவர்களின் பெயரைச் சொல்லு.

சாமி — என்மீது கோபப்படமாட்டீரே ?

ரகுராமன் — மாட்டேன். உண்மையை உரைப்பதனால் உன்மீது எங்களுக்கென்ன மனஸ்தாபம் ?

சாமி — அப்படியானால் நல்லது. பெயர்களைச் சொல்லுகிறேன். ஆனால், வெளிவிடாதேயும். இந்தக் கொடிய அபிசாரப் பிரயோகம் செய்தவர்கள், உங்கள் குழந்தைகளின் மரணத்திற்கு இரகசிய காரணமாயிருந்தவர்கள் உன் அண்ணன் கோபாலனும், அண்ணி ஜானகியுமே.

மீனாக்ஷி — நான் நினைத்தபடியே ஆயிற்றே. ஜானகியைக் கடவுள் சபித்து அவளுடைய குழந்தைகளை யெல்லாம் அழிப்பாராக !

சாமி — அம்மா! அப்படிச் சபிக்காதே.

மீனாக்ஷி — சபிப்பேன். என் மனம் கொதிக்கிறது. ஜோசியரே. எந்தப் பேயைக்கொண்டு எங்கள் குழந்தைகளைக் கொன்றார்கள்?

சாமி — பெரும் பேயாகிய குட்டிச்சாத்தானையும் அவனுடைய கையாட்களாகிய சங்கிலி கருப்பன், மாடன், காட்டேரி என்பவர்களைக் கொண்டே. அவர்களுக்கெல்லாம் இரத்தபலி கொடுத்து அவர்களை வசப்படுத்திக் கொண்டார்கள். உன் வீட்டிற் பற் பல இடங்களிற் செப்புத் தகடுகளைப் புதைத்திருக்கிறார்கள்.

மீனாக்ஷியும் ரகுராமனும் — எங்கே?

சாமி — சூனிய மந்திரவாதிகள் அதைக் கண்டு சொல்வார்கள். அவர்கள் அந்தத் தகடுகளை எடுத்தெறிந்துவிட்டு அவற்றைக் காட்டிலும் பலமான பிரயோகங்களை உங்கள் பகைவர்களின்மீது ஏவுவார்கள்.

ரகுராமனும் மீனாக்ஷியும் — (இருவரும்) உமக்குத் தெரிந்த சூனிய மந்திரவாதிகளில் எவரை நாம் கேட்கலாம்?

சாமி — நாகன், கேளு, சாத்தன், கருப்பன் என்பவர்களை இதற்கு ஏற்படுத்தலாம்.

ரகுராமன்—அவர்களுள் எவன் கெட்டிக்காரன்?

சாமி — அவர்கள் நாலு பேரையுமே நியமிக்க வேண்டியதாகும். நாகன் என்பவனே அவர்களுக்குத் தலைமையாயிருந்து காரியத்தை நடத்துவான்.

ரகுராமன் — அந்தச் சடங்கு செய்து முடிப்பதற்கு என்ன செலவு பிடிக்கும்?

சாமி — நான் சொல்லமுடியாது. நாகனைக் கேட்கவேண்டும். அவன் வீடு உனக்குத் தெரியுமல்லவா?

ரகுராமன் — தெரியும்.

சாமி — நல்லது. இனி நான் போய்வருகிறேன். எனக்குக் கொடுக்கவேண்டிய 5 ரூபாயைக் கொடும்.

ரகுராமன் — ஜோசியரே, 4 ரூபாய் வாங்கிக் கொண்டு திருப்தியடையும்.

சாமி — அது முடியாது.

ரகுராமன் — 4½ ரூபாய் கொடுக்கிறேன். ஏற்றுக் கொள்ளும். நாங்கள் ஏழை.

சாமி — நல்லது, அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இதில் லக்ஷ்மி ஒன்றும் கேளாதிருக்க வேண்டும்.

மீனாக்ஷி — அவள் ஏதாவது உம்மைக் கேட்டதுண்டோ?

சாமி — அம்மா, நான் வாயைத் திறக்கக்கூடாது.

மீனாக்ஷி — நான் போய் லக்ஷ்மியை அழைத்து வருகிறேன். (வெளியே போய் லக்ஷ்மியுடன் திரும்பி வருகிறாள்).

லக்ஷ்மி — ஜோசியரே! உம்முடைய சம்பளத்தில் எனக்கேதாவது கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டேனா?

சாமி — அம்மா! இந்தப் பணத்தி லிருந்து உனக்கு நான் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை யென்று சொல்.

மீனாக்ஷி — (லக்ஷ்மியைப் பார்த்து) நீ உரைப்பது உண்மையானால் அப்படிச் சொல்.

லக்ஷ்மி—(சாமியைப் பார்த்து) உம்முடைய சோதிடக் கூலியில் எனக்கு ஒரு தம்பிடியும் வேண்டவே வேண்டாம்.

சாமி — இப்பொழுது நான் அந்த 4½ ரூபாயை ஏற்றுக்கொள்கிறேன்.

ரகுராமன் — இந்தாரும், இதைப் பெற்றுக் கொள்ளும். (கொடுக்கிறான்).

சாமி—(இடுப்பு வேஷ்டியின் தலைப்பில் அந்தப் பணத்தை முடிந்துகொண்டு) எல்லாருக்கும் போய் வருகிறேன். (என்கிறான்). (போகிறான்).

மீனாக்ஷி — இனி, நாம் மேற்காரியத்தைப் பார்க்க வேண்டும்.

லக்ஷ்மி — என்ன காரியம்?

மீனாக்ஷி — நாகன், கேளு, சாத்தன், கருப்பன் என்னும் மந்திரவாதிகளை வரவழைக்க வேண்டும்.

லக்ஷ்மி — நான் போய் அவர்களை அழைத்து வரட்டுமா ?

மீனாக்ஷி — வேண்டாம், என் எஜமானரே போய் அழைத்து வருவார்.

லக்ஷ்மி — அப்படியானால், நான் போய் வருகிறேன்.

மீனாக்ஷி — நல்லது. போய் வா. (லக்ஷ்மி போகிறாள்)

மீனாக்ஷி—(கணவனை நோக்கி) எஜமானரே! உடனே நாகனிடம் போய் அந்தச் சடங்குக்கு ஆகவேண்டிய தென்ன, என்ன செலவு பிடிக்கும், என்று முதலான விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு வாருங்கள்.

ரகுராமன் — போய் வருகிறேன். (போகிறான்).

மீனாக்ஷி — (தனக்குத்தானே) அப்பாடா! 18 மாதங் கழித்தாவது மனதுக்குக் கொஞ்சம் ஆறுதல் கிடைத்தது. நான் நினைக்கிறபடி எல்லாம் நடைபெறுமானால், நான் பழிக்குப்பழி வாங்கிவிடுவேன். பழிக்குப்பழி வாங்குவதும் சாமானியமாய் இராது. மிகப் பிரமாதமாகவே இருக்கும். (கதவை சாத்திக் கொண்டு உள்ளே போகிறாள்).

திரை.

களம் - 4.

[*அதே தினம் நடுப்பகலில். தனித்துக் கிடந்த தொரு குளத்தினண்டை தரிசுத் தரையில். ரகுராமன் அங்கே நடந்து போகிறான்*].

ரகுராமன் — (*தனக்குத்தானே*) பேய் குடிகொண்ட இந்த வெட்டவெளிக்குச் சாதாரணமாக எவரும் வரத் துணியார். சதுப்பு நிலத்திற் கொசுகுகள் மொய்ப்பதுபோல இங்கே பிசாசுகள் நிரம்பியிருக் கின்றன என்பார்கள். இருந்தா லென்ன, எனக் கென்ன பயம். இது பட்டம் பகல். இந்த வேளையில் பேய் பிசாசுகள் வெளிவந்து நடமாடமாட்டா. ஆனால், இந்தக் குளத்துக்குள்ளிருந்து சில பேய்கள் 17½ நாழிகைக்குமேல் 20 நாழிகைக்குள் வெளிவரல் கூடும். அதற்குள்ளாக நான் வீடு போய்ச் சேர்ந் திருப்பேன். ஹா! இதோ நான்கு குடிசைகள் இருக்கின்றன. இவைகளைச் சூழ்ந்து மந்திரதந்திரத் திற்குரிய முட்களும் மூலிகைகளும் நிரம்பியிருக்கின் றன. இந்த அபாயகரமான ஆவரணத்திற்குள் நான் தனியே போகமாட்டேன். நாகனைக் கூப்பிடு கிறேன். "நாகா! நாகா!" என்று விளிக்கிறான். குடிசையினின்றும் நாகன் வெளியே வருகிறான்.

நாகன் — யார் அது, என்னைக் கூப்பிடுகிறது.

ரகுராமன் — நான்தான், ரகுராமன்.

நாகன் — சாமி, தண்டம்! உங்களுக்கு என்ன ஆக வேண்டும்?

ரகுராமன் — என் தமையனும் அண்ணியுமாகச் சேர்ந்து சில கோரமான அபிசாரப் பிரயோகங்கள் செய்திருக்கிறார்கள். அதனால் என் மக்கள் மரித்தனர். அதற்குப் பிரதிமந்திரம் நீ என் வீட்டுக்கு வந்து செய்யவேண்டும்.

நாகன் — (தனக்குத்தானே) சாமிப் பணிக்கர் வந்து சொல்லிவிட்டுப் போன சங்கதி இதுவாகத்தான் இருக்க வேண்டும். ஜோசியரும் மந்திரவாதிகளும் ஒன்றுபட்டுக் கலந்து தொழில் நடத்தினால் பெரிய நல்ல பயன் விளைகிறது. (உரக்க) அது உமக்கு எப்படித் தெரியும்?

ரகுராமன் — சாமிப்பணிக்கர் மூலமாகத் தெரிந்து கொண்டேன்.

நாகன் — (ஒரு புறமாக) லக்ஷ்மி என்னும் அந்த உத்தமி சொல்ல அவன் தெரிந்துகொண்டான். (உரக்க) சாமிப் பணிக்கர் என்பவர் கைதேர்ந்த ஜோசியர். ஆனால், அவரானாலும் உங்கள் வீட்டில் எந்தெந்த இடத்தில் செப்புத் தகடுகள் புதைத்திருக்கிறார்களென்று சொல்வதற்காயிற்று?

ரகுராமன் — அவர் அது சொல்லவில்லை. அவ்விடங்களை நீ குறிப்பிடக் கூடுமென்று சொன்னார்.

நாகன் — அது சரியே. நான் கண்டுபிடிப்பேன். பேய்த் தலைவனாகிய குட்டிச்சாத்தான் நான் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்பான். செப்புத் தகடுகள் எங்கெங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன

வென்று அவன் உடனே எனக்குக் காட்டிக் கொடுப்பான்.

ரகுராமன் — பேயரசாகிய குட்டிச்சாத்தானை நீ எப்படி வசப்படுத்தினுய்?

நாகன் — ஹா! அது ஒரு நாளில் ஆகிறகாரியமா? 35 வருஷ காலம் உழைத்து அனுபவப்பட்டு நான் இந்த நிலைமை அடைந்திருக்கிறேன். குட்டிச் சாத்தான் என்னும் பேய் மிகப் பொல்லாதது, குரூர சித்தமுடையது. நாணுவிதமான பலிகள் கொடுத்துப் பிரார்த்தனைகள் செய்து அதைத் திருப்திப்படுத்த வேண்டும். எருமை இரத்தம் வேண்டுமென்று ஒரு சமயம் கேட்கும், சிறிய ஆட்டுக்குட்டி வேண்டுமென்று மற்றொரு சமயங் கேட்கும். அது உன் கண்ணுக்குப் படுமுன் நள்ளிரவில் ஜன நடமாட்ட மில்லாத நதியில் இடுப்பு மட்டும் ஜலத்தில் நேடுநேரம் காத்திருக்கச் செய்யும். நடுநிசியில் சிறு குழந்தைகளின் எலும்பு மாலையணிந்து நீ சுடுகாட்டில் கூத்தாடுகிற வரையில் உன் கண்ணுக்குப் புலப்படாமல் ஏய்க்கும். அது இருக்கட்டும். நம் காரியத்தைக் கவனிப்போம். உங்கள் வீட்டுக்கு நாங்கள் எப்பொழுது வரவேண்டுமென்கிறீர்?

ரகுராமன் — கேளுவும், சாத்தனும், கறுப்பனும் இங்கேயே இருக்கிறூர்களா?

நாகன் — ஆம். இருக்கிறூர்கள். (கூப்பிடுகிறுன்) கேளு, சாத்தா, கறுப்பா! (குடிசைகளுக் குள்ளிருந்து அவர்கள் ஓடி வருகிறூர்கள்).

கேளு, சாத்தன், கறுப்பன் — இதோ வந்தோம். நாகா, எங்களை ஏன் அழைத்தாய்?

நாகன் — உங்களை இந்த ரகுராம பட்டருக்குப் பரிச்சயம் செய்விக்கும் பொருட்டே. இவர் நம்மை ஆதரிப்பவர்.

ரகுராமன் — (ஒரு புறமாக) இப்படிப்பட்ட கொடிய கொலை பாதகர்களை நான் பார்த்ததே இல்லை. (உரக்க அவர்களைப் பார்த்து) என்ன அப்பா! நீங்கள் எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்?

கேளு, சாத்தன், கறுப்பன் — பேயரசனாகிய குட்டிச் சாத்தானுடைய அடியார்கள் எப்படி இருப்பார்களோ அவ்வளவு க்ஷேமமாக இருக்கிறோம். அவன் தன் அடியார்கள் வயிறு வளர்ப்பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மாத்திரமே கொடுத்து, மற்றதை யெல்லாம் தானே கொள்ளை கொள்கிறது உமக்குத் தெரியுமே.

ரகுராமன் — அவன் ஏன் அப்படிச் செய்கிறான்?

நாகன் — அவனுக்கு நாங்கள் எப்போதும் அடிமையாயிருக்க வேண்டுமென்றே.

ரகுராமன் — என்ன பெரும்பாவி! கொடும் பேய், அப்பா.

நாகன் — அப்படிச் சொல்லாதேயும். குட்டிச் சாத்தான் எங்களுக்குச் செய்திருக்கிற உபகாரங் களுக்காக நாங்கள் நால்வரும் அவனுக்கு நன்றி

பாராட்ட வேண்டும். வாருங்கள் தோழன்மாரே, அவனது புகழைப் பாடுவோம். நாகன், கேளு, சாத்தன், கறுப்பன், ஆகிய எல்லாரும் பாடுகிறார்கள்.

ராஜாதி ராஜனடா குட்டிச்சாத்தான்
நம்முடைய சாமியடா குட்டிச்சாத்தான்.

ஈடேது தீமையிலே வல்லமை யுள்ளான்
எண்ணி அவன் பண்ணாத சூனியம் இல்லை
சூடாகக் காட்டெருமை ரத்தம் அருந்தித்
தோலையற நல்ல பழங்களையு முண்பான் (ராஜாதி)

எப்போதும் நீதி நெறிப் பக்கம் அணுகான்
ஈசனையும் காய்ந்து மனமார எதிர்ப்பான்
தப்பாது காட்டேரி மாடனுடனே
சங்கிலிக் கறுப்பனையும் கூட்டி மகிழ்வான் (ராஜாதி)

சின்னக் குழந்தைகளின் சின்ன எலும்பில்
செய்து முடித்த பெருமாலை அணிவான்
வன்னப் புளிய மரக் கொம்பை விரும்பி
மன்னவர் மணிப்பீடம் என்று வசிப்பான் (ராஜாதி)

சாது ஜனம் தூங்குகிற நள்ளிரவிலே
தன்னுடைய நண்பருடன் சேர்ந்து களிப்பான்
வேதக் கடவுளுக்கு வெய்ய பகைவன்
மேன்மேலும் வாழிய! எம் தெய்வம் அவனே
(ராஜாதி)

ரகுராமன் — (ஒருபுறமாக) என்ன கோரமான பாட்டு! இது என்னவோ! இனி இவர்கள் கூத்தும் ஆடப்போகிறார்களோ? (நாகனும் அவனுடைய

மூன்று கூட்டாளிகளும் கொஞ்சம் பேய்க் கூத்து ஆடுகிறார்கள்). மணி ஒன்று ஆகப்போகிறது. (உரக்க) அடே, நாகா! எனக்கு நேரம் ஆகிறது. என்ன சடங்குகள் செய்ய வேண்டும், அவைகளுக்கு என்ன செலவு பிடிக்கும்; என்று எனக்கு உடனே சொல்.

நாகன் — முதல் நாள் நான்கு பிசாசுகளுக்கு நான்கு பிரதிமைகள் செய்வோம். அவைகளுக்கு மிருக பலி கொடுத்து, உன் வீட்டிற் புதைக்கப்பட்டுள்ள செப்புத்தகடுகளையெல்லாம் எடுத்துவிடுவோம். எங்கள் ஒவ்வொருவருக்கும் 5 ரூபாய் வீதமும், எனக்கு 5 ரூபாய் அதிகமாகவும் கொடுக்கவேண்டும். இது மொத்தம் 25 ரூபாய் ஆகிறது. அந்நான்கு பிசாசுப் பிரதிமைகளுக்கும் மது வகைகள் சமர்ப்பிக்க 25 ரூபாய் ஆகும். இதுவல்லாமல், குட்டிச்சாத்தானுக்குப் பலியிடும்பொருட்டுச் சில சேவல்களும் வெள்ளாடுகளும் ஓர் எருமை மாடும் சித்தமாக்கி வைக்கவேண்டும்.

ரகுராமன் — இந்தப் பூதங்கள் எவ்வளவு இரத்தப் பிரியமுள்ளவைகளாய் இருக்கின்றன.

நாகன் — அதற்கென்ன சந்தேகம்? நீர் உமது பகைவனது உதிரத்தைக் கோருகிறீர். பிசாசோ எருமை இரத்தமும், கோழி இரத்தமும், வெள்ளாட்டு இரத்தமும் வேண்டுமென்கிறது.

ரகுராமன் — இந்த மிருக பலிகள் என் வீட்டில் நடக்க இசையமாட்டேன். கிராமத்தாரெல்லாரும் என் மீது கோபித்தெழுவார்களே.

நாகன் — மிருக பலியில்லாமல் பிசாசுகள் திருப்தியடையமாட்டா.

ரகுராமன் — கோழி வெட்டினாலும் வெட்டலாம்; வேண்டுமானால் வெள்ளாடும் வெட்டலாம்; ஆனால், எருமை வெட்டவே முடியாது.

நாகன் — அப்படியானால், எருமையை என் வீட்டிலே வெட்டி அதன் இரத்தத்தை ஒரு சீசாவில் எடுத்துக் கொண்டுவந்து அர்ப்பணம் செய்கிறேன்.

ரகுராமன்—எருமையின் விலை என்ன இருக்கும்?

நாகன் — குறைந்த பக்ஷம் 25 ரூபாய் இருக்கும். அரிசி, வெள்ளாடுகள் முதலியவைகளுக் கெல்லாம் சேர்ந்து இன்னுமொரு 25 ரூபாய் செல்லும்.

ரகுராமன் — எவ்வளவு தொகை!

நாகன்—ஆயினும், அதனால் உமக்கு உண்டாகும் திருப்தியை எண்ணிப் பாரும்.

ரகுராமன்—சரி, இந்த 100 ரூபாய்க்குள் எல்லாச் சடங்குகளும் முடிந்துபோமா?

நாகன் — முடியாது. உமது பகைவருடைய பிரயோகங்களைப் பரிகரிப்பதற்கு மாத்திரமே இந்தக் காரியம். அவர்களுக்குப் பிரதி தீமை செய்ய வேண்டுமானால், இதே மந்திரி திரும்பவும் செய்ய வேண்டும். அதற்குமேல் பெரிய பேய்க் கூத்து

நடத்தவேண்டும். அந்தக் கூத்துக்கான மதுமாமி சாதிகளுக் கெல்லாம் 50 ரூபாய் வேண்டும்.

ரகுராமன் — என்ன என் அவஸ்தை, பிராமணனாய்ப் பிறந்து நான் மதுமாமிசாதிகளை என் வீட்டில் வைத்துப் படைக்க வேண்டுமா!

நாகன்—பிசாசின் துணை வேண்டுமானால், அதன் வழியைப் பற்றவேண்டும். பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளிய மரத்தின்மீது ஏறவே வேண்டும்.

ரகுராமன்—ஆக, இந்தச் சடங்குகளுக் கெல்லாம் சேர்ந்து மொத்தம் ரூபாய் 250 வேண்டுமா?

நாகன் — அதற்கொரு காசு குறையாது.

ரகுராமன் — என்னைப் போன்ற ஏழை செலவிடுவதற்கு அது அசாத்தியமான தொகையாயிற்றே.

நாகன் — ஏழைகளுக்குத் தெய்வம் இரங்கும். பேய்களுக்கோ இரக்கமென்பது இல்லை. எவராலும் சரி தமக்கு வேண்டிய பலிகளைக் கொடுத்தே தீர வேண்டுமென்று கட்டாயப் படுத்தும்.

ரகுராமன் — நான் போய் என் மனைவியுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

நாகன் — அப்படியே செய்யும். அவளுடைய தீர்மானத்தை எனக்குச் சீக்கிரம் சொல்லும். இந்தக்

காரியம் செய்யாவிட்டால் இனி உமக்குப் பிறக்கும் குழந்தைகள் தங்கா, உங்கள் பகைவர் குதிகொள் வார்கள். அன்றியும், பிசாசுகளுக்குப் பலி கொடுப் பதாக ஒருதரம் எண்ணங் கொண்டு அதைக் கை விட்டால் அவைகளுக்கு உங்கள்மீது கடுங்கோபம் உண்டாகும்.

ரகுராமன் — நான் தெய்வத்தின் துணையை நாடி ஞல் என்ன?

நாகன் — தீமை செய்வதற்குத் தெய்வம் துணைப் படாது. ஆதலால், நீ பழி தீர்த்துக்கொள்ள முடியாது.

ரகுராமன் — நல்லது, நான் போய் என் மனே வியைக் கேட்டுக்கொண்டு, இன்று சாயங்காலத்திற் குள்ளாக உனக்கு முடிவான பதில் சொல்லுகிறேன்.

நாகன் — அப்படியே செய்யும்.

(ரகுராமன் போகிருன்).

நாகன் — (தன் கூட்டாளிகள் மூவரையும் நோக்கி.) நாம் போய் சோறு தின்போம். இவன் எப்படியும் நமக்கு வேலை கொடுப்பான் என்பது நிச்சயம். நீதியைக் காட்டிலும் பழி வாங்குவதே பெரிதாகப் பாராட்டுகிருன். ஆதலால், இவன் சைத்தான் பிடித்தவனே.

திரை.

களம் - 5.

[அதே தினம் பகல் 2 மணி. ரகுராமன் வீடு ரகுராமனும் மீனாக்ஷியும் பேசிக் கொள்கிறார்கள்].

ரகுராமன் — என் கண்ணே! அதற்கு மொத்தம் 250 ரூபாய் வேண்டியிருக்கிறது. நம் கையிலோ 10 ரூபாய் கூட ரொக்கமாகக் கிடையாது. இந்தச் சடங்குகளை நாம் செய்து சாதிக்கமுடியாது. அல்லாமலும், அவை எனக்குப் பொறுக்க முடியாத வெறுப்பைத் தருகின்றன.

மீனாக்ஷி — பிராணநாதா! நமது 2 குழந்தைகளைக் காட்டிலும் 250 ரூபாய் உமக்குப் பெரிதாய் விட்டதா?

ரகுராமன் — இல்லவே இல்லை. நம் குழந்தைகளை நாம் திரும்பப் பெறக்கூடுமானால், 250 ரூபாயும் கொடுப்பேன், அதிகம் வேண்டுமாயினும் கொடுக்கச் சித்தமாயிருப்பேன். மேற்கொண்டு தீமை வராமல் தடுக்கும் பொருட்டு 250 ரூபாய் செலவிடுவது மிகவும் அதிகமென்று தோன்றுகிறது.

மீனாக்ஷி — இந்தச் சடங்குகளைச் செய்தால் இனி நமக்குப் பிறக்கும் குழந்தைகளாவது உயிரோடிருக்குமல்லவா?

ரகுராமன் — ஆனல், நாம் எப்படி 250 ரூபாய் சேகரிப்பது?

மீனாக்ஷி — கடன் வாங்குகிறது.

ரகுராமன் — நமக்கு யார் 250 ரூபாய் கடன் கொடுப்பார்?

மீனாக்ஷி — சங்கரனோ, கோவிந்தனோ, அல்லது ஈசுவரனோ கொடுக்கமாட்டானா?

ரகுராமன் — என்ன அடைமானத்தின் மீது கொடுப்பார்?

மீனாக்ஷி — நமது பாத்திரங்களையோ, வீட்டையோ, நகைகளையோ குதுவை வையுங்கள். முதலில் 100 ரூபாய் வாங்குங்கள். முதற் சடங்கு நடக்கட்டும். செப்புத் தகடுகள் அகப்பட்டால் இவர்கள் பண்ணுகிற மந்திரமும் தந்திரமும் பலித்தனவென்று கொள்வோம். மேலே செய்யவேண்டியவைகளைச் செய்விப்போம்.

ரகுராமன் — நல்ல ஆலோசனை சொன்னாய். அந்த மிருகங்களை இங்கேயே பலி கொடுப்போமா, அல்லது, அவைகளை வெளியே கொன்று இரத்தத்தை மாத்திரம் இங்கே கொண்டுவரச் சொல்வோமா?

மீனாக்ஷி — சீசாவில் இரத்தத்தைக் கொண்டு வந்தால் அவ்வளவு திரமாகாது. ஆதலால், ஆடுகளையும் கோழிகளையும் இங்கேயே வெட்டட்டும். எருமையை மாத்திரம் வெளியே வெட்டி இரத்தத்தைக் கொண்டு வரட்டும். உடனே போய் நாகனுக்குச் சொல்லி வாருங்கள். (ரகுராமன் போகிறான்).

திரை.

அங்கம் - 2.

களம் - 1.

[மறுநாள் காலை 8 மணிப் பொழுது. சௌகார் சங்கரனுடைய வீடு. சங்கரனும் அவனுடைய குமாஸ்தாவும் ஏதோ காகிதங்களை எதிரில் வைத்துக்கொண்டு சாய்வு மேஜையினண்டை உட்கார்ந்திருக்கிறார்கள்.]

சங்கரன் — வட்டி வியாபாரம் மும்முரமாக நடந்த காலம் ஓய்ந்து போயிற்று. நாம் இப்பொழுது என்ன செய்தாலும் கடுவட்டி வாங்குகிறவன் என்கிறார்கள். இப்போது கடுவட்டி என்பது என்ன, தெரியுமா? 100-க்கு 15-க்கு அதிகமான தெதுவும் கடுவட்டியே.

குமாஸ்தா — அது மாத்திரமே யல்ல. குதுவை மீது பணம் கொடுப்பதும் முன்போல அவ்வளவு லாபகரமாய் இல்லை. ஏனெனில், அடகு வாங்கின சொத்துக்களை மீட்குமுன் விற்கக்கூடாது, அல்லது பறித்துக்கொள்ளக் கூடாது என்று நிர்ப்பந்தப் படுத்துகிற பீடைச் சட்டங்கள் ஏற்பட்டுவிட்டன. முன்னெல்லாம் நாம் ஒரு நகையை அடகு பிடித்தால் அது நம்முடையதே யாகிவிடும். இப்போது அப் படி யில்லை. அடகு வைத்தவனை நாம் முன்னராக முறைப்படி கேட்கவேண்டும்; அதற்குப் பின் முறைப்படி ஏலம் போடவேண்டும்; இன்னும் எத்

தனையோ தொல்லை. இதற்கு முன்னால் ஏலம் போடுவது எங்கேயாவது உண்டா? அடகு பிடித்தவன் நகையை எடுத்துக்கொண்டு விடுவான். அதற்கு மேல் பேச்சுமில்லை, மூச்சுமில்லை.

(ரகுராமன் வருகிறான்.)

சங்கரன் — என்ன, ஐயா, ரகுராமரே! நேற்று ஏன் பிரதோஷம் தப்பிப் போய்விட்டீர்?

ரகுராமன் — கையிற் காசில்லாததனால் பிரதோஷ அர்ச்சனையை விடவேண்டியதாயிற்று.

சங்கரன் — என்னிடம் கடன் வாங்கிக்கொண்டிருக்கலாமே.

ரகுராமன் — இன்றைக்கு 100 ரூபாய் உம்மிடம் கடன் வாங்க வந்திருக்கிறேன்.

சங்கரன் — இம்! 100 ரூபாய் என்பது உம்மைப் போன்றவனுக்கு மிகப் பெருந்தொகை யாயிற்றே. அவ்வளவு பணம் உமக்கு ஏன்?

ரகுராமன் — என் அண்ணனும் அண்ணியுமாக வைத்த பில்லிசூனியத்தினால் என் மக்களிருவரும் இறந்து போனார்கள். அதற்கு எதிரிடை செய்வதற்காகப் பணம் வேண்டும்.

சங்கரன் — உமது அண்ணனும் அண்ணியுமா? கோபாலனைப் போன்ற படிப்பாளி இப்படிப் பட்ட கோரமான காரியத்தில் ஈடுபட்டானா? இது விந்தையாயிருக்கிறதே!

ரகுராமன் — முட்டாளொருவன் அப்படிச் செய்தானென்றால், ஏதோ தெரியாமற் செய்தானென்று சொல்லலாம். புத்திசாலி எனப் பெயரெடுத்தவன் இப்படிச் செய்தானென்பதே மிக்க வருத்தத்திற்கு இடமாயிருக்கிறது.

சங்கரன் — என்ன அடைமானத்தின் மீது கடன் கேட்கிறீர்?

ரகுராமன் — என்னுடைய பண்டம் பாத்திரங்களின் மீது கடன் கொடும்.

சங்கரன் — பித்தளைப் பாத்திரம் முதலியன உன்னிடம் அதிகம் இருக்கின்றனவா?

ரகுராமன் — குறைந்தபக்ஷம் 200 ரூபாய் பெறுமான பாத்திரங்கள் என்னிடம் உண்டு. அவைகளை என் வீட்டினண்டை ஒரு வண்டியிலே ஏற்றிச் சித்தமாக வைத்திருக்கிறேன்.

சங்கரன் — அவைகளைக் கொண்டு வாரும், பார்ப்போம். (ரகுராமன் அவைகளைக் கொண்டுவர ஓடுகிறான்).

சங்கரன் — (குமாஸ்தாவை நோக்கி) இந்த முட்டாளைப் பார்! மோசக்காரரால் ஏமாற்றப் பெற்று இவன் பிசாசுகளின் கையில் அகப்பட்டுக் கொள்ளப் போகிறான். நல்லது, அது எப்படியாவது இருக்கட்டும். அதனால் நமக்கு ஆவதென்ன? நாம் நமது கணக்குகளைப் பார்த்து முடிப்போம்.

(கணக்குப் புத்தகங்களைப் படித்துப் பார்க்கிறார்கள்: ரகுராமன் ஒரு வண்டியுடன் வருகிறான்).

சங்கரன் — இது பாத்திரங்கள் வருகிற வண்டி யாயிருக்கவேண்டும். அவை அவனது முன்னோர்கள் காலத்திலிருந்து வந்தவை யாதலின் நல்ல திடமான வைகளாகவே இருத்தல் வேண்டும். அந்த முட்டாள் கோபாலன் தன் பங்குக்கு உரியதை வேண்டா மென்று துறந்து எல்லாவற்றையும் இந்த ரகுரா மனுக்கே கொடுத்துவிட்டான். அந்த ரகுராமன் இப்போது அவன் மீது அநியாயமாக அனுமானப் படுகிறான். (ரகுராமன் வண்டியிலிருந்து இறங்குகிறான்.)

ரகுராமன் — இதோ, பாத்திரங்கள் (என்று வண் டியைக் காண்பிக்கிறான்.)

சங்கரன் — அவைகளை வண்டியினின்றும் இறக்கும், நான் பார்க்கட்டும். (ரகுராமனும் சங்கரனும் குமாஸ்தாவும் வண்டிக்காரனுமாகப் பாத்திரங்களை இறக்கிச் சங்க ரனது தாழ்வாரத்தில் வைக்கிறார்கள்.)

சங்கரன் — (ஒரு புறமாக) இவை குறைந்த பக்ஷம் 200 ரூபாய் தாளும். (உரக்க) ரகுராமரே, எல்லாப் பாத்திரங்களும் இவ்வளவேயா ?

ரகுராமன் — ஆம், இவை குறைந்த பக்ஷம் 200 ரூபாய் பெறும்.

சங்கரன் — உடைமைக் காரனுக்குத் தன் வஸ்து ஒவ்வொன்றும் விலை யுயர்ந்ததே.

ரகுராமன் — ஏன், ஐயா! இவைகளிலுள்ள உலோகம் மாத்திரம் 150 ரூபாய் விலையுள்ளதாகும்; செய்கூலி 50 ரூபாய் ஆகும்.

சங்கரன் — சொந்தக்காரனது விலையீடு எப்பொழுதுமே அதிகமாயிருக்கும். உன் பாத்திரங்களுக்கெல்லாம் நான் 95 ரூபாய் மதிப்பிடுகிறேன். இதுவும் மிகத் தாராளமான மதிப்பு.

ரகுராமன் — 95 ரூபாய்க்கு இப்படிப்பட்ட பாத்திரங்களை வாங்கிக் கொடுப்பீரா ?

சங்கரன் — கோபங் கொள்ளாதேயும். விற்கும் விலையைக் காட்டிலும் வாங்கும் விலை எப்போதும் இரண்டு மடங்காகும்.

ரகுராமன் — அதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்.

சங்கரன் — நீர் ஒத்துக்கொள்ளா திருக்கலாம். நல்லது, வீண்வம்புப் பேச்சிற் காலங்கழிப்பதனல் நமக்கு வரும் லாபம் என்ன? உம் விஷயத்தில் விசேஷ அபிமானம் வைத்து நான், போனாற் போகிற தென்று, இந்தப் பாத்திரங்களின்மீது 100 ரூபாய் கொடுக்கிறேன். வழக்கம் போல 100-க்கு 15 வட்டி கொடுக்கவேண்டும்.

ரகுராமன் — 1¼ வட்டியா ? அடைமானமில்லாமல் ¾ வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். அடைமானத் தோடானல் ½ வட்டிக்குக் கொடுக்கிறார்கள்.

சங்கரன் — அப்படிக் கொடுக்கிறவர்கள் யார், அப்பா ? அவர்களிடம் போம், உம் பாத்திரங்களை எடுத்துக்கொள்ளும்.

ரகுராமன் — நல்லது. அப்படியே செய்கிறேன்.

(போகப் பிரயத்தனப்படுகிறான்)

சங்கரன் — பொறும், நம்மூர்க்காரர் விஷயத்திற் கடுமையாய் இருக்க எனக்குப் பிரியமில்லை. எனக்கு 100-க்கு 12½ போதும். இந்த நாட்டுப்புறத்தில் எங்கே போனாலும் இதைக் காட்டிலும் சகாய வட்டிக்குப் பணம் கிடைக்காது.

ரகுராமன் — (ஒரு புறமாக) இஃது உண்மையே; ஆனால், இன்னுங் கொஞ்சம் இவன் வட்டியைக் குறைக்கும்படி செய்கிறேன். (உரக்க) 100-க்கு 12க்கு அதிகம் கொடுக்கவே மாட்டேன். என் பாத்திரங்களைப் பார்த்தால் எவனும் 100-க்கு 12 வீதத்திற்கு ஒப்புக்கொள்வான்.

சங்கரன் — (ஒரு புறமாக) இவன் சொல்வது சரியே. இவன் பணத்தைத் திருப்பிக் கொடுத்துப் பாத்திரங்களை மீட்டுக்கொள்ளப் போவதில்லை. ஆகையால் சொத்து நம்முடையதே யாகிவிடும் என்பது நிச்சயம். 87 ரூபாய் கொடுத்து 200 ரூபாய்ப் பாத்திரங்களை அடைவேன். இந்தச் சமயத்தைக் கைவிட்டால், கோவிந்தனும் ஈசுவரனும் லாபம் அடைவார்கள். (உரக்க) நல்லது, உன் விஷயத்திற்காகத் தனியே வட்டியைக் குறைத்து 100-க்கு 12 வீதம் வட்டிக்குப் பணம் கொடுக்கிறேன். ஆனால் 100-க்கு 15 வீதம் வட்டிக்குக் கடன் வாங்கினதாக எல்லாருக்கும் சொல்லவேண்டும்.

ரகுராமன் — நீர் ஒருவேளை பிற்காலத்தில் 100-க்கு 15 வீதமே வட்டி என்று சாதித்து என்னை ஏமாற்றினல் நான் என்ன செய்வேன்?

சங்கரன் — பிராமிஸரி நோட்டு இருக்குமே. அதில் வட்டி இன்னதென்று அக்ஷரத்தாலும் எழுத்தாலும் குறிக்கப்பட்டிருக்குமல்லவா, உமக்கு என்ன பயம்?

ரகுராமன் — பொய்யாக அதிக வட்டி கொடுக்கிறேனென்று என்னை ஏன் சொல்லச் சொல்லுகிறீர்?

சங்கரன் — மற்றப்படி கடன் வாங்குகிறவர்களும் உம்மைப்போல குறைந்த வட்டிக்கு என்னைக் கடன் கேட்காதிருக்கும்பொருட்டே.

ரகுராமன் — அப்படியானல், நீர் சொல்லுகிறபடி நான் செய்கிறேன்.

சங்கரன் — சரி. இனி பத்திரம் எழுதவேண்டியதுதானே.

ரகுராமன் — நானே எழுதுகிறேன்.

சங்கரன் — நிரம்ப நன்ருயிற்று. நீரே எழுதும்.

(ரகுராமன் எழுதுகிருன்.)

ரகுராமன் — பத்திரம் எழுதியாகிவிட்டது.

சங்கரன் — அதைப் படித்துக் காட்டும்.

ரகுராமன் — (படிக்கிறான்) பெருங்குளம் கிராமத்துச் சிவராமையன் குமாரனாகிய ரகுராமன் என்னும் நான் இன்றைத்தினம் சௌகார் பிச்சுவின் குமாரராகிய சங்கரன் என்பவரிடம் ரொக்கக் கடன் வாங்கி இருக்கிறேன். இந்த 100 ரூபாயையும் அவராவது அவருடைய உத்தரவு பெற்றவராவது கேட்கும் போது 100-க்கு வருஷம் ஒன்றுக்கு 12 வீதம் வட்டி சேர்த்து நான் கொடுக்கக் கடவேன். இந்த 100 ரூபாய்க்கு ஈடாக (இதனுடன் வைத்திருக்கும் A ஷெடியூலிற் கண்ட) எனது 21 பாத்திரங்களையும் அவரிடம் அடகு வைத்திருக்கிறேன். மேற் சொல்லியபடி பணம் கொடுக்க நான் தவறினால் அந்தப் பாத்திரங்களை அவரே விற்று எடுத்துக்கொள்ளலாம். (ஒப்பம்) ரகுராமன்.

சங்கரன் — சரி, அதுபோதும். பத்திரத்தை என்னிடம் கொடும். (வாங்கிக் கொள்கிறான்) இதோ பணம் கொடுக்கிறேன். (100 ரூபாய் எடுத்து) இன்றைத்தினம் நீர் என்னிடம் கடன் வாங்கின ரூ. 100 இதோ வாங்கிக்கொள்ளும். (ரகுராமன்கையிற் பணத்தைக் கொடுக்கிறான்.) இதில் ரூ. 12 முதல் வருஷத்து வட்டிக்காக எனக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். நான் பணம் கொடுத்ததற்கு கைம்மாறாக எனக்கு 1 ரூபாயும், ஸ்டாம்புக்காக ஓர் அணாவும் கொடுக்கவேண்டும். இவ்வாறாக இந்தத் தொகையிலிருந்து ரூ. 13-1-0 நான் எடுத்துக்கொள்கிறேன். (இந்தத் தொகையை எடுத்துக்கொள்கிறான்.)

ரகுராமன் — ஒரு வருஷத்திற்கு நான் முன்-வட்டி கொடுப்பானேன்? வருஷக் கடைசியில் தானே வட்டி கொடுக்கவேண்டும்?

சங்கரன் — இந்தப் பக்கத்தில் எந்த வட்டி வியாபாரியும் ஒரு வருஷம் வரையில் வட்டி வாங்கக் காத்திருக்க மாட்டான். ஒரு வருஷத்திற் குள்ளாக நீர் 'திவாலா' ஆகிவிட்டால், நான் வட்டிப் பணத்தை இழக்கிறதோ?

ரகுராமன்—என் பாத்திரங்கள் இருக்கின்றனவே.

சங்கரன் — பேஷ், பேஷ்! எனக்குச் சேரவேண்டிய 112 ரூபாய்க்குப் பதிலாக உமது 95 ரூபாய் பெறுமான பாத்திரங்களை எடுத்துக்கொண்டு திருப்தியடைய வேண்டுமா? நல்ல காரியம் பண்ணினீர். உண்டான வட்டித் தொகையை முன்னால் கொடுத்துவிட்டு, நீர் நல்ல எண்ணமுடையவரென்று காட்டும். அனாவசியமான வார்த்தைகள் வேண்டாம்.

ரகுராமன் — போனால் போகிறது, கைம்மாறாகக் கேட்கிற 1 ரூபாயையாவது தள்ளிக்கொடும்.

சங்கரன் — அதை எப்படி விட்டுவிடுவேன். இவ்விதமாக நான் எங்கள் குலாசாரத்திற்கு விரோதமாக நடந்தால் வட்டி வியாபாரிகளெல்லாரும் என்னைக் கண்டு வெறுப்பார்கள். தீர்க்கமாக எண்ணிப் பார்த்தால், நீங்கள் எழுதிக்கொடுக்கிற காகிதத் துண்டை வாங்கிக் கொண்டு நாங்கள் ரொக்கப்

பணத்தைக் கைவிட்டுக் கொடுப்பதனல் உண்டாகிற துக்கம் துக்கமே. அதற்குப் பரிகாரம் வேண்டாமா?

ரகுராமன் — அதுவும் போகட்டும் ஐயா, அந்த ஓர் அணைவைத் தள்ளக்கூடாதா?

சங்கரன் — என்ன! நீர் எழுதிக்கொடுத்த பத்திரத்திற்கு ஒட்டின ஸ்டாம்புக் கிரயத்தையா விட்டுக் கொடுக்கிறது. அதனல் என்ன அர்த்தமாகும்? கடன் வாங்க வேண்டுமென்னும் அக்கரை உமக்கில்லாதிருக்க, நானே முன்வந்து கடன் கொடுப்பது போலாகும்.

ரகுராமன் — (ஒரு புறமாக) இந்தக் கன்மனமுடைய பாபியுடன் வாதிப்பதனற் பயனில்லை. எனக்குப் பணமோ அவசரமாக வேண்டும். எவன் கடன் கொடுப்பானென்று ஊர் ஊராக அலைய எனக்கு நேரமும் இல்லை, பொறுமையும் இல்லை. கடன் கொடுக்கிறவர்களெல்லாரும் கல்நெஞ்சுக்காரர்களே. (உரக்க) சரி, ஐயா, சரி. இனி நான் போய்வருகிறேன்.

சங்கரன் — போய் வாரும்.

(ரூ. 86-15-0 உடன் ரகுராமன் போகிறான்)

திரை.

களம் - 2.

[மறுநாள் மாலை 5 மணிப் பொழுது. ரகுராமன் வீடு. ரகுராமனுடன் நாகன், கேளு, சாத்தன், கறுப்பன் வருகிறார்கள்.]

நாகன் — நாங்கள் எங்கள் காரியத்தைச் செய்யத் தொடங்கலாமா ?

ரகுராமன் — இன்றைக்கு என்ன செய்யப் போகிறீர்கள் ?

நாகன் — அந்த நான்கு பிசாசுகளின் பிரதிமைகளைச் செய்து, அவைகளை எருமை இரத்தத்திலும், கோழி இரத்தத்திலும், ஆட்டிரத்தத்திலும் குளிப்பாட்டி, ஒளித்துவைக்கப்பட்டிருக்கிற செப்புத்தகடுகளைக் கண்டுபிடிக்கப் போகிறோம்.

(ராமன் வருகிறான்.)

ராமன் — ஈதெல்லாம் என்ன, ரகுராமா? இங்கே ஆடும் கோழியும் எருமையும் பலி கொடுத்து நீ உன் வீட்டிற் சில பிசாசுகளைப் பிரதிஷ்டை செய்யப் போகிறாய் என்று என் அகமுடையாள் சொல்லுகிறாளே. அது கொஞ்சங்கூடச் சரியன்று.

ரகுராமன் — உன் மனைவிக்கு யார் சொன்னார் ?

ராமன் — லக்ஷ்மி சொன்னாள்.

ரகுராமன் — அந்தச் சண்டாளி எல்லா சமாசாரங்களையும் எல்லாருக்கும் பரப்புகிறவள்.

ராமன் — அது இருக்கட்டும். எனக்கு வேண்டியதெல்லாம் என்ன. இந்த பிராமண அக்கிரகாரத்திற் பிசாசுகளைப் பிரதிஷ்டை செய்யக்கூடாது, மிருக பலிகள் கொடுக்கக்கூடாது என்பதே.

ரகுராமன் — பிராமணர்களும் நோய் கொண்டதம் குழந்தைகளாவது பசுக்களாவது நலமடைய வேண்டுமென்று கிராமத்திற்கு வெளியே மிருக பலி கொடுப்பதில்லையா ?

ராமன்—அவர்கள் அது செய்கிறார்கள். ஆனல், ஒருபோதும் கிராமத்திற்குள் செய்வதில்லையே.

ரகுராமன் — அதனலென்ன, காரியம் பெரிதா இடம் பெரிதா ? எங்கே செய்தால் என்ன ?

ராமன் — இடமும் கவனிக்க வேண்டியதே. வீட்டுக்கு வெளியே நீ எச்சில் துப்பலாம். ஆனல், வீட்டுக்குள் துப்பலாமோ ?

ரகுராமன் — நோயாளிகள் வீட்டுக்குள்ளேயும் துப்புகிறார்கள். பிசாசுகள் உண்டென்று உனக்கு நம்பிக்கை இல்லையா ? சில கர்மாக்கள் செய்து அதனல் நீ இரத்தம் கக்கிக்கொண்டிருக்கும்படி செய்வேன் என்று நாகன் சொல்லுகிறானே. நீ வேண்டுமானற் பரீக்ஷை பார்க்கிறாயா ?

ராமன் — வேண்டாம். பரீக்ஷை பார்க்க எனக்குப் பிரியமில்லை. பிசாசுகள் உண்டு. அவைகளை எதிர்க்குமளவு எனக்குத் துணிவும் இல்லை, சக்தியும் இல்லை. ஆனலும், என் பக்கத்து வீட்டில்

பிசாசுப் பிரதிஷ்டை செய்யவும் பூதபலி கொடுக்கவும் அனுமதிக்க மாட்டேன்.

ரகுராமன் — இது என் சொந்த வீடு. எனக்கு இஷ்டமானதை நான் இங்கே செய்வேன்.

ராமன் — நீ செய்யக்கூடாது. மற்றவர்களைப் போலவே நடக்கவேண்டும்.

ரகுராமன்—மாட்டேன். உன்னாலானதைப் பார்.

ராமன் — கிருஷ்ணனிடம் போய்ச் சொல்லுகிறேன்.

ரகுராமன் — போய்ச் சொல். அந்தக் கிழட்டு மூடத்தையும் அவனுடைய அபிப்பிராயங்களையும் நான் பொருட்படுத்துவதில்லை. (ராமன் போகிறான்.)

ரகுராமன் — (நாகனை நோக்கி) உங்கள் வேலையைப் பாருங்கள். நீ எருமையிரத்தம் கொண்டுவந்திருக்கிறாயா ?

நாகன் — இல்லை. பிரதிமைகள் செய்து சித்தமானவுடனே கேளு போய் ஆடுகளையும் கோழிகளையும் எருமையிரத்தத்தையும் கொண்டுவருவான்.

ரகுராமன் — சரி. அப்படியானால் பிரதிமைகளைச் செய்.

நாகன் — அதற்கேற்ற களிமண் வேண்டிய அளவு சித்தமாயிருக்கிறதா ?

ரகுராமன் — சித்தமாயிருக்கிறது. ஒவ்வொரு பிசாசின் பிரதிமையையும் யார் செய்கிறது ?

நாகன்—குட்டிச்சாத்தான் பிரதிமைகள் நான்கு நான் செய்கிறேன், மாடனுடைய பிரதிமைகள் நான்கு கேளு செய்வான், சங்கிலிக் கருப்பானுடைய பிரதிமைகள் நான்கு கருப்பன் செய்வான், காட்டேரியின் பிரதிமைகள் நான்கு சாத்தன் செய்வான். இவை நான்கு வரிசைகளாக ஒன்றோடொன்று பார்க்கும்படி வைக்கப்படும். முன்புறத்துத் தாழ்வாரத்தையும் பின்புறத்துத் தாழ்வாரத்தையும் தவிர மற்ற வீடு முழுமையும் வெறுமையாக ஒழித்துவிட வேண்டும். அந்த இடத்தில் வேறெவரும் இருக்கக் கூடாது. பிசாசுப் பிரதிமைகள் செய்வதற்கும், அவைகளை இரத்தத்திற் குளிப்பாட்டுவதற்கும் எங்களைத் தனியே விட்டுவிடவேண்டும்.

ரகுராமன் — உனக்கு வேண்டியபடியே செய்கிறேன். கூடத்தை ஒழித்துக் கொடுக்கும்படி என் மனைவிக்குச் சொல்லுகிறேன். (மனைவியை விளித்துச் சொல்கிறான்.) (மீனாக்ஷி வருகிறாள்.)

மீனாக்ஷி — சாமான்களை யெல்லாம் எடுத்துவிட்டேன்.

ரகுராமன் — (நாகனை நோக்கி) உள்ளே போய் ஆரம்பஞ்செய்.

நாகன் — நல்லது (கேளு, கருப்பன், சாத்தன் என்பவர்களை நோக்கி) உள்ளே போய் உங்கள் காரியத்தைச் செய்யத் தொடங்குங்கள். பிசகிப் போகாமல் ஜாக்கிரதையாய்ச் செய்யுங்கள்.

சாத்தன் — பிரதிமைகள் எவ்வளவு உயரம் இருக்கவேண்டும்?

நாகன் — குட்டிச்சாத்தான் 24 அங்குலம், சங்கிலிக் கருப்பன் 22 அங்குலம், மாடன் 20 அங்குலம், காட்டேரி 18 அங்குலம். நம் வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்யத் தொடங்குவோம். ஐயா, ரகுராமரே! நீர் வெளியே போம். உள்ளே விளக்கு வைத்திருக்கிறீரா?

ரகுராமன் — வைத்திருக்கிறேன்.

நாகன் — நாங்கள் உள்ளே தனியே இருக்க வேண்டும். (நாகன், கேளு, சாத்தன், கருப்பன் என்னும் நால்வரும் உள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக்கொள்கிறார்கள்.)

(ரகுராமன் முன்புறத்துத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். மீனாக்ஷி பின்புறத்துத் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருக்கிறாள்.)

ரகுராமன் — (தனக்குத்தானே) இவர்கள் உள்ளே போய்க் கதவைச் சாத்திக்கொண்டு ஒருமணி நேரத்திற்கதிகமாயிற்றே. இன்னுமா பிரதிமைகள் செய்து முடிக்கவில்லை? இந்த அகாலமான ராத்திரி வேளையில் அத்தனை ஜனக் கூட்டத்தோடு கிருஷ்ணன் ஏன் இந்தப் பக்கம் வந்துகொண்டிருக்கிறான்? அவர்கள் நாசமாய்ப் போக! என் காரியத்தில் அவர்களுக்கு என்ன சம்பந்தம்?

(கிராமத்தவர் கூட்டத்தோடு கிருஷ்ணன் வருகிறான்.)

கிருஷ்ணன் — ரகுராமா! உன் வீட்டுக்குள் நீ பிசாசுகளைப் பிரதிஷ்டை செய்து மிருக பலிகள் கொடுக்கப் போகிறாயாமே, நிஜந்தானா?

ரகுராமன் — ஆம்.

கிருஷ்ணன் — இந்தப் புராதனமான பெருங் குளம் என்னும் கிராமம் ஏற்பட்டு 500 வருஷங்களாயின. இத்தனை நாளில் இந்தக் கிராமத்தில் எவனும் தன் வீட்டிற் பிசாசுகளைப் பிரதிஷ்டை செய்ததும் இல்லை, மிருக பலி கொடுத்ததும் இல்லை.

ரகுராமன் — சூனியம் வைத்து எத்தனை பேருடைய குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்? ஆபத்துக்குப் பாபம் இல்லை. அவசரத்திற்கும் ஆசாரத்திற்கும் வெகு தூரம். அவசரம் நேர்ந்த போது வழக்கத்தைக் கட்டிவைக்க வேண்டியதே.

கிருஷ்ணன் — ரகுராமா! அப்படிப்பட்ட அவசரம் உன் விஷயத்தில் ஒன்றும் நேரவில்லை. உன் தமையன் — செய்திருக்க முடியாது.

ரகுராமன் — எனக்கு அவசரம் நேர்ந்திருக்கிறதோ இல்லையோ வென்று தீர்மானிப்பவர் நீர் அல்ல. இந்தக் கிராமத்திற்கு நீர் பெரும் பீடையாயிருக்கிறீர். நீர் பேசுவது வேதாந்தம் இடிப்பது சிவன்கோவில். விதிகளையும் சித்தாந்தங்களையும் ஒழுங்காகப் பிறருக்கு ஓதுவீர். ஆனால், கிரியாமிசத்தில் உமது அனுகூலத்திற்குத் தக்கபடி நடப்பீர். ஏழைகளுக்கு உசிதார்த்தமாக, பணம் வாங்காமல்,

அன்னம் அளிக்க வேண்டுமென்று தர்மம் உபதேசிக்கிறீர். ஆனால், உம்மைவிடக் கிராக்கியாக நெல் விற்கிறவர் எவரும் இல்லை. பெரிய வைதிக வேஷம் போடுகிறீர். ஆனால், புரோகிதருக்குத் தக்ஷிணை கொடுக்கும் விஷயத்தில் உம்மைப்போன்ற லோபி எவரும் இல்லை. கிராம சமூகத்து நன்மையை நாடி யுழைப்பதாகச் சொல்லிக்கொள்கிறீர். ஆனால், கிராமத்துக்குப் பொதுவான குளத்தை அபகரித்து உமக்குச் சொந்தமாக்கிக் கொண்டீர்.

கிருஷ்ணன் — நான் திட்டுக் கேட்பதற்காக இங்கே வரவில்லை. உனக்கு நற்புத்தி சொன்னேன். புத்தியில்லாமல் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேனென்கிறாய். நான் என் வழிப்போகிறேன். பிசாசுகள் உன்னைத் தங்களோடு அணைத்து இணைத்துக் கொள்ளட்டும்.

ரகுராமன் — ததாஸ்து. (கிருஷ்ணன் போகிறான்).

ரகுராமன் — (கூடியிருந்த கிராமத்தாரை நோக்கி) நீங்களும் உங்கள் வீட்டுக்குப் போகலாம்.

நாராயணன் — ரகுராமா! கேள். பேய்களின் தன்மை எல்லாருக்கும் தெரியுமே. அவை தீங்கு செய்வனவே யல்லாமல் நன்மை செய்யா. அவைகளைக் கொண்டு நீ உன் பகைவர்களுக்குத் தீங்கு செய்யப் பார்க்கிறாய். அப்படிச் செய்தபின் அவை உனக்கே தீங்கு செய்யும். வாயில்லாப் பிராணிகளை அந்தப் பிசாசுப் பிரதிமைகளுக்குப் பலி கொடுக்காதே.

ரகுராமன் — நீ சொல்வதை நான் பொருட்படுத்தமாட்டேன்.

நாராயணன்—அப்படியானால் நான் போகிறேன். (கிராமத்தார்களில் அநேகருடன் போகிறான்.)

ரகுராமன் — (தனக்குத்தானே) இந்த நால்வரும் இன்னும் பிரதிமைகளைச் செய்து முடிக்கவில்லையா? ஆ! இதோ கதவைத் திறக்கிறார்களே. (நாகனும் கேளுவும் வெளியே வருகிறார்கள்.)

ரகுராமன் — பிரதிமைகள் செய்தாய் விட்டதா?

நாகன் — ஆய்விட்டது, அவை அந்தப் பிசாசுகளைப் போலவே இருக்கின்றன. வந்து பாரும்.

ரகுராமன் — (உள்ளே எட்டிப் பார்க்கிறான்) இந்தப் பிரதிமைகள் எவ்வளவு கோரமாயிருக்கின்றன!

நாகன் — நிஜமான பேய்கள் இவைகளைக் காட்டிலும் பதினாயிர மடங்கு அதிக கோரமாயிருக்கும். ஹே, கேளு!

ரகுராமன் — (மறுபடி உள்ளே எட்டிப் பார்க்கிறான்.) இந்தப் பிரதிமைகளைப் போலவே பிசாசுகளுக்குத் தொங்கிய நாக்கும், வளைந்த பல்லும், தலைகீழாகத் திரும்பிய கால் விரல்களும் உண்மையில் இருக்கின்றனவோ?

நாகன்— அதற்குச் சந்தேகம் என்ன? நாங்கள் கண்ணாரப் பார்த்துத் தெரிந்தே யல்லவோ இந்தப் பிரதிமைகளைச் செய்கிறோம்.

ரகுராமன் — பாதங்கள் உட்புறம் திரும்பி இருந்தால் பிசாசுகள் எப்படி முன் நடக்குமென்று தெரியவில்லையே.

நாகன் — ஆனதனுலேயே பிசாசுகள் முன்னும் நடக்கும் பின்னும் நடக்குமென்று சொல்கிருர்கள்.

ரகுராமன் — நீங்கள் எப்பொழுது போய் ஆடுகளையும் கோழிகளையும் வாங்கிக் கொண்டு எருமையிரத்தம் எடுத்துவரப் போகிறீர்கள்?

நாகன் — வேண்டிய பணத்தை நீர் கொடுத்தால் கேளுவை இப்பொழுதே அனுப்புவேன்.

ரகுராமன் — அவனுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

நாகன் — சாராயத்திற்கும் கோழிகளுக்குமாக ரூபாய் 25, நான்கு ஆடுகளுக்கும், ஒரு ரூபாய் அரிசிக்குமாக ரூபாய் 25, எருமைக்காக ரூபாய் 25; ஆக மொத்தம் ரூபாய் 75.

ரகுராமன் — என்னுல் அவ்வள்வு கொடுக்கமுடியாது. இந்தக் காரியத்திற்காக நான் ரூபாய் 100 தான் கடன் வாங்கினேன். அந்தப் பாபிஷ்டி ஸௌகாரன் என் கையில் ரூ. 86-15-0 மாத்திரமே ரொக்கம் கொடுத்தான்.

நாகன் — அவன் குட்டிச்சாத்தானைவிட அதிகக் கெட்டிக்காரப் பிசாசாக இருக்கிருனே.

ரகுராமன் — நல்லது, நல்லது. நான் சொல்ல வந்தது என்னவென்ருல், கேளுவின் கையில்

4

ரூ. 61-15-0 தான் கொடுப்பேன். பாக்கி ரூ. 25 உங்களுக்குக் கூலி கொடுப்பதற்கு வேண்டும்.

கேளு — ரூ. 24-க்குக் குறைந்து நான்கு ஆடுகள் எப்படி வாங்க முடியும்? போதியவளவு சாராயமும் கோழிகளும் ரூ. 25-க்குக் குறைந்து வருமா? ரூ. 25-க்குக் குறைந்த விலேக்கு எருமை வாங்க முடியுமா?

ரகுராமன் — இந்த விவரங்களெல்லாம் எனக்கு வேண்டாம். நான் ரூ 61-15-0 தான் கெடுப்பேன். அதைக் கொண்டே நீ இவைகளே யெல்லாம் வாங்க வேண்டும்.

நாகன் — அப்படியானல் ஆடுகளின் சங்கியையாவது, சாராயத்தின் அளவையாவது குறைத்துக் கொள்வோம்.

ரகுராமன் — ஓ, அது கூடாது. அதனல் இந்த பிரயோகங்களின் வன்மை குறைந்துபோம். ரூ. 61-15-0-வைக் கொண்டு அவை எல்லாவற்றையும் நீங்கள் ஏன் வாங்கமுடியாதோ தெரியவில்லே. கோழி யிறைச்சியையும் ஆட்டிறைச்சியையும் எருமை யிறைச்சியையும் நீங்கள் நல்ல விலேக்கு விற்கலாம். நான் சொல்லுகிறேனே, ரூ. 61-15-0-க்கு அதிகம் ஒரு காசு கூட நான் கொடுக்க முடியாது.

நாகன் — பெரியவனுகிய குட்டிச் சாத்தானும் அவனுடைய மூன்று தோழர்களும் அதிருப்திப் படுவார்கள்.

ரகுராமன் — அவர்களுக்கு ஒருபோதும் அதிருப்தி உண்டாக்கலாகாது. அதிருப்திக்குக் காரணம் நான் ஒன்றும் செய்யவில்லையே. வேண்டுமென்று அவர்கள் வீணுக அதிருப்திப் பட்டால், அதற்கு நான் என்ன செய்வேன்? அநியாயமாக அவர்கள் ஆயாசப்படுவார்களானல் அதை நான் பொருட்படுத்த முடியாது.

நாகன் — கொடுக்கிறேனென்று வாக்களித்த பலிகளைக் கொடுக்காவிட்டால் அவர்கள் கொடும்-பழி வாங்குவார்கள்.

ரகுராமன் — நான் வாக்குக் கொடுத்தது எதையும் மறுப்பதில்லை. உனக்கு வேண்டிய ஆடுகளையும், கோழிகளையும், எருமையையும், சாராயத்தையும் நானே தருவித்துக் கொடுப்பேன். அவையெல்லாம் ரூ. 61-15-0-க்கு மிகக் குறைவாகவே அடங்கும், நான் போய் வாங்கி வரட்டுமா?

கேளு — (நாகனை நோக்கி - ஒருபுறமாக) காரியம் மிஞ்சிப்போயிற்று. நாம் இப்போதே விட்டுக்கொடுப்போம். இவன்போய் தீனியின்றி வாடிக்கிடக்கும் 4 ஆடுகளை ரூ. 16-க்கும், உபயோகமற்ற எருமையொன்றை ரூ. 15-க்கும், கோழிகளையும் சாராயத்தையும் ரூ. 20-க்கும், அரிசி ரூ. ½-க்கும் வாங்கி வருவான். நமக்குக் கொடுப்பதாகச் சொல்லுகிற ரூ. 61-15-0-ல் இவ்வாறு ரூ. 10-7-0 மீத்துக்கொள்வான். இந்த அமிசத்தில் நமக்குக் கெட்டியாகக்

கிடைக்குமென்று நாம் எண்ணியிருந்த ரூ. 25-7-0-ஐ ஏமாற்றி விடுவான். ஏனெனில், நாம் சீசாவில் அடைத்திருப்பது நிஜமான எருமை யிரத்த மன்று எனவும், அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்த முயலின் இரத்தமென்றும் உனக்குத் தெரியுமே. இந்த ஏழைப் பார்ப்பான் மரக்கறி யுண்பவனே யாதலால் இவனுக்கு அந்த இரத்த வித்தியாசம் தெரியாது.

நாகன் — (ஒரு புறமாக) கேளு! நீ சொல்வது முற்றும் சரியே. சில பேர் எல்லா விஷயங்களிலும் பேரமாடி பணத்தைக் குறைக்கப் பார்ப்பார்கள். ஆனால், ஐயோ! ஒன்றுமே குறைக்கமாட்டே னென்று மறுக்கக் கூடிய விஷயத்திலும் சில வேளை அவர்கள் பேரமாடுகிறார்கள். (உரக்க) ரகுராமரே! உம்முடைய வறுமையை யெண்ணி நீர் கொடுக்கிற ரூ. 61-15-0 ஐ ஏற்றுக்கொள்ளும்படி கேளு என்னைக் கேட்டுக் கொள்ளுகிறான். அந்தப் பிராணிகளின் இறைச்சியை நாங்கள் தின்னக்கூடும். ஆதலால், அவைகளுக்காக ரூ. 13-1-0 விலைகட்டித் தள்ளிக் கொடுப்போ மென்கிறான். நீரே போய் அந்தப் பிராணிகளை வாங்கி வருவதாக வருத்தப்பட்டுச் சொல்வதைக் கேட்டு எனக்கும் இரக்கம்மேலிடுகிறது. எருமையும் ஆடும் கோழியும் வாங்கி வரும்படி ஒரு பிராமணரை கட்டாயப்படுத்தி அனுப்பினே னென்னும் கெட்ட பெயர் ஒருநாளும் எனக்கு வேண்டாம். ஆகையால், கேளுவினிடம் ரூ 61-15-0 கொடும்.

ரகுராமன் — இதோ பணம் வாங்கிக் கொள். (ரூ. 61-15-0 கேளுவினிடம் கொடுக்கிறான்.)

நாகன் — கேளு, நீ புறப்பட்டுப் போகலாம்.

கேளு — எனக்குச் சகாயத்திற்காக இன்னும் 2 பேர் வேண்டும். நான்கு ஆடுகள், கோழிகள், சாராயம், எருமையிரத்தம், அரிசி ஆகிய எல்லாவற்றையும் நான் ஒருவனே எப்படிக் கொண்டு வருவேன்?

நாகன் — உண்மையே, சாத்தனையும் கருப்பனையும் கூட்டிக்கொண்டு போ. (சாத்தனும் கருப்பனும் கேளுவுடன் சேர்ந்து கொள்ளுகிறார்கள்)

கேளு — இனி நாங்கள் போகிறோம். நாங்கள் பலிகளைக் கொண்டுவருவதற்குமுன் பிசாசுகள் வந்து தோன்றாதிருக்கும்படி பார்த்துக்கொள். ஏனெனில், அவை நமது எளிய ரகுராம ஐயரை விழுங்கி விடக்கூடும். அல்லது, வேறு அப்படிப்பட்ட கொடிய காரியம் ஏதேனும் செய்யக்கூடும்.

ரகுராமன் — நாகா! தெய்வம் துணை நிற்கட்டும்! அப்படிப்பட்ட தொன்றும் செய்யாதே.

நாகன் — அதை நான் பார்த்துக்கொள்கிறேன். (கேளு, சாத்தன், கருப்பன் போகிறார்கள்) ஐயரே! இப்போது நான் மௌனமாக அந்தப் பிசாசுகளைத் தியானிக்க வேண்டும். (வீட்டுக்குள்ளே போய்க் கதவைச் சாத்திக்கொள்கிறான்.)

ரகுராமன் — (தனக்குத்தானே) இங்கே நடந்ததையெல்லாம் மீனாக்ஷிக்குப் போய்ச் சொல்லுவேன்.

திரை.

களம் - 3.

[அதேதினம் இரவு 8 மணி வேளை, பெருங்குளம் கிராமத்திலுள்ள தேவாலயம். பெரிய ஜனக்கூட்டம் அங்கே கூடியிருக்கிறது. அதில் கிருஷ்ணன், ராமன், நாராயணன், அப்பாசாமி, அம்மூ, முத்து, சேஷி, ருக்மிணி முதலியவர்கள் இருக்கிறார்கள்.]

ராமன் — இது என்ன அக்கிரமம்! புராதனமான இந்தக் கிராமத்தில் இதுவரையில் ஒருபோதுமில்லாமல் இப்போது வீடுகளிற் பிசாசுகளைப் பிரதிஷ்டை செய்து அவைகளுக்குப் பூசைபோட்டுக் கோழிகளையும் ஆடுகளையும் எருமைகளையும் பலி கொடுக்கிறார்களாம். சாராயப் பானம் அளிக்கிறார்களாம். இந்த அநியாயத்தைத் தடுக்கத் தக்கவன் இங்கே எவனும் இல்லையோ?

கிருஷ்ணன் — நாம் என்ன செய்வதற்காகும்? ரகுராமனிடம் நான் தடுத்து இடித்து உரைத்தேன். என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை. நாராயணனும் என்னைப் போலவே தடுத்தான். காலம் மாறிப் போயிற்று. முன்னுளிலோ வெனின், இந்தப் பேய்க் கூத்துகளை யெல்லாம் நாம் தடுத்து நிறுத்தியிருக்கலாம், மந்திரவாதிகளை அடித்துத் துரத்தியிருக்கலாம். தங்கள் கடமையை முறைப்படிசெய்த தேசாபிமானிக ளெனவும் நாம் புகழ்பெற்றிருக்கலாம். இப்பொழுதோ, சட்டங்கள் புதிது புதிதாக ஏற்பட்டிருக்கின்றன, வாதாடுவதற்கு வக்கீல்கள் தோன்றி யிருக்கிறார்கள். ஸிவில் கோர்ட்டுகளும்

கிரிமினல் கோர்ட்டுகளும் ஏற்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட காரியம் நாம் செய்யத் தலைப்படுவோமானல் பெரிய அவமானத்திற் கிடமாக ஜெயிலுக்குப் போகவேண்டியவர்க ளாவோம்.

ராமன் — இந்த அக்கிரமங்கள் நடைபெருமல் நிறுத்துவதற்கு நாம் ஏதாவது உபாயம் செய்ய வேண்டும். நீ என்ன சொல்லுகிருய்; அப்பாசாமி!

அப்பாசாமி — ஏதேனும் உபாயம் செய்யாவிட்டால் நமது கோவிலைவிட்டுச் சிவபிரான் ஓடிப்போவார். நாம் போய் அந்தப் பேயாண்டிகளை ஏன் வெளியே துரத்தி விடக்கூடாது? கிருஷ்ணனும் மற்றவர்களும் என்னுடன் வருவார்களானல் நான் துணிவதற்குச் சித்தமா யிருக்கிறேன்.

கிருஷ்ணன் — மாட்டோம், மாட்டோம். நாங்கள் வரமாட்டோம். ஏனெனில், கலகம் செய்ததாக எங்கள்மீது வழக்குத் தொடர்வார்கள். அது எவ்வளவு அகௌரவமா யிருக்குமென்று எண்ணிப்பார்.

(லக்ஷிமி வருகிருள்.)

அம்மு — லக்ஷிமி! ரகுராமன் செய்கிற பேய்ச் சடங்குச் சமாசாரம் என்ன?

லக்ஷிமி — பிசாசுப் பொம்மைகள் பிடித்து வைத்தாயிற்று, கோழி ஆடு எருமை எல்லாம் பலி கொடுத்தாயிற்று, பானத்திற்குச் சாராயமும் சமர்ப்பித்தாயிற்று. புதைத்து வைக்கப்பட்டிருந்த செப்புத் தகடுகள் பலவற்றைத் தோண்டி யெடுத்திருக்கிருர்கள்.

கிருஷ்ணன் — என்ன! செப்புத் தகடுகள் எடுத்திருக்கிறார்களா ?

லக்ஷிமி — ஆம். வீட்டிற் பல பல இடங்களிலிருந்து 16 தகடுகளுக்கு அதிகம் எடுத்திருக்கிறார்கள். அவைகளை எடுத்தவுடன் மீனாக்ஷி என்னைக் கூப்பிட்டுக் காண்பித்தாள்.

நாராயணன் — அவை எப்படி இருந்தன ?

லக்ஷிமி — அவை பள பள வென்று இருந்தன, அவைகளின் மீது நமக்குப் பொரியாத எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன.

நாராயணன் — சில மாதங்களுக்கு முன்னால் கோபாலன் அவைகளைத் தரையின் கீழ் புதைத்திருப்பானானால் இப்போது அவை பளபள வென்று எப்படிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ?

லக்ஷிமி — அது அதிசயமாகத்தான் இருக்கின்றது.

நாராயணன் — அதில் அதிசயம் ஒன்றும் இல்லையே. கதவைச் சாத்திக்கொண்டு பிசாசுப் பொம்மைகள் செய்தபோது அந்தப் பேயாண்டிகள் அவைகளைப் புதைத்திருக்க வேண்டும்.

இனிமேல் நடக்கத்தக்க சடங்குகளைத் தடுப்பதற்கு நாம் என்ன செய்யலாம் ?

கிருஷ்ணன் — நாம் செய்யக் கூடியது ஒன்றும் இல்லையெனத் தோன்றுகிறது. பிசாசுப் பூசை செய்கிறவனைச் சிவனே தண்டிக்கட்டும்.

நாராயணன் — சிவன் இம்மையிலேயே தண்டிக்கமாட்டான். அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.

கிருஷ்ணன் — நல்லது, தேச சட்டங்கள் ஒரு மாதிரி இருப்பதனல் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

ராமன் — இதைத் தடுக்கமுடியாவிட்டால் இத்தனை பிராமணர்கள் இங்கே இருந்து என்ன பிரயோஜனம்?

கிருஷ்ணன் — வர்ணாசிரம விதிகளின் காலம் கடந்து போயிற்று. இப்போது நாமெல்லோரும் பொதுவான தேச சட்டத்திற்கு உட்பட்டிருக்கிறோம். அந்தச் சட்டத்தின்படி தெய்வத்தைத் தொழுவதற்கு ஒருவனுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை பிசாசைத் தொழுவதற்கும் உண்டு; மிருகங்களை வளர்ப்பதற்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை அவைகளைக் கொல்வதற்கும் உண்டு. சட்டம் மீறி நடக்கிறவன் எந்த ஜாதிக்காரனானாலும் கடுமையாகத் தண்டிக்கப் படுவான்.

ராமன் — பக்கத்து வீட்டில் பிசாசுகளை வைத்துக்கொண்டு நான் எப்படி அமைதியாகத் தூங்குவேன்?

லக்ஷ்மி — ஓ! ஆடுகளும் கோழிகளும் கதறிய சத்தம் காதுகொண்டு கேட்க முடியாத கோரமாயிருந்தது!

அம்மு — ஆடுகளையும் அங்கேயே கொன்றார்களா?

லக்ஷிமி — ஆம்.

அம்மு — எருமையை எங்கே அடித்தார்கள் ?

லக்ஷிமி — அதன் இரத்தத்தை ஒரு சீசாவிற் கொண்டு வந்தார்கள்.

நாராயணன் — அந்தப் பேயாண்டிகள் இப்போது என்ன செய்துகொண் டிருக்கிறார்கள் ?

லக்ஷிமி — சாராயத்தைக் குடித்துவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

நாராயணன் — பிசாசுப் பொம்மைகளை அவர்கள் கையிலெடுத்துக் கொண்டு போய்விட்டார்களா ?

லக்ஷ்மி — இல்லை, இல்லை. அந்தப் பிசாசுகள் ஒன்றோடொன்று பார்த்துக்கொண் டிருக்கும்படி நான்கு வரிசைகளாகக் கூடத்தில் வைக்கப்பட் டிருக்கின்றன. அவைகளைப் பார்த்தால் மிகப் பயங்கரமாயிருக்கின்றது.

கிருஷ்ணன் — பிசாசுகளும் பிசாசு பூசை செய்கிறவர்களும் இந்தக் கிராமத்தைவிட்டு ஒழிய வேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டு நாம் வீட்டுக்குத் திரும்பிப் போவோம்.

எல்லாரும் — (பிரார்த்திக்கிறார்கள்) ஈசுவரா ! பிசாசுகளையும் பிசாசு பூஜகர்களையும் இந்தக் கிராமத்தை விட்டு ஒழித்துவிடும் !

திரை.

களம் - 4.

[மறுநாட் காலை 9 மணிநேரம். ரகுராமன் வீடு. ரகுராமனும் மீனாக்ஷியும் பேசிக்கொண் டிருக்கிறார்கள்.]

மீனாக்ஷி — பதினாறு செப்புத்தகடுகள் தோண்டி யெடுத்தார்கள். ஆதலால், பதினாறு பேருடைய பிராணனுக்கு குறி வைத்தார்கள். ஜானகி வெளியே சொல்லிக் கொள்வதைப் போலல்லாமல் எவ்வளவு கொடிய கொலைபாதகியாவள்; இப்பொழுது நான் சரிக்குச்சரி அவளுக்குச் செய்துவிடுவேன்.

ரகுராமன் — நம் கைப்பணமெல்லாம் செலவாகி விட்டது. மீதி இரண்டு சடங்குகளையும் எப்படிச் செய்விப்பதற்காகும்?

மீனாக்ஷி — எப்படியாவது அவைகளைச் செய் வித்தே தீரவேண்டும். சடங்குகளைப் பாதியில் விட்டு விடுவதனாற் பயனென்ன? இவ்வளவு தூரம் செய்து விட்டுப் பின் வாங்கலாமா?

ரகுராமன் — இரண்டாம் சடங்கு மாத்திரம் நடத் துவதற்கே இதைப்போல் ரூ. 86-15-0 ஆகும். இந் தப் பணம் நமக்கு யார் கொடுப்பார், என்ன அடை மானத்தின் மீது கொடுப்பார்?

மீனாக்ஷி — இதோ என்னுடைய தங்கச் சங்கிலி இருக்கிறது. இது ரூ. 160 பெறும்.

ரகுராமன் — என் கண்ணே! அது உன் கலி யாணத்தின்போது உன் தகப்பனார் உனக்குப் பரிசாகக் கொடுத்த தாகுமே.

மீனாக்ஷி — ஆம். ஆனதனாலே அதை என் குழந்தைகளின் க்ஷேமத்திற்காக நான் செலவிடுவது தகும்.

ரகுராமன் — என் அன்பே! கோபாலன் செய்த பிரயோகங்களெல்லாம் நேற்றுச் செய்த சடங்கினால் முறிபட்டுப் போயின; அவன் மீதும் ஜானகி மீதும் பழிவாங்க எதிர்ப் பிரயோகம் செய்ய வேண்டுமாயிருந்தாலே மற்றச் சடங்குகள் இரண்டையும் செய்ய வேண்டும் என்று நாகன் சொன்னான்.

மீனாக்ஷி — பழிவாங்க உமக்குப் பிரியமில்லையா? உமது அருமைக் குழந்தைகள் இருவரைக் கொலை செய்வித்தவர்கள் செழிப்புற்று வாழ்வதை நீர் பொறுத்துப் பார்த்துக்கொண்டிருப்பீரா?

ரகுராமன்— எனக்கு உணர்ச்சியில்லாமல் இல்லை. ஆனால், கோபாலனது குழந்தைகளைச் கொல்வதனால் பயனென்ன? பார்க்கப் போனால் அவர்களும் குழந்தைகளே.

மீனாக்ஷி — அவர்கள் குழந்தைகள் தான். ஆனால், பெற்றவர் செய்த தீங்கிற்காக அவர்கள் தண்டனை பெறவேண்டும். நீர் ஏன் பேசாதிருக்கிறீர்?

ரகுராமன் — எனக்கு ஒரு கலை வந்திருக்கிறது; பிசாசுக்கலை வந்திருக்கிறது. நான் முன்னிருந்த ரகுராமன் அல்ல. ஜனங்கள் என்னை முன்போல நினைத்து விவகரிப்பதில்லை. ஏனென்பையோ? இன்று காலையில் நான் பல்தேய்த்துக் குளிப்பதற்

காகக் குளத்திற்குப் போனபோது அங்கிருந்தவர்க ளெவரும் என்னுடன் பேசவில்லை. குழந்தைகளுங் கூட, பெரும்பாவியைக் கண்டு விலகுவதுபோல, என்னைக் கண்டு கூசி விலகினார்கள். பழைய நண் பன் ஒருவனைப் பார்த்து விளித்தேன்; அவன் என் னைப் பிசாசே யென்று நினைத்து ஒதுங்கிப் போய் விட்டான். ஓ! பேயுலகப் பாழில் நான் மூழ்கிக் கொண்டிருக்கிறேன்.

மீனாக்ஷி — நீங்கள் பேயுலகம் புகவில்லை. ஜான கியும் அவளுடைய கணவனும் நம் குழந்தையைக் கொல்வதற்குச் சூனியம் வைத்ததற்காக அவர்களை எவரும் பகிஷ்கரிக்க வில்லையே. நம்மை நாம் காப் பாற்றிக் கொள்வதற்காக நாம் சூனிய வித்தையைக் கையாள்வதற்கு நம்மை எவரேனும் பகிஷ்கரிப் பானேன்?

ரகுராமன் — தற்காப்புக்காக எவ்வளவு வேண் டுமோ அவ்வளவு நாம் செய்து விட்டோம். நாம் இதோடு நிற்பது நல்லதல்லவா, கண்மணீ!

மீனாக்ஷி — இல்லை, ஏதாவது ஒரு வகையில் எதிரீடு செய்யாமல் நான் சும்மா இருக்கமாட் டேன். குறைந்த பக்ஷம் ஜானகியின் குழந்தைக ளில் ஒன்றாவது சாகவேண்டும்.

ரகுராமன் — ஓ! குழந்தைகளின் சாவைப்பற்றி என்னிடம் பேசாதே. நமது குழந்தைகள் இறந்து போனதே போதும்.

மீனாக்ஷி — என் மனம் பழிவாங்கப் பதைக்கிறது. பழிவாங்கவே வேண்டும்.

ரகுராமன் — பணக் கடன் நம்மை முழுத்திவிடும். நமக்கு முடிவு காலம் ஆரம்பமாயிற்றென்றே தோன்றுகிறது.

மீனாக்ஷி — எனக்கு அப்படித் தோன்றவில்லை. நமக்கு நல்ல காலம் வரத் தொடங்கிவிட்டதென்றே எனக்குத் தோன்றுகிறது. நமது இரகசிய சத்துருக்கள் வைத்துள்ள சூனியப் பீடையினின்று விடுபட்டு இனி நாம் பழிவாங்குவதனால் இன்புற்று மகிழ்வதல்லாமல் தீர்க்காயுளுள்ள குழந்தைகளையும் பெற்றுக் களிப்போம்.

ரகுராமன் — மீனாக்ஷி! பிசாசுகளைப் பிடித்து வைத்துப் பூஜை போட்டு மிருகங்களைப் பலிகொடுத்ததனால் நம் வீட்டின் மகிமையும் குடித்தனப் பாங்கும் நம் வீட்டை விட்டு அகன்றன வென்று உனக்குத் தோன்ற வில்லையா?

மீனாக்ஷி — சிறிது மட்டும் குறைந்து தான் போயிற்று. ஆனால், இந்தக் காரியங்களெல்லாம் முடிந்த பின் இதைப் பரிகரித்து விடலாம். வீடு முழுமையையும் பசுஞ்சாணிக் குழம்பால் மெழுகி விடுவேன்.

ரகுராமன் — இந்தப் பேய்ச் சடங்குகளெல்லாம் முடிந்தபின் நாம் இந்தக் கிராமத்தில் இருக்கமுடியாது.

மீனுக்ஷி — அப்படியானல், நாம் வேறு இடத்திற்குப்போய்ப் புதிய வாழ்வு வாழ்வோம். என் தமையனுடைய கிராமம் இருக்கிறது. அங்கே நாம் சௌக்கியமாக வாழலாம். இதோ, இந்தத் தங்கச் சங்கிலியைக் கொண்டுபோய்ச் சங்கரனிடமாவது கோவிந்தனிடமாமது ஈசுவரனிடமாவது அடகுவைத்து நூறு ரூபாய் கடன் வாங்கி வாருங்கள். (நகையை ரகுராமனிடம் கொடுக்கிறுள்.)

ரகுராமன் — (அதை வாங்கிக் கொள்கிறுன்) இந்தத் தடவை கோவிந்தனிடம் போகிறேன். மறுபடி சங்கரனிடம் போக எனக்குப் பிரியமில்லை. (போகிறுன்.)

மீனுக்ஷி — இனி நான் சமையற் காரியத்தைப் பார்க்க வேண்டும். (உள்ளே போகிறுள்).

திரை.

களம் - 5.

[மூன்று நாளுக்குப் பிறகு பெருங்குளம் கிராமம்.
பிற்பகல் 3 மணி வேளை. முத்துவின் வீட்டுக்கு எதிரில்
முத்துவும் தேவகியும் பேசிக்கொள்கிறுர்கள்.]

முத்து — தேவகி! அந்தக் கோரக் கிருத்தியங்களெல்லாம் முடிந்தனவா ?

தேவகி — ஆம், நேற்று ராத்திரிதான் செம்மிளகு ஹோமம் செய்தார்கள். கடைசிச் சடங்குகளும் செய்து முடித்தார்கள். அச் செம்மிளகை நெருப்பிற் போட்டபோது உண்டான நாற்றம் பொறுக்க முடியவில்லை. தலைகால் தெரியாமற் குடித்

துக் கண்ட மாமிசங்களைத்தின்று மதர்த்திருந்த அந்த நான்கு பேயாடிகள் மாத்திரமே பொறுத்துக் கொண்டார்கள்.

முத்து — இரண்டாம் நாளும் மூன்றும் நாளுங் கூட மிருகபலி கொடுத்தார்களாமே, கொடுத்தார்களா?

தேவகி — ஆம், நடந்தது.

முத்து — அந்தப் புலாற் புசிப்பும் கட்குடியும் எவ்விடத்தில்?

தேவகி — பிசாசுகள் நான்கு வரிசைகளாக நின்று பார்த்துக்கொண்டிருந்த அந்தக் கூடத்திலே தான்.

முத்து — கோரம்!

தேவகி — மகா கோரம்! ரகுராமனைப் போன்ற பிராமணன் ஒருவன் இப்படியெல்லாம் செய்வானென்று யார் நினைப்பார்? அவன் இதோடு முற்றும் மூழ்கிப் போய்விட்டான். ரூ. 200 பெறுமான பாத்திரங்களை அடகுவைத்துச் சங்கரனிடம் ரூ. 86-15-0 கடன் வாங்கினன், மீனாக்ஷியிடம் இருந்த ரூ. 160 பெறுமான ஒரேயொரு பெருநகையை வைத்துக் கோவிந்தனிடம் மற்றொரு ரூ. 86-15-0 வாங்கினன். கடைசியாக ரூ. 150 பெறுமான தன் வீட்டையும் கொல்லையையும் ஈசுவரனிடம் வைத்து ரூ. 64-15-0 வாங்கி இருக்கிறான்.

முத்து — சங்கரனிடமிருந்து ரூ. 100-உம், கோவிந்தனிட மிருந்து ரூ. 100-உம், ஈசுவரனிட மிருந்து ரூ. 75-உம் வாங்கினனென்று கேள்விப் பட்டேனே.

தேவகி — ஆம், இவை பத்திரத்தில் எழுதிக் கொடுத்த பணத்தொகைகள். அவன் கைக்கு வந்த பணத்தை மாத்திரம் சொன்னேன்.

முத்து — அவன் என்றைக்காவது இந்தக் கடன் களைத் தீர்க்க முடியுமா ?

தேவகி — என்ன, பைத்தியமா! அவன் ஒரு காசு கூட ஒரு நாளும் திருப்பிக் கொடுக்க முடியாது. பாத்திரங்களும் நகையும் வீடும் அந்த ஸௌகார் களின் வயிற்றை நிரப்புவதற்கேயாகும்.

முத்து — அந்தப் பிசாசுப் பொம்மைகள் கூடத் திலேயே இன்னும் இருக்கின்றனவா ?

தேவகி — ஆம், ஒன்றோடொன்று பார்த்துக் கொண்டு அவை நான்கு வரிசைகளாக நிற்கின் றன. அவ்விடத்திலிருந்து அவைகளை நீக்குகிறவர் களுக்குச் சொல்லவொண்ணத துன்பங்களும் விபத் துக்களும் விளையுமென்று அந்தப் பேயாடிகள் சொல்லுகிறார்கள். வெயிலும் காற்றும் மழையும் பட்டு அவை தாமாகவே கரைந்து போகவேண்டுமாம்.

முத்து — அதாவது, கூரை கீழே விழுந்து, வீடு பாழாய்ப் போகிறவரையில் அவை இருக்கவேண்டு மென்பதாம்.

தேவகி — ஆமாம்.

முத்து — ஈசுவரனுக்கு லாபம் வருமென்று தோன்றவில்லை.

தேவகி — அவனைக் காட்டிலும் சங்கரனும் கோவிந்தனும் அதிக லாபம் அடைவார்கள்.

முத்து — இனி இப்போது ரகுராமனும் மீனாட்சி யும் என்ன செய்யப் போகிறார்கள்?

தேவகி — இந்த ஊரைவிட்டு ஓடிப் போவார்கள். இந்த ஊரில் எல்லாரும் அவர்களுக்கு அதிகப் பகை யாய் விட்டனர்.

முத்து — அவர்கள் தம் தலையில் தாமே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டார்கள். எந்த ஊருக்குப் போவதாக இருக்கிறார்கள்?

தேவகி — அது இன்னும் நிச்சயமாகவில்லை. மீனாட்சி தன் தமையன் வீட்டிற்கு ஒருவேளை போகக் கூடும், ரகுராமன் உத்தியோகம் தேடி ஊரூராகத் திரியலாம்.

முத்து — என்ன துர்க்கதி! ரகுராமனுக்கு வந்த கேடு எவ்வளவு துக்ககரமானது! இந்தப் பேய்ச் சடங்குகளைச் செய்யுமுன் அவனுக்கு உத்தியோகம் ஒன்றும் இல்லாவிட்டாலும், சிராத்தங்களில் பிராம ணார்த்தம் சாப்பிட்டுக்கொண்டும் *ஸத்திகளில் போஜ னம் செய்துகொண்டும் சுமாராக நன்றாகவே கால

* ஸத்தி = சமாராதனை.

க்ஷேபம் செய்துவந்தான். இப்போது அந்தக் குடும்பமே அழிவதற்காயிற்று. பிசாசுகளை ஆராதிக்கிறவர்களுடைய கதி இதுதான்.

தேவகி — அவர்கள் இருவரையும் நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இந்த வயதில் அவர்கள் நிற்க நிழல் இல்லாமல் தின்னச் சோறு இல்லாமல் உழல வேண்டிவந்தது பெருந்துன்பம். இதைக் காட்டிலும் பெரிய விபத்து வேறு உண்டோ? பிசாசுகள் தீமை செய்யக் கூடுமென்று இதுவரையில் நான் நம்பவில்லை. இவர்கள் இருவருக்கும் பிசாசுகளினால் உண்டான கேட்டைக் கண்ணாரக் கண்டபின் என் அபிப்பிராயத்தை நான் மாற்றிக்கொள்ள வேண்டியவளாகிறேன்.

முத்து — நல்லது, நான் இப்போது சேஷியின் வீட்டுக்குப் போகவேண்டும்.

(திரை.)

அங்கம் - 3.

களம் - 1.

[ரகுராமன் வீடு — மாலை 4-மணி வேளை. ரகுராமனும் மீனாட்சியும் லக்ஷ்மியும் கூடி ஆலோசிக்கிறார்கள்.]

ரகுராமன் — சடங்குகளெல்லாம் முடிந்தன. இன்னும் பயன் ஒன்றும் தெரியவில்லையே.

மீனாட்சி — சடங்குகள் நேற்றே முடிந்தன. இன்றைக்கே பயன் எதிர்பார்க்கலாமோ? பிசாசுகள் வேலை செய்வதற்குக் கொஞ்சமாவது அவகாசம் வேண்டும். அப்படித்தான் அல்லவா, லக்ஷ்மி?

லக்ஷ்மி — அப்படித்தான் ஆகவேண்டும்.

ரகுராமன் — நம்முடைய பணமெல்லாம் போய்விட்டது. நம் வீடு உள்பட எல்லாப் பண்டங்களையும் அடகு வைத்து விட்டோம். யோக்கியமானவர்கள் நம் வீட்டில் குடியிருப்பதற்கு இது உதவாதாயிற்று. நமக்குள்ள ஸர்வஸ்வமும் பிசாசுகளுக்காகச் செலவிட்டு விட்டோம். அவை நமக்கு உடனுக்குடனே பிரதிபலன் கொடுக்கமாட்டாவெனத் தோன்றுகிறது. இராத்திரிச் சமையலுக்குக்கூட வீட்டில் அரிசி இல்லை.

மீனாட்சி — என் காதுத் தோடுகள் இருக்கின்றன அவை 15 அல்லது 20 ரூபாய் பெறும். லக்ஷ்மீ!

இவைகளைக் கொண்டு போய் ஒரு கடைக்காரனிடம் வைத்து, அவைகளின்மீது அவன் எவ்வளவு கடன் கொடுப்பனே அவ்வளவு வாங்கிக்கொள். ஐந்து ரூபாய்க்கு அரிசி வாங்கிக்கொள், ஒரு ரூபாய்க்குச் சில்லறைச் சாமான் வாங்கிக்கொள். பாக்கி ரூபாயை ரொக்கமாகக் கையிற் கொண்டுவா.

லக்ஷ்மி — மீனாட்சி ! நீயே கொண்டுபோய் அவைகளை அடகு வைக்கவேண்டும். நான் கொண்டு போனால் அவர்கள் அடகு வைத்துக்கொள்ளமாட்டார்கள். சொத்து உன்னுடையதாதலால் அதை நான் அடைமானம் வைப்பது சட்டத்திற் கேற்காதென்று அவர்கள் சொல்வார்கள். நீ வந்தால் உன்னுடன் நானும் வருகிறேன்.

மீனாட்சி — சரி, நான் இதோ வருகிறேன். (ரகுராமனை நோக்கி) நாங்கள் சீக்கிரம் திரும்பி வருகிறோம். (மீனாட்சியும் லக்ஷ்மியும் போகிறார்கள்.)

ரகுராமன் — (தனக்குத்தானே) நான் பேயுலகவாசியானேன். குட்டிச்சாத்தானையும் அவனுடைய கிங்கரர்களையும் பற்றியே கனவு காண்கிறேன். அவர்கள் என்னென்னவோ இரத்தங்களையும் சாராயங்களையும் குடிக்கிறதாகக் காண்கிறேன். நேற்றுக் குட்டிச்சாத்தான் என் இரத்தத்தை உறிஞ்சுவதாகக் கனாக்கண்டேன். அந்தப் பேயரசன் போகும்போது என் மூளையையும் பிடுங்கி யெறிந்தான். அக்கனவின் அர்த்தம் என்னவோ தெரிய

வில்லை. நல்லது, அதைப்பற்றி அதிகமாக ஆலோசிப்பதிற் பயன் இல்லை. யோசனை பண்ணப் பண்ணத் துன்பம் ஏற்படுகிறது. என் மூளை சலித்துச் சோர்ந்து போயிற்று. இனி உள்ளே போகிறேன்.

(திரை.)

களம் - 2.

[பெருங்குளம் கிராமம் — ஈசுவரன் வீடு — மாலை 6-மணி வேளை. ஈசுவரனும் ராமனும் வருகிறார்கள்.]

ஈசுவரன் — (கலக்கமுற்று) ராமா! அது நிசந்தானா? அந்தச் சண்டாளன் வீட்டை எனக்கு ரூ. 75-க்கு அடகு வைத்த பிறகு கூரை விட்டத்தை அடுப்பு விறகுக்காகப் பிடுங்கிப் போட்டு விட்டானாமே?

ராமன் — நான் என் கண்ணாலேயே பார்த்தேன். இன்னும் பிடுங்கிக்கொண்டிருக்கிறான்.

ஈசுவரன் — ஓ தெய்வமே! இது சட்டத்தை யெல்லாம் மீறினது. துரோகத்திற் பெருந்துரோகம். மோசத்திற் படுமோசம். இதை நிறுத்தவேண்டும். வா, நாம் போய் அந்த அக்கிரமக் காரியத்தைத் தடுப்போம்.

ராமன் — நான் வரமாட்டேன். ஏற்கெனவே, அவர்கள் என்மீது மிக ஆக்கிரகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீ போய் வருகிற வரையில் நான் இங்கே காத்திருக்கிறேன். (ஈசுவரன் ரகுராமன் வீட்டுக்கு ஓடுகிறான்).

ராமன் — (தனக்குத்தானே) பேராசை பிடித்த இந்த ஸௌகார் இப்போது சிக்கான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டான். (ஈசுவரன் வேகமாக ஓடி வருவதைக் காண்கிறான்). ஆனால், இந்த ஈசுரவன் ஏன் இவ்வளவு கடுவேகமாக, நெற்றி வேர்வை சொட்டத் திரும்பி வருகிறான்? (உரக்க) என்ன ஐயா, ஈசுவரா! என்ன சங்கதி?

ஈசுவரன் — (சற்று நிதானித்து) பிசாசுகளைப்பற்றி ஏன் எனக்கு நீ சொல்லவில்லை? பலமாகத் தடுத்து—ரைக்கவேண்டு மென்று வீட்டுக்குள் போனேன். போன அவசரத்தில் அந்தக் கூடத்தில் வைத்திருந்த கோரமான குட்டிச் சாத்தான் பிரதிமை யொன்றின் மீது இடறிவிழுந்தேன். விழுந்த இடத்தில் நான்கு வரிசைப் பிசாசுகள் ஒன்றை யொன்று பார்த்துக் கொண்டிருந்தன. அந்த இடமெல்லாம் கோழி இரத்தமும், ஆட்டு இரத்தமும், எருமை இரத்தமும் படிந்து கறுத்திருந்தது. அதிலிருந்து உண்டான நாற்றம் நரக நாற்றமாயிருந்தது. ஐயோ! அந்தப் பதினாறு கொடிய பேய்களும் பயங்கரமான முகமுடையவை, நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தன. அவற்றின் பற்கள் வளைந்திருந்தன. பாதங்கள் பின் நோக்கித் திரும்பியிருந்தன. நரக தரிசனம் கண்டது போலாயிற்று. அயர்ந்து ஒடுங்கி அடங்கின தைரியத்தை மெல்லக் கைக்கொண்டு, தப்பிப் பிழைத்தேனென்று தடபுடலாக இரண்டேயடி வைத்து வாசற்படியைத் தாண்டி வந்

தேன். அங்கே பிடித்த ஓட்டம் இங்கே வந்து தான் நின்றது.

ராமன் — நீ பார்க்கப்போன விட்டங்களின் செய்தி என்ன ?

ஈசுவரன் — விட்டங்கள் பாழாய்ப் போகட்டும். என் உடலை நான் முதலிற் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். பணம் எப்போது வேண்டுமானாலும் வரும், உயிர்வருமோ? வராது. இன்னும் ஒரு நிமிஷம் அங்கே தாமதித்து இருப்பேனானால் அந்தப் பிசாசுகள் என்னைக் கொன்று விட்டிருக்குமென்பது நிச்சயம்.

ராமன் — பார்க்கப் போனால் அவையெல்லாம் மண் பொம்மைகளே.

ஈசுவரன் — நான் செய்தபடி நீ அந்தக் கூடத்திற்குப் போய்ப்பார். உன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வாய்.

ராமன் — அங்கே போக எனக்குப் பிரியம் இல்லை. இதோ பார் நாராயணன் வந்துகொண்டிருக்கிறான். (நாராயணன் வருகிறான்.)

நாராயணன் — ராமா! ரகுராமனும் மீனாட்சியும் நாளை இந்த ஊரைவிட்டுப் போகிறார்களாமே. அந்தச் செய்தி கேட்டையோ ?

ஈசுவரன் — உனக்கு இது யார் சொன்னார் ?

நாராயணன் — ரகுராமனே சொன்னான்.

ஈசுவரன் — எந்த ஊருக்குப் போகிறார்கள்?

நாராயணன் — மீனாட்சி பள்ளஞ் சாத்தனூரி லுள்ள தன் தமையன் வீட்டுக்குப் போகிறாள்; ரகுராமன் எங்கேயாவது வேலை பார்த்துக்கொள்ள அலையப்போகிறான்.

ஈசுவரன் — அவன் போகுமுன், கடன் கொடுத்த வர்களுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கப் போகிறதில்லையா?

நாராயணன் — கடன் தீர்ப்பதற்கு அவன் கையில் ஒன்றும் இல்லை. பாத்திரங்களையும் நகை களையும் வீட்டையும் அந்தந்தக் கடன் கொடுத்தவர் களுக்கே விட்டுப்போக நினைத்திருக்கிறார்.

ஈசுவரன் — இம்! பேய் குடிகொண்ட அந்த வீட் டுக்கும் கொல்லைக்கும் ரூ. 75. யார் கொடுப்பார்?

ராமன் — ஆயிரம் பேர் கொடுப்பார்கள். அந்த வீட்டையும் கொல்லையையும் ரூ. 75-க்கு எனக்கு விற்று விடுகிறாயா, சொல். நாராயணன் எதிரிலேயே பேரத்தை முடித்துக்கொள்வோம்.

ஈசுவரன் — எனக்குச் சேரவேண்டிய லாபம் என்ன ஆகிறது?

நாராயணன் — ஸௌகார்கள் செய்கிற வேலை இதுதான்.

ஈசுவரன் — சங்கரனுக்கும் கோவிந்தனுக்கும் வருகிற பெரிய லாபத்தை எண்ணிப் பார். அதோடு

ஒப்பிட்டுப் பார்த்தால் என் லாபம் எந்த மூலே? அந்தப் பாத்திரங்களே இரண்டு நாள் விருந்திற்கு இரவல் கொடுத்துச் சங்கரன் ரூ. 15 சம்பாதித்தான்.

நாராயணன் — அப்படி இரவல் கொடுப்பது சட்டத்திற்கு விரோதமல்லவா?

ஈசுவரன் — போ! சட்டதிட்டங்களே எந்த ஸௌகார் கவனிக்கிருன்? அவனே சட்டம், அவன் செய்வதே சரி. எளிய கடன்காரன் அவன்மீது வழக்குத் தொடர முடியுமா? வழக்குத்தொடர அவன் பணம் புரட்டிச் சேகரித்தாலும் சாக்ஷியம் ஏது? இப்படி யில்லாவிட்டால் மிகச் சாக்கிரதையாக விவகரிக்கிற கோவிந்தன் தன்னிடம் ரகுராமன் அடகுவைத்த தங்கச் சங்கிலியைத் தன் மனேவிக்குப் போட்டு வைப்பாஞ?

நாராயணன் — ஸௌகாரர்களாகிய நீங்கள் வெகு கெட்டிக்காரர்கள்.

ஈசுவரன் — அப்படி யில்லாவிட்டால் நாங்கள் பிழைக்கமுடியாது.

நாராயணன் — நீங்கள் உங்கள் வட்டி வீதத்தைக் குறைத்துச் சரஸமாகக் கடன் கொடுப்பீர்களானுல் உங்களுக்கு இதைக் காட்டிலும் வியாபாரம் நன்ருக நடைபெறும்.

ஈசுவரன் — அப்படி யன்று. எங்களுடைய மூலதனம் மிகச் சொற்பம். அதைப் பியாங்கு வட்டிக்குக் கொடுத்தாற் கட்டாது. எங்களிடத்தில் கடன்

வாங்க வருகிறவர்களை நம்பினால் மோசம் போய் விடுவோம்.

இதோ அங்கே வருகிறது ரகுராமன் அல்லவா? அவன் எதற்காக வருகிறான்? (ரகுராமன் வருகிறான்).

ரகுராமன் — பேயரசனாகிய குட்டிச்சாத்தான் மிகப் பெரியவன். அவன் என் இரத்தத்தை உறிஞ்சினான். உன் ரத்தத்தையும் உறிஞ்சுவான்.

ஈசுவரன் — ஓ, என்னைப் பிசாசின் வசமாக்குவதற்கு இந்தப் பாபி இங்கே வந்திருக்கிறான். நான் உள்ளே ஓடிப்போகிறேன். (வீட்டிற்குள் ஓடிப்போய்க் கதவைத் தாளிட்டுக் கொள்கிறான். ரகுராமன் கதவினண்டை ஓடி அதைப் படபடவென்று தட்டி, 'ஈசுவரா! பேயரசனாகிய குட்டிச்சாத்தான் மிகப் பெரியவன். அவன் என் இரத்தத்தை உறிஞ்சினான். உன் இரத்தத்தையும் இப்போது உறிஞ்சப் போகிறான்' என்று கூவினான்).

ஈசுவரன் — (வீட்டிற்குள் இருந்து) ஓ நாராயணா! ஓ ராமா! இந்தப் பயங்கரமான ஆளை அப்பாற் கொண்டுபோங்கள். கோபாவேசத்தில் நான் மிதித்த பேயினால் அவன் அனுப்பப்பட்டிருக்கிறான். அது சந்தேகம் இல்லை. அவனை நீங்கள் அப்புறப்படுத்தா விட்டால், அவன் என் இரத்தத்தை உறிஞ்சுவானென்பது நிச்சயம்.

ரகுராமன் — அந்தக் காரியம் நான் செய்வேன். உன் இரத்தத்தையெல்லாம் உறிஞ்சி உன்னை வாட்டித் தோலும் சதையும் எலும்பும் மாத்திரம் பாக்கியாக விடுவேன்.

ஈசுவரன்—(வீட்டிற்குள் இருந்தே) ஓ, வேண்டுமானல் விட்டங்களை யெல்லாம் எடுத்துக்கொள். ஆனல், என் இரத்தத்தை உறிஞ்சி வற்றச் செய்யாதே. மேல் மாடிக்கு ஓடி நான் உன் வெருட்டல்களுக்குத் தப்பித்துக் கொள்வேன். (மாடிக்கு ஓடுகிறுன்)

நாராயணன் — (ரகுராமனை நோக்கி) ரகுராமா, உனக்கு என்னவாயிற்று, பைத்தியமா ?

ரகுராமன் — வா, ஈசுவரனுடைய இரத்தத்தை நான் உறிஞ்சட்டும்.

நாராயணன் — இவனுக்கு நிச்சயமாகப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது. ராமா இங்கே வா. இவனுடைய ஒரு கையை நீ பிடித்துக்கொள். நாம் இருவருமாக இவனை வீட்டிற்குக்கொண்டு போய்ச் சேர்ப்போம். (நாராயணனும் ராமனும் ரகுராமனைப் பிடித்துக்கொண்டு சிறிது தூரத்திற்கப்பாலுள்ள அவன் வீட்டுக்குப் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு போகிருர்கள்).

ஈசுவரன் — (கதவைத் திறந்துகொண்டு தனக்குத்தானே) கடவுள் வாழ்க! என்னவானுலும், நாராயணனும் ஒரு காரியத்துக்கு உபயோகப் பட்டான். என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வதற்கு அவன் தான் துணிவு கொண்டான். வேதாந்தம் பேசுகிறவர்களும் ஒரு சமயத்திற்கு உபயோகப்படுகிருர்கள். அவர்கள் தேவர்களைப் பற்றியும் பூதங்களைப் பற்றியுமே கவனிக்கிருர்கள். ஆகையால், பேய்களைக் கண்டு நாம் எவ்வளவு பயப்படுகிறேமோ அவ்வளவு

அவர்கள் பயப்படுகிறதில்லை. இதோ நாராயணனும் ராமனும் வருகிறார்களே.

(நாராயணனும் ராமனும் வருகிறார்கள்.)

ஈசுவரன் — அவனைப் பிடித்துப் பத்திரமாக அவன் வீட்டிற்குள் தள்ளி விட்டீர்களா?

நாராயணன் — தள்ளி விட்டோம். நீ எவ்வளவு பயங்காளி, ஈசுவரா!

ஈசுவரன் — நீ வேதாந்தி, நான் வேதாந்தி யல்ல. உன்னைக் காட்டிலும் அதிகமாக நான் (என்தோலையும் ரத்தத்தையும்) என் உடம்பைக் காப்பாற்றிக்கொள்ளப் பார்க்கிறேன். இன்றைக்கு என் உயிரைக் காப்பாற்றியதற்காக உனக்கு நான் நன்றி பாராட்டுகிறேன்.

நாராயணன் — போ! உன் உயிருக்கு ஒருபோதும் ஆபத்து நேரவில்லையே. உனக்குக் கொடுக்க வேண்டிய கடன் தொகைக்குப் பதிலாகத் தன் வீட்டையும் கொல்லையையும் எடுத்துக் கொள்ளும்படி உன்னைக் கேட்கவே அவன் வந்தான்.

ஈசுவரன் — உனக்கு யார் சொன்னார்?

நாராயணன் — அவன் மனைவி மீனாட்சி சொன்னாள்.

ஈசுவரன் — என்னுடைய ரூ. 75. பணத்திற்காக அந்தப் பேய் பிடித்த வீட்டையும் கொல்லையையும் வாங்கிக்கொண்டு நான் திருப்தியடையமாட்டேன். அவன் நாளைக்குப் புறப்பட்டுப் போகும்போது அவ

னுடைய பண்டங்கள் வேறு சிலவற்றையும் பிடித்துக் கொள்வேன்.

நாராயணன் — (ஒருபுறமாக) இவனுடைய பேராசையைச் சீக்கிரத்தில் அடக்குவேன். (ஈசுவரனை நோக்கி உரத்து) அப்படியானல் அவன் உன் இரத்தத்தை அடியோடு உறிஞ்சி விடுவானென்பது நிச்சயம்.

ஈசுவரன் — நீயும் அப்படி நினைக்கிருயா? அப்படியானல் நாளை நான் அந்த வழிபோக மாட்டேன், அவன் கிராமத்தைவிட்டுப் போகிற வரையில் போக மாட்டேன். கொஞ்ச ரூபாயைக் காட்டிலும் என் தேகம் அதிகவிலை பெறும்.

நாராயணன் —(ஒருபுறமாக) நான் பண்ணின யுக்தி நன்ருகப் பலித்தது. (ஈசுவரனை நோக்கி, உரத்து) இனி நான் வீட்டிற்குப் போகவேண்டும்.

ராமன் — நானும் போகவேண்டும்.

(நாராயணனும் ராமனும் போகிருர்கள்).

ஈசுவரன் — (தனக்குத்தானே) இவர்கள் நல்லபிள்ளைகள், அதில் நாராயணன் மிக நல்லவன். இப்போது நான் வீட்டிற்குள் போய்க் கதவைமூடித் தாழ்ப்பாள் போட்டுக்கொள்ள வேண்டும். என் இரத்தத்தை உறிஞ்சுவதற்குக் குட்டிச்சாத்தான் திரும்ப ரகுராமனை அனுப்பமாட்டானென்று எப்படிச் சொல்லக் கூடும்? இனி அவன் வந்தால் நாராயணனும் இருக்க மாட்டான், ராமனும் இருக்கமாட்டானே. (உள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக் கொள்கிருன்).

களம் - 3.

[இரண்டு மாதம் கழிந்த பின் தேனூர் கிராமம் கோபாலன் வீடு. மாலை 10 மணி வேளை. கோபாலனும் ஜானகியும் வருகிறார்கள்.]

ஜானகி — (கசந்து அழுதுகொண்டு) ஓ! என்கண் மணியே குழந்தாய்! என் சுந்தரம். எங்களைத் திடீரென விட்டு ஏன் போனாய்? நாதா இதெல்லாம் உங்கள் தம்பியும் தம்பி ஆமுடையாளும் செய்த மந்திரப் பிரயோகத்தின் பயனாகும். அப்படியில்லாவிட்டால் சுந்தரம் பட்டம் பகலில் கிணற்றுக்குள் விழுவானேன், ஒரு குரல்கூடக் கூவாமல் இறந்து போவானேன். ரகுராமனுக்காவது மீனாட்சிக்காவது நாம் ஒரு தீங்கும் செய்யவில்லையே. அவர்கள் ஏன் நமக்குக் கெடுதி செய்யவேண்டும். குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்குள்ளாகவாவது நம் குழந்தைகளி லொன்று மரிக்கு மென்று மீனாட்சி எல்லாருக்கும் சொல்லிக்கொண்டே இருந்தாள். அவர்கள் அந்த அபிசாரப் பிரயோகம் செய்து இன்னும் இரண்டு மாதங்கள் ஆகவில்லை. அதற்குள்ளாக நம் குழந்தைகளில் ஒருத்தன், ஆசைக் குழந்தை சுந்தரன், இறந்து போய்விட்டான். அந்தப் பேய்களே இந்தக் கொலை செய்துள்ளன வென்பதற்குச் சந்தேகமா!

கோபாலன் — இந்த மரணத்திற்குக் காரணம் பிசாசுகளல்ல. அவனைத் தம்மிடம் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டுமென்று கடவுள் சங்கற்பித்தார். அதுதான்.

ஜானகி — இவ்வளவு இளம் வயதில் சுந்தரத்தை ஏன் கடவுள் தம் திருவடி சேர்த்துக்கொண்டார்.

கோபாலன் — அது தேவரகசியம். நாம் விள்ள முடியாது. காரணம் இல்லாமற் கடவுள் அப்படிச் செய்திருக்கமாட்டார். பிசாசுமந்திரங்கள் எவருக்கும் எவ்விதத் தீமையாவது நன்மையாவது செய்ய முடியாது என்பது ஒன்றே நான் சொல்லக்கூடும். ரகுராமனும் மீனுட்சியும் என்ன கதிக்கு வந்திருக்கிருர்கள், பார். பண்டங்கள் போச்சு, நகைகள் போச்சு, நாணயங்கள் போச்சு, வீடு போச்சு, வாசல் போச்சு, நிற்க நிழல் இல்லை, உடுக்கத் துணி இல்லை, தின்னச் சோறு இல்லை. பிசாசுகள் தங்களை ஆராதிக்கிறவர்களுக்கு நன்மையும் அவர்களின் விரோதிகளுக்குத் தீமையும் செய்வது உண்மையானல், இவர்களுக்கு இந்தக் கதி ஏன் வரவேண்டும் ?

ஜானகி — ஆனல், பிசாசுகள் தீமையே செய்யுமல்லாமல், நன்மை செய்யாவென்று எல்லாருக்கும் தெரியுமே.

கோபாலன் — சிவன் செத்ததையும், செல்லப்பன் செத்ததையும் பார். அவர்களுடைய சாவுக்குத் தெய்வமே யல்லாமல் வேறு யார் காரணமாவர் ? அப்படி யிருந்தும், மந்திரம்பண்ணி நாம் அவர்களைக் கொன்று விட்டோமென்று ரகுராமனும் மீனுட்சியும் சொல்லுகிருர்கள், அப்படியே நம்பி யிருக்கிருர்கள் போலும்.

ஜானகி — (அழுதுகொண்டு) என்ன படு பொய்!

கோபாலன் — மூடபக்தியுள்ள ஜனங்கள் இப்படித்தான் சொல்வார்கள். அவர்கள் தங்களுக்குள்ள துரபிமானங்களையும், தமக்கு இஷ்டமான அபிப்பிராயங்களையுமே பாராட்டிப் பேசுவார்கள். ஆனால், உண்மை தெய்வத்துக்கே வெளிச்சம். வீணாக அழாதே. தெய்வதண்டனையை நாம் வணங்கி யேற்றுப் பொறுத்துக் கொள்ளவேண்டும். வா உள்ளே போவோம். இங்கே, வெளியே, குளிர்கிறது.

(திரை)

களம் - 4.

[மூன்று நாளைக்குப் பின், பள்ளஞ்சாத்தனூர் என்னும் கிராமம். கேசவன் வீட்டுத் தாழ்வாரம். மாலை 7-மணிப்பொழுது. கேசவனும், பாகீரதியும், மீனாட்சியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

கேசவன் — ரகுராமன் குறியில்லாமல் எங்கெங்கேயோ ஊரெல்லாம் அலைந்துகொண் டிருக்கிறான். முழுப் பைத்தியம் பிடித்துவிட்டது. குட்டிச்சாத்தானையும் மற்றப் பிசாசுகளையும் பற்றியே எல்லாரிடம் பேசுகிறான். அவர்களுடைய இரத்தத்தைக் குடிப்பேனென்று ஜனங்களைப் பயமுறுத்துகிறான்.

பாகீரதி — பிசாசுகள்தான் அவனை இந்தக் கதிக்குக் கொண்டு வந்தன. சாதுவான தன் தமையன் மீதும் மதனியின் மீதும் அநியாயமான சந்தேகங்கொண்டு ஆரம்பித்தான்.

மீனாட்சி — அப்போது நானும் அப்படித்தான் நம்பியிருந்தேன்; அந்த எண்ணத்தில் அவனுக்கு ஊக்கமும் ஊட்டினே னென்று சொல்லிக்கொள்ள எனக்கே வெட்கமாயிருக்கிறது. துர்மார்க்கனான ஜோஸியனும் கொடியவர்களான பேயாடிகளும் எங்கள் எண்ணத்தை ஊர்ஜிதப்படுத்தி என்னைத் தூண்டிவிட்டார்கள். நரகத்து நாய் போன்ற அந்த லக்ஷ்மிஎன்பவளும் சேர்ந்துகொண்டாள். அவர்கள் வார்த்தையைக் கேட்டு நான் செய்த காரியத்திற்கு இப்போது நிஜமாக வருந்துகிறேன். வீட்டை இழந்தேன், பாத்திரம் பண்டங்களை இழந்தேன், ஐயோ! கணவனையும் இழந்தேன். சாதுவான என் கணவனுக்குப் பிசாசுப்பித்துப் பிடிக்கச் செய்தனை. அவன் பைத்தியக் காரனாக அலைந்து திரிவதைப் பற்றி நான் கேள்விப்படும் போதெல்லாம் தற்கொலை செய்துகொள்ளலாமா வென்னும் எண்ணம் எனக்கு எழுகின்றது. ஏனெனில், அவனுடைய பைத்தியத்திற்கு நானே மூலகாரணம். அந்த வீடு இப்போதும் என்னுடையதாயிருந்தால், அந்தப் பிசாசுகளை நொறுக்கி நண்டு வண்டலாக்கி விடுவேன்.

பாகீரதி — அதைப்பற்றி இப்பொழுது நினைப்பதில் பிரயோசனம் இல்லை. சில நாளைக்குமுன்னால் கோபாலனுடைய குழந்தை சுந்தரம் கிணற்றில் விழுந்து இறந்துபோனு னென்று உனக்குத் தெரியுமே. அதற்கு நீயும் ரகுராமனுமே காரணமென்று அக்குழந்தையின் தாயார் சொல்லுகிறாள்.

மீனாட்சி — அது நியாயமே. இந்தச் சாவுக்குக் காரணம் நாங்களே. புத்தியில்லாமல் நாங்கள் செய்த க்ஷுத்திர மந்திரப் பிரயோகத்தினால் அந்தக் குழந்தை இறந்தது. நாங்கள் பெரும் பாவம் செய்தோமாதலால், கோபாலனும் ஜானகியும் எங்களைக் கொல்லட்டும்.

கேசவன் — அந்தச் சாவுக்குக் காரணம் நீங்களென்று கோபாலன் ஒருபோதும் சொல்லவில்லை.

மீனாட்சி — அவர் தேவப் பிறப்பு. சுந்தரம் இறந்து போவதற்கு நெடுநாள் முன்னரே, நான் செய்த துஷ்ட காரியத்திற்குப் பச்சாத்தாபப்பட்டு, அந்த அபிசார மந்திரப் பிரயோகம் பலிக்காமற் செய்ய வேண்டுமென்று நான் பகவானைப் பிரார்த்தித்தேன். ஆனால், அந்தப் பிசாசுகள் தமக்குத் தாமாகவே அவ்வெளிய குழந்தையைக் கொலை செய்தன. ஆயினும், ஒருநாள் நான் ஜானகியைப் பார்த்து, அவள் என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ள வேண்டும்.

பாகீரதி! உனக்கு நான் பெருங் கடன்பட்டிருக்கிறேன். கோபாலனுடைய குணத்தையும் ஜானகியின் குணத்தையும் உள்ளபடி சரியாக எடுத்துரைத்து நீ மனப்பூர்வகமாக நான் பச்சாத்தாபப் படும்படி செய்தாய். ஜோஸியர்கள், பேயோட்டிகள், மற்றுள்ள அயோக்கியப் புரட்டர்கள் ஆகிய இவர்களை நாடலாகாதென்று நன்றாக எனக்கு இடித்துரைத்தாய். கடவுளே! சுந்தரம் இறந்து போகாது

இருக்கலாகாதா! சிவனும் செல்லப்பனும் இறந்து போனதைப்பற்றி எவ்வளவு துக்கப்படுகிறேனே அவ்வளவு சுந்தரம் இறந்து போனதற்கும் துக்கப் படுகிறேன். ஐயோ, நான் சண்டாளி, கேடு கெட்ட சண்டாளி.

பாகீரதீ — அப்படிச் சொல்லாதே. எவனுகட் டும் எவளாகட்டும் மனம் மெலிந்து நொந்திருக்கும் போது வெறுக்கத்தக்க துஷ்ட காரியமொன்றைச் செய்துவிடுவார். உனக்குப் பெருநன்மை செய்தவர் களுக்கு நீ கொடிய பகைவினை செய்தாய். ஆனல், நம்பத்தகாத தொன்றை நம்பி நீ பிரமைகொண்டு அவ்வினை செய்தாய். வஞ்சக எண்ணமுள்ள துரோ கிகள் உன்னை அதில் தூண்டினர்கள். நீ உண்மை யாகப் பச்சாத்தாபப் பட்டனை. ஆகையால் இப் பொழுது உன்னை அவ்வளவு நிந்தித்துக்கொள்ளக் காரணமே இல்லை. ஒன்று மாத்திரம் நீ செய்ய வேண்டும். எந்த வலையில் விழுந்து மோசம் போவ தனல் முன்னிகழ்ந்த காரியங்கள் நேர்ந்தனவோ அந்த வலைகளில் விழாமல் இனி நீ தவிர்க்க வேண்டும்.

கேசவன் — மீனுட்சி! இதோ உன் அகமுடை யான் வருகிறுன். (மீனுட்சி பதட்டமுற்று அவசரமாக எழுந் திருக்கிறுள்.) (ரகுராமன் வருகிறுன்)

ரகுராமன் — (சந்தோஷமாக) பேயரசன் குட்டிச் சாத்தான் மிகப்பெரியவன். சுந்தரம் இறந்து போனுன்.

மீனுட்சி — பகவானே! என் புருஷனைப் பிடித்துக் கொண்டிருக்கிற பேய்களினின்றும் அவரை விடுவிப்பீராக!

ரகுராமன் — என் பிசாசுகளின் முன் பகவான் ஒன்றும் செய்யமுடியாது. என் பிசாசுகள் சுந்தரத்துக்குச் சாவு விளைத்தன, உன் பகவானல்ல.

மீனுட்சி — (*ரகுராமனுடைய வாயைத் தன் கையால் அடைத்துக்கொண்டு*) அப்படிப்பட்ட கொடூரமான வார்த்தைகளைச் சொல்லாதேயும். எளிய சுந்தரம் இறந்துபோனதற்குக் களிப்புற்றுக் குதிகொள்ளாதேயும்.

ரகுராமன் — (*போராடி அவள் கையைத் தன் வாயினின்றும் நீக்கிவிட்டு.*) உன் இரத்தத்தை உறிஞ்சுவேன், ஜாக்கிரதை! இந்தச் சுபவர்த்தமானத்தை உனக்குச் சொல்ல வந்தேன். நீ என் வாயை மூடுகிறுயே. நானே குட்டிச்சாத்தான், நானே சங்கிலிக் கருப்பன், நானே மாடன், நானே காட்டேரி, தெரியுமா?

பாகீரதி — இவனை பேய்ப்பித்து பிடித்து ஆட்டுகின்றது. ஓடிப்போகப் பார்க்கிறுன். நாதா, இவனைப் பிடித்து அடக்குங்கள்.

கேசவன் — (*ரகுராமனைக்கெட்டியாகப்பிடித்துக்கொண்டு*) ரகுராமா! உனக்கு என்ன ஆயிற்று? என்னைத் தெரியவில்லையா?

ரகுராமன் — நீ கொள்ளிக்கட்டையா?

கேசவன்—ஐயோ, தெய்வமே! நான் கொள்ளிக் கட்டை அல்ல. நான் கேசவன், உன் மைத்துனன்.

ரகுராமன் — என் மைத்துனனா? எனக்கு மைத்துனன் எவனுமில்லையே, என்னை விட்டு விடு. (விடுவித்துக்கொள்ளப் போராடுகிறான்.)

மீனாட்சி — நான் உங்கள் மனைவி. என்னைத் தெரிகிறதா?

ரகுராமன் — (உற்றுப் பார்க்கிறான்) ஆ, ஆம், தெரிகிறது. நீ என் மனைவி. நிச்சயமாக நீ என் மனைவியே. நீ பின் தாழ்வாரத்திலிருக்கிறாய், நான் முன் தாழ்வாரத்தி லிருக்கிறேன். உனக்கும் எனக்கும் இடையில் 16 பிசாசுகள் இருக்கின்றன. இனி நான் போகவேண்டும். பிசாசுகள் என்னை விளிக்கின்றன. ஹா! ஹா! நள்ளிரவில் சுடுகாட்டுக்குப் போய், அங்கே பிணங்கள் ஆனந்தமாகக் கொழுந்து விட்டு எரிவதைக் காண்பேன்! நான் போக வேண்டும் (விடுவித்துக் கொள்ள முண்டுகிறான்.)

மீனாட்சி — (கேசவனுக்கு உதவியாக அவனைப் பிடித்துக் கொள்கிறாள். நீர் போகக்கூடாது. உங்கள் பிசாசுகளை யெல்லாம் விட்டு விட்டு நீங்கள் இங்கேயே இருக்கவேண்டும். கோவில் மணிகள் ஒலிக்கின்றன).

ஆ, கோவில் மணிகள் அடிக்கின்றன. கடவுள் உம்மைத் திரும்ப ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறார். பிசாசுகளைவிட்டு நீங்கித் திரும்பிவந்து அவரைத் தொழும்.

ரகுராமன் — என்னை விட்டு விடுங்கள். நான் சுடு காட்டுக்குப் போய் அங்கே பிணங்கள் உல்லாஸமா யெறிந்துகொண் டிருப்பதைப் பார்க்கவேண்டும். (மூர்க்கமாகத் திமிறிப் போராடி, அவர்கள் கையை விடுவித்துக் கொண்டு ஓடிப்போகிறான். 'பேயாசனுகிய குட்டிச்சாத்தானே பெரியவன்' என்று கத்திக்கொண்டே போகிறான்).

மீனாட்சி — அவர் போய்விட்டார். திரும்பப் பேய்களிடம் போய்விட்டார் திரும்பச் சேர்த்துக்கொள்வேனென்று கடவுள் குறிப்பிடும் சமயத்தில் ஓடிப்போய் விட்டாரே. ஐயோ! என்ன செய்யட்டும்? (அழுகிறாள்)

கேசவன் — அழாதே. அவன் இந்தச் சமயத்திற் பேயினாற் பீடிக்கப்பட்டிருக்கிறான். அவனைத் திரும்ப ஆஸ்திகனாக்குவதற்குச் சிறிது காலம் செல்லும். ஆனால், ஏக்கங்கொள்ளாதே. நாளை நான் போய் அவனைத் தேடிப்பிடித்து அமைதியாக அவனை ஆற்றித் தேற்றத்தக்க இடத்திற்குக் கொண்டுபோகிறேன். இரண்டொரு மாதத்தில் அவன் தெளிந்து நன்றாகி விடுவான். பேய் வசப்படுவது எவ்வளவு எளிது, அந்தப் பீடையினின்றும் விடுவித்துக் கொள்வது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது! நாமெல்லோரும் இப்பொழுது உள்ளே போய்ச் சாப்பாட்டுக் காரியத்தைப் பார்ப்போம்.

மீனாட்சி — சாப்பாடா! சாப்பிட வேண்டுமென்கிறவர்கள் போய்ச் சாப்பிடுங்கள். எனக்கோ ஒரே ஒரு காரியந்தான். எனது அன்பான கணவன், என் பிராண நாதன், முன்னால் நான் செய்த தீச்செயலின்

நேர்ப்பயனுகப் பைத்தியக்காரனைப் போல அலைந்து கொண்டிருக்கிறார். இடைவிடாமற் பேய்களைப்பற்றியே பேசிக்கொண் டிருக்கிறார். அவர் எங்கே போனாலும் அவர்பின் போவதே என் கடமை. எந்த நன்னெறியினின்றும் தெய்வ பக்தியினின்றும் அவர் புரண்டு விலகும்படி செய்தேனே அந்த நன்னெறிக்கு அவரைத் திரும்பத் தரவேண்டும். ('பிராண நாதரே! நானும் வருகிறேன்' என்று கதறிக்கொண்டே ரகுராமனைப் பின்பற்றிப் போகிறாள்).

கேசவன் — (அவளைப் பிடித்து அடக்கிக்கொண்டு) அவன் பின்னல் நீ போவதனால் என்ன பிரயோசனம்? அமாவாசை யானதனால், காரிருள் மூண்டிருக்கிறது. அவனை நீ கண்டுபிடிக்க முடியாது. கண்டுபிடித்தாலும் பிரயோசனப் படாது. இப்பொழுது அவன் நெடுந்தூரம் போய்விட்டான். நீ சொல்வது அவன் காதுக்கு எட்டாது. வீட்டுக்குள் வா, திரும்பி வா.

மீனுட்சி — வரவே மாட்டேன்! பேரிருள் மூடிக்கொண்டிருந்தால் என்ன? எனக்குள் இருக்கும் இருளோடும், என் கணவனைச் சூழ்ந்துகொண்டிக்கிற இருளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த இருள் எனக்கு இருளேயல்ல. மனைவிக்குக் கணவன் இருக்கும் இடமே வெளிச்சமானது, அவன் இல்லாத இடமெல்லாம் இருட்டே. என்னைப் பாணிக்கிரகணம் செய்வித்த அக்கினி பகவான் நாங்கள் சேர்ந்திருக்கும் இடத்தில் வெளிச்சம் தருவார், நாங்கள்

பிரிந்திருக்கும்போது ஒளியை ஒளித்துவிடுவார். என் கணவனை நான் கண்டுபிடிக்க முடியாமற் போனல்தான் என்ன, கண்டுபிடித்தும் திரும்பிவர அவருக்குப் போதிக்க முடியாமற் போனல்தான் என்ன? பிரயத்தனப் பட்டேன் என்னும் திருப்தியாவது எனக்கு இருக்குமே. என்னை விட்டுவிடு. (போராடி விடுவித்துக்கொண்டு ஓடுகிருள்).

கேசவன் — ஐயோ பாவம், புத்தியில்லாதவள். இப்படி அவள் ஓடுவதனுலென்ன பயன்? ஸ்திரீகளுக்கு நியாயம் ஏற்காது. நியாயத்தை யெடுத்துச் சொன்னல் ஒருபோதும் கேட்கமாட்டார்கள்.

பாகீரதி — அவள் செய்கிற காரியம் பைத்தியக்காரத்தனமாய்த் தோன்றிய போதிலும் அவளுடைய நல்லெண்ணத்தை நான் பாராட்டுகிறேன், அவளுடைய தர்ம சிந்தனையைக் கொண்டாடுகிறேன், அவளைப் புகழ்கிறேன். ரகுராமனுடைய நிலைமையில் நீர் இருந்தால், மீனட்சி செய்தபடியேதான் நான் செய்வேன்.

கேசவன் — என் ஆசைநாயகி! அப்படியா செய்வாய்?

பாகீரதி — அதற்குச் சந்தேகம் என்ன?

கேசவன் — (அவளைக் கட்டி முத்தமிட்டுக் கொண்டு) எனக்கு நிரம்ப சந்தோஷம். தெய்வாதீனமாக நான் ரகுராமனுடைய நிலைமையில் இல்லை. இப்போது நான் ரகுராமனையும் மீனட்சியையும் தேடிப் போக

வேண்டும். காடாந்தகாரமான இந்த இருட்டில் மீனுட்சியைத்தனியே அலையவிடுவது நன்றல்ல.

பாகீரதி — அப்படிப் போகவிடுவது மானிடத் தன்மையல்ல, சகோதரத் தன்மைக்கும் ஏற்காது. இதோ ஒரு லாந்தரை யெடுத்துக் கொள்ளுங்கள், கொஞ்சம் கயிறும் எடுத்துக்கொண்டு போங்கள்.

(ஒரு லாந்தரும் கயிறும் அவன் கையிற் கொடுக்கிறுள்.)

கேசவன் — (அவைகளை வாங்கிக் கொள்கிறுன்) என் கண்ணே ! தனியே இந்த வீட்டில் நீ இருப்பாயா ? நான் திரும்பி வருவதற்கு வெகு நேரமாய் விடலாம்.

பாகீரதி — ஓ, அது 'பரவா' இல்லை. ரகுராமனை யும் மீனுட்சியையும் பற்றிய கவலையொன்றேதான் எனக்குக் கவலையாயிருக்கிறது.

கேசவன் — நான் வருவதற்கு நேரமாகுமாத லால் நீ போசனம் செய்துகொள்.

பாகீரதி — ஒருபோதும் சாப்பிடமாட்டேன். மனைவியாவாள் எவளும் அந்தக் காரியம் செய்ய மாட்டாள்.

கேசவன் — இந்த விஷயத்தில் நான் சொல்கிற படி நீ செய்யமாட்டாய்.

பாகீரதி — மாட்டேன்.

கேசவன் — அப்படி யிருந்தும், கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவளென்று நீ சொல்லிக் கொள் கிருய்.

பாகீரதி — ஆம், அப்படித்தான். கணவன் சொல்லிய போதிலும் அந்தப்படி மனைவி செய்யக் கூடாத காரியங்கள் சில உள.

கேசவன் — அப்படிப்பட்ட காரியங்களில் இதுவும் ஒன்று ?

பாகீரதி — ஆம். இனி நீர் போம்.

(கேசவன் போகிறான்.)

பாகீரதி — (இருட்டில் அவன் மறைந்து போகிற வரையில் பார்த்துக்கொண் டிருந்து தனக்குத்தானே) கணவனது காதலுக்கு உரியவளாய் இருக்கும் மனைவியே பாக்கியசாலி, மனைவிக்குற்ற உத்தம புருஷனாக விளங்கும் கணவனே பாக்கியவான். மருவிய காதன் மனையாளும் மணாளனும் கூடிய விடத்து துன்பம் குறையும், இன்பம் பெருகும். துன்பம் ஒன்று பாதியாகும் இன்பம் ஒன்று இரண்டாகும். ரகுராமன் பித்து தெளிந்து ஸ்வஸ்த புத்தி வாய்ப்பானாக! இனி நான் உள்ளே போய்க் கதவை மூடிக்கொண்டு அவர்கள் திரும்பி வருகிற வரையில் விழித்திருப்பேன் (உள்ளே போய் கதவை அடைத்துக் கொள்கிறாள்.)

(திரை.)

அங்கம் - 4.

களம் - 1.

[நாட்டுப் புறத்து நடைவழி — இரவு 10 மணிப் பொழுது—கேசவனும் மீனாட்சியும் நடந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். கேசவன் கையில் லாந்தர் இருக்கிறது].

கேசவன் — வீணாக நாம் இப்படித் தேடத் தலைப்பட்டுத் திட்டமுட்ட மூன்று மணி நேரமாயிற்று. இன்றிரவு இருட்டு நிரம்ப அதிகமாயிருக்கிறது. ஒரே இருட்டாய் மூடிக்கொண்டிருக்கிறது. போகிற வழி மிகக் கஷ்டமாயிருக்கிறது. என் காலில் எத்தனையோ முட்கள் தைத்திருக்கின்றன; எத்தனை கற்களின்மீது இடறி இடித்துக் காயப்படுத்திக் கொண்டிருக்கிறேன்! இரத்தம் ஒழுகிக்கொண்டிருக்கிறது. நாம் திரும்பிப் போவது நல்லதல்லவா?

மீனாட்சி — எனக்கு முள்ளுந் தோன்றவில்லை, கல்லுந் தோன்றவில்லை. பெரிய முள் என்னைக் குத்திக்கொண்டிருக்கிறது. அதன் முன்னால் இவையெல்லாம் இருக்கிற இடம் தெரியாது. அவரைக் கண்டுபிடிக்கிற வரையில் நான் திரும்பி வரமாட்டேன். நீ வேண்டுமானால் திரும்பிப் போ.

கேசவன் — இன்றிரவு நீ அவனைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் என்ன?

மீனுட்சி — இரவு முழுதும் தேடிப் பார்க்கிறேன்.

கேசவன் — என்ன யோசனை! (பெரிய கொட்டாவி விடுகிறுன்) என்னை யறியாமல் என் கண் மூடிக்கொள்கிறது.

மீனுட்சி — எனக்குக் கண் மூடிக்கொள்ளவில்லை. என் உள்ளுக்குள்ளே இருக்கிற விசாரம் மிக அதிகமாதலால், கண் உறங்காது.

கேசவன் — அவனைப்பற்றி எனக்கும் விசாரம் இல்லையா?

மீனுட்சி — உனக்கும் விசாரம் உண்டு. ஆனுல் அதில் ஒரு வித்தியாசம்.

கேசவன் — இதோ பார், திகிற்பட்டு யாரோ ஒருவன் நம்மை நோக்கி அவசரமாக ஓடி வருகிறுன். (கண் மூக்குத் தெரியாமல் வேகமாக ஒருவன் ஓடி வருகிறுன்).

யார், அப்பா! எங்கே இவ்வளவு வேகமாக ஓடுகிறுய்?

அந்த மனிதன் — ஓ தெய்வமே! இந்தப் பிசாசுகள் கையினின்றும் என்னைத் தப்புவி. குட்டிச்சாத்தான் கையினின்று நான் தப்பியோடி வந்தது இந்தக் கொள்ளிப் பிசாசுகளின் கையில் விழவா?

(ஓடுகிறுன்.)

கேசவன் — (முன்னுல் ஓடிப்போய் அவனைப் பிடிக்கிறுன்) நாங்கள் கொள்ளிப் பிசாசுகள் அல்ல, பயப்படாதே. நீ கண்டது என்னவென்று சொல்?

அந்த மனிதன் — (பயம் கொஞ்சம் தெளிந்தானாயினும், கடகடவென்று நடுங்கிக்கொண்டு) இங்கிருந்து 400 கெஜத்திற் கப்பால், ஆற்றில், இடுப்புமட்டும் ஜலத்தில் நின்றுகொண்டு, தான் குட்டிச்சாத்தா னென்பதாகவும், என் இரத்தத்தை உறிஞ்ச விரும்புவதாகவும் உரத்துக் கூவுவதைக் கண்டேன். (அவனுடைய பற்கள் கடகடவென்று நெரித்தன) நீ யாரேயாயினும், என்னை விட்டு விடு.

கேசவன் — பயப்படாதே, நீ பார்த்தது என் மைத்துனனே.

அந்த மனிதன் — (பலமாக முரண்டித் தன்னை அவன் கையினின்றும் விடுவித்துக் கொள்கிறான்) நான் நினைத்தபடியே இருக்கிறது. ஆகையால், குட்டிச்சாத்தானுடைய மைத்துனனாகிய கொள்ளிக்கட்டை நீயே. என் மனைவியின் வார்த்தையைக் கேளாமல் இந்த இருட்டு இராத்திரியில் நான் ஏன் வீட்டை விட்டுக் கிளம்பினேன்? ஓ, தெய்வங்காள்! என்னைக்காத்துதவுங்கள், என்னைக்காத்துதவுங்கள். (தன்னை விடுவித்துக்கொண்டு ஓடிப்போகிறான்.)

கேசவன் — இவன் இவ்வளவு திகிற் பிடித்திருப்பது அதிசயமன்று. எவனேயேனும் வேளையில்லாத இந்த வேளையில் காணுதலொரு கோரமான காட்சியைக் கண்டால் திகிலடையாது எப்படி யிருப்பான்? (மீனாட்சியைப் பார்த்து) வா, அந்த ஆற்றுக்குப் போவோம். இந்தத் தடவை அவனை நாம் விட்டுவிடக் கூடாது.

மீனாட்சி — அதற்கு நான் இருக்கிறேன். அட்டையைப் போல் அவனை ஒட்டிக் கொள்கிறேன்.

கேசவன் — நல்லது, அப்படியே யாகட்டும். கொஞ்சங்கூடச் சத்தம் செய்யாதே. நாம் வருகிற சாடை தெரிந்தால் அவன் ஓடிப்போவான். (அவர்கள் ஓசைப்படாமல் மெதுவாக அடிவைத்து நடந்து போகிறார்கள். ரகுராமன் ஆற்றின் நடுவில் இடுப்பு மட்டும் ஜலத்தில் அப்புறம் பார்த்துக்கொண்டு நிற்பதைக் காண்கிறார்கள்.)

ரகுராமன் — (கூவிக்கொண்டு) நான் குட்டிச்சாத்தான், பேயரசன். எனக்கு ஒரு வெள்ளாடு வேண்டும், ஒரு கோழி வேண்டும். ஆறுமாதத்துக் கர்ப்பக் கருவேண்டும். ஹா, ஹா, ஹா. வரிசைக்கு நான்காக நான்கு வரிசைகள். மொத்தம் பதினாறு. கோழி ரத்தமும், ஆட்டு ரத்தமும், எருமை ரத்தமும், சுந்தரத்தின் ரத்தமும் சொட்டிக்கொண் டிருக்கிறது. ஹா, ஹா, ஹா.

கேசவன் — (மீனாட்சியிடம் காதோடு சொல்கிறான்) பதறாமல் மிகவும் அமைதியாக இரு. நாம் ஓசைப் படாமல் பின்புறமாகப் போய் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வோம். (விளக்கைத் தணித்து வெளிச்சம் தோன்றாதவாறு, ஆற்றங்கரையில் ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு, ஜலத்தில் இறங்கி, சத்தமாகாதபடி மெதுவாக நீரில் நடந்துபோய், ரகுராமன்மீது பாய்ந்து அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறார்கள்).

மீனாட்சி — (கணவன் கைகளை மடக்கி இறுகக் கட்டிக்கொண்டு) இப்போது நீ என் கையில் அகப்பட்டுக்

கொண்டாய். நரக வாசிகளனைத்தும் சேர்ந்தாலும் உன்னைத் தப்புவிக்க முடியாது.

ரகுராமன் —(சுமையாகத் திமிறி மூரண்டுகிருன், ஆனால் விடுவித்துக்கொள்ள முடியவில்லை) என் தனிமையைக் கெடுக்கவந்த நீ யார்?

மீனாட்சி — நீ தாலி கட்டின பெண்ஜாதி மீனாட்சி.

ரகுராமன் — மாதே! என்னை விட்டுவிடு. நான் பிசாசுக்கே கட்டுப்பட்டவன்.

மீனாட்சி — அப்படியானால் அந்தப் பேய் நானே.

ரகுராமன் — நீ யன்று, நான் அடிமைப்பட்டுள்ள பிசாசு குட்டிச்சாத்தானே.

மீனாட்சி — அவனுக்குத் தைரியம் இருந்தால் தன் உரிமையை அவன் என்னிடம் வந்து ஸ்தாபித்துக் கொள்ளட்டும். இப்போது அவன் கால் பிளவுற்றிருக்கிறது. இங்கே வந்தால் அவன் மண்டையும் பிளவுறும்.

ரகுராமன் — (கேசவனைப் பார்த்து) நீ யார்?

கேசவன் — உன் மைத்துனன்.

ரகுராமன் — எனக்கு மைத்துனன் எவனும் இல்லையே.

கேசவன் — உனக்கு இல்லாவிட்டாலும் எனக்கு உண்டு. அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வா, மீனாட்சி! தப்பியோட விடாதே. (இருவரும் சேர்ந்து அவனைக் கரைக்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள்).

ரகுராமன் — (கடுமையாக முரண்டிக்கொண்டு) என் தியானமெல்லாம் கெட்டுப்போயிற்று.

கேசவன் — நல்லது. யதார்த்தம் இப்போது தான் தோன்றத் தொடங்குகின்றது. வேண்டிய மட்டும் நீ தியானம் செய்தாய்விட்டது. அதற்கு அதிகமும் செய்துவிட்டாய். அதுவரையிற் போதும். அதோ இருக்கிற மரத்தினண்டை அவனை இழுத்துக் கொண்டு போ (கரையில் இருக்கிற மரத்தினண்டை இருவருமாக அவனை இழுத்துக்கொண்டு போகிறார்கள்).

கேசவன் — (மீனாட்சியைப் பார்த்து) அவனை இறுகப் பிடித்துக்கொள்; நான் கொண்டுவந்திருக்கிற கயிற்றினால் அவன் கைகளைக் கட்டுகிறேன். (அவனை மீனாட்சி இடுக்கிபோலக் கெட்டியாகக் கட்டிக்கொள்கிறாள். அவனுடைய கைகள் இரண்டையும் பின்புறமாகச் சேர்த்து ஒரு கயிற்றினால் கேசவன் கட்டுகிறான். மற்றொரு கயிற்றின் நுனியொன்றை வலது கணுக்காலிலும், இரண்டாம் நுனியைத் தன் வலது கை மணிக்கட்டிலும் முடிகிறான்) இனி லாந்தரைக் கொண்டு வா. சீக்கிரம் கொண்டுவா. இனி நாம் போவோம்.

ரகுராமன் — (ஊளையிடுவது போலக் கத்துகிறான்) பாதகர்களா, உங்கள் இரத்தத்தை உறிஞ்சுகிறேன், பார்.

மீனாட்சி — (லாந்தரை எடுத்து வருகிறாள்) உன்னால் ஆகுமானால் எங்கள் இரத்தத்தைக் குடி. நாங்கள் பாதகர்களானால் நல்லவர்கள் யாரோ!

கேசவன் — இப்போது நாம் புறப்படுவோம். (மீனாட்சி விளக்குக் காட்ட, அவனைப் பிடித்து இழுத்துப் போகிறான்.)

திரை.

களம் - 2.

[மறுநாள் — பள்ளஞ்சாத்தனூர் — காலை 6-மணி பொழுது. தெருவில் — கேசவனும் வீரராகவனும் பேசிக்கொண்டே நடக்கிறார்கள்.]

வீரராகவன் — பேய் பிடித்த புருஷனுக்கு நான் சிகிச்சை செய்ய வேண்டி வந்தது இதுதான் முதல் தடவை. இது வரையில் நான் பார்த்து ரக்ஷை கட்டினவர்களெல்லாரும் ஸ்திரீகளே.

கேசவன் — ஆனால் என்ன? இவனைச் சொஸ்தப் படுத்த முடியாமற் போமோவென்று அச்சப் படுகிறாயா?

வீரராகவன் — இல்லை, இல்லை. பேய்கள் ஸ்திரீகளைப் பிடித்திருந்தாலும் புருஷர்களைப் பிடித்திருந்தாலும் அவைகளை ஓட்டிவிடுவேன். ஆனால், இவனைப் பற்றிய முன் அனுபவம் எனக்கு இல்லையென்பதொன்றே குறுக்கே நிற்கின்றது. ஆயினும் பயப்படாதே. பிசாசுகளுக்கு அனுகூலமான சந்தர்ப்பங்கள் எத்தனையிருந்தாலும் பயமில்லை. வீரராகவன் வெற்றிபெறுவது உறுதி. அவன் பெயரைச் சொன்னாலே வெற்றியென்று அர்த்தம்.

கேசவன் — அந்த வார்த்தை கேட்க எனக்குச் சந்தோஷமுண்டாகிறது.

வீரராகவன் — அவனை என்ன பேய்கள் பிடித்திருக்கின்றன வென்று நீ சொல்வாயா?

கேசவன் — அது நீ தெரிந்துகொள்ள வேண்டிய வார்த்தை. நான் எப்படிச் சொல்லமுடியும்? பேய்களைப்பற்றி எனக்கு என்ன தெரியும்?

வீரராகவன் — நான் சொல்லுகிறேன். பிசாசுகளைப் பெரியார் நான்குவிதமாக வகுத்திருக்கிறார்கள். முதலாவது, அவை வசிக்கிற இடத்தைப் பொருத்தது. அவை பஞ்ச பூதங்களிலொன்றில் இருக்கத் தக்கவை. ஆனதனால் இவ்வகுப்பினர் பிருதிவிப் பேய், ஜலப்பேய், தீப்பேய், வாயுப்பேய், ஆகாசப் பேய், எனப்படும். இரண்டாவது, அவைகளின் இயற்கைக் குணத்தைப் பொருத்தது. இதில் மூன்று தரங்கள் உண்டு — மேல்விழுந்து அடிக்கும் பேய்கள் (போர்களில் இவை முன்விழுந்து அடிக்கப் போகும்), தற்காத்து எதிர்க்கும் பேய்கள் (இவை போரில் முன்விழா. ஆனால், தங்களைக் காத்து எதிர்த்துத் திடமாக நின்று போர் புரியும்), பயங்காளிப் பேய்கள் (இவை சண்டைக்கும் போகா, நிலைநின்றும் எதிர்க்கா, சண்டையென்று சொன்னவுடனே பிளவுற்ற பாதங்களோடு ஓட்டம் பிடிப்பன). மூன்றாவது அவைகளின் செயற்கைக் குணத்தைப் பொருத்தது. இதில் நான்கு தரங்கள் உண்டு — தேவப் பேய்கள் (தேவதைகளோடு போர் புரிந்தவை), கின்னர கிம்புருஷப் பேய்கள் (இவை வீரர்களோடு போர் புரிந்தவை), கொடும் பேய்கள் (மற்றப் பேய்களோடு போர் புரிந்தவை), வெறும் பேய்கள் (தேவர்களோடேனும், யக்ஷகின்னராதிகளோடேனும், மற்றப் பேய்களோடேனும் போர் புரியாதவை). நான்காவது, இவை கண்ணுக்குப் புலப்படும் பேய்கள்; புலப்படாதனவாயினும் தெரிந்தவை; புலப்படாமலும் தெரியாமலும் இருப்பவை என்பனவாம்.

கேசவன் — புலப்படாமலும் தெரியாமலும் பேய்கள் எப்படி இருக்கும்?

வீரராகவன் — கண்ணுக்குப் புலப்படாமலும் இருக்கிறதென்று நமக்குத் தெரியாமலும் எத்தனையோ நக்ஷத்திரங்கள் இருக்கின்றனவென வான-சாஸ்திரிகளெல்லாரும் சொல்லுகிறார்களல்லவா?

கேசவன் — ஆம் சொல்லுகிறார்கள்.

வீரராகவன் — மந்திரவாதிகளாகிய நாங்கள் எதையும் முற்றும் ஆராய்ந்தறியாமல் ஏற்றுக்கொள்வதில்லை. ரகுராமனுக்குப் பிடித்திருக்கிற பேய்கள் என்னவென்று இப்போது சொல்.

கேசவன் — எனக்குத் தெரிந்தவரையில் குட்டிச்சாத்தான், சங்கிலிக்கருப்பன், மாடன், காட்டேரி என்பவைகளே.

வீரராகவன் — (பெருமூச்சு விட்டுக்கொண்டு) எங்கள் குலதெய்வமே! இத்தனை பிசாசுகளா ஒருவன்மீது? அவை எப்படிப்பட்டவை என்றாலோ, எல்லாம் முன் விழுந்து அடிப்பவை, எல்லாம் கொடும் பேய்கள், எல்லாம் கண்ணுக்குப் புலப்படத் தக்கவை. அன்றியும், குட்டிச்சாத்தான் என்பது ஆகாசப் பேய், சங்கிலிகருப்பன் வாயுப் பேய், மாடன் பிருதிவிப் பேய், காட்டேரி ஜலப் பேய். இவை இப்படியிருக்க பிரசித்தமான தீப்பேயென்னும் 'கொள்ளிக்கட்டை' குட்டிச்சாத்தானுக்கு மைத்துனன். குட்டிச்சாத்தானுக்கு அவன் வந்து உதவி செய்வான் என்பது

நிச்சயம். அப்பா, இதுவரையில் நான் பார்த்த பிசாசுபிடித்தவர்களுள் இதுவே மகா மோசமானது, மிக மூர்க்கமானது, ஆசைக்கு இடமில்லாதது.

கேசவன் — ஓட்டுவேன் என்னும் தைரியம் உனக்கு இல்லையா?

வீரராகவன் — அதைரியமில்லை. ஆனால், இத்தனை பிரபலப்பேய்களை எதிர்த்து நான் ஒருவன் போராட வேண்டும். ரகுராமன் திட சரீரமுள்ளவனா, சொல்லு.

கேசவன் — ஆம், பலமிக்கவனென்றே சொல்ல வேண்டும். மீனாக்ஷியும் நானும் அவனைப் பிடித்துக் கட்டிக் கொண்டுவருவது மிகக் கஷ்டமாயிற்று.

வீரராகவன் — இம்! திருக்கணங் கோடுக்காவது ஏத்து மானூருக்காவது நீ போயிருந்தால் நன்றாய் இருக்கும்.

கேசவன் — ஏன்?

வீரராகவன் — இந்தப் பிசாசுகள் அந்தத் தெய்வங்களின் முன் நில்லா.

கேசவன் — இவை உன்னை மிஞ்சிவிடுமா?

வீரராகவன் — (ஒருபுறமாக) இவன் பாழாய்ப் போக! இவன் என்னைவிட்டுத் தொலைக்கமாட்டான். இன்றைக்கு எனக்கு வருகிற பத்து ரூபாய்க்காக என் பெயரே கெட்டுப்போகும்போல் இருக்கிறதே. பூதோன்மத்தம் பிடித்த ஸ்திரீகளுக்குச் சிகிச்சை செய்வது ஒருமாதிரி. அவர்கள் சில சமயம் மூர்ச்சை

கொள்வார்கள், சிலசமயம் அவர்களுக்குக் கைகால்கள் இழுக்கும். அவையெல்லாம் இளநெஞ்சினுல் நேர்பவை. அப்படிப்பட்ட ஸ்திரீகளை எளிதிற் தெளிவிக்கலாம். ஆனுல், மனவலியுள்ள ஆண் பிள்ளையைத் திருத்துவது அப்படியன்று. இது கஷ்டமான காரியம்.

கேசவன் — என்ன ஆலோசிக்கிருய்?

வீரராகவன் — என்ன மாதிரியான சிகிச்சை செய்யவேண்டு மென்று ஆலோசிக்கிறேன். பயப் படாதே. பிசாசுகளை வென்று அடக்கிவிடுவேன்.

கேசவன் — வெல்வா யென்றே நினைக்கிறேன். இப்போது என்வீடு கிட்டிப்போயிற்று. நமக்காகக் காத்துக்கொண்டு என் மனைவி கதவண்டை நிற்கிருள் (பாகீரதியை நோக்கி) ரகுராமன் எப்படி யிருக்கிருன்?

பாகீரதி — பெரிய பிடிவாதம் பண்ணிக்கொண்டிருக்கிருன். அவனை அடக்கிவைக்க வெகு கஷ்டப் பட்டு மீனுக்ஷி களைத்துப் போயிருக்கிருள். மந்திர வாதி நல்ல வேளையாக வந்துவிட்டானே.

வீரராகவன் — (ஒருபுறமாக) உனக்கு நல்லதுதான். ஆனுல், எனக்கு நல்லதோ, அல்லது, க்ஷேமமோ. (உரத்து) பயப்படாதே, பாகீரதீ! பிசாசுகளெல்லாம் வீரராகவனைக் கண்டால் பயப்படும்.

பாகீரதி — அது எனக்குத் தெரியும். அதனுலேயே உன்னை உடனே அழைத்து வரும்படி என்

யஜமானருக்குச் சொன்னேன். உனக்கும் இந்தப் பிசாசு எளிதில் வசப்படாது.

வீரராகவன் — இம் !

பாகீரதி — இதோ இருக்கிறான். கத்திக் கொண்டே இருக்கிறான். உள்ளே வா. (ரகுராமனும் மீனாக்ஷியும் இருக்கும் இடத்திற்கு அம்மூன்றுபேரும் போகிறார்கள்.)

கேசவன் — (மீனாக்ஷியை நோக்கி) மந்திரவாதி வந்து விட்டான்.

ரகுராமன் — இந்த மாந்திரிகன்யார்? ஹா! ஹா! ஹா! பழைய வீரராகவனா? அவன்தானா? அவன் ரத்தத்தை உறிஞ்சுவேன். மந்திரவாதியின் இரத்தம் குடிப்பது எனக்கு இது முதல் தடவையன்று. ஹா! ஹா! ஹா!

வீரராகவன் — (ஒருபுறமாக) இது அசாத்திய மான சங்கதி. இருந்தாலும், என்வேலையைச் செய்ய வேண்டும். (உரத்து) பிசாசுகளா, சும்மா இருங்கள், இல்லாவிட்டால் என் பிரம்பால் அடிப்பேன். பாகீரதீ! கொஞ்சம் விபூதி கொண்டுவா. ஜபம் பண்ணி இவன்மீது போடுகிறேன். (பதுமாஸனம் போட்டுக்கொண்டு ரகுராமன் அணுகாவண்ணம் அவன் எதிரே சிறிது தூரத்தில் உட்காருகிறான். மீனாக்ஷியும் கேசவனும் ரகுராமனை இருபுறத்திலும் அடக்கி அமுக்கிக் கொண்டிருக் கிறார்கள். பாகீரதி கொஞ்சம் விபூதி கொண்டு வந்து வீரராகவ னிடம் கொடுக்கிறாள்)

வீரராகவன் —(விபூதியைவாங்கிக்கொண்டு வாய்க்குள்ளே மந்திரம் ஜபித்து) நான்கு பேய்களும் இஷ்! இஷ்! இஷ்! (ஜபித்த விபூதியை ரகுராமன் மீது எறிகிறான்)

ரகுராமன் — து! (வீராகவன் முகத்தில் எச்சில் துப்புகிறான்)

வீரராகவன் —(எச்சிலைத் துடைத்துக்கொண்டு — ஒருபுறமாக) எனக்கு வெட்கமாய்ப் போயிற்று. ஆனாலும், நான் இப்போது பயப்பட்டுப் பின்வாங்கக்கூடாது. (உரத்து) ஆ, துடுக்குப் பேய்களா! உங்களைப் புடைத்துப் பணியச்செய்ய வேண்டும். (பிரம்பையெடுத்து ரகுராமனது வலதுதோளிற் சுரீரென ஓர் அடிகொடுக்கிறான்).

ரகுராமன் —(நடக்கிற காரியங்களைப் பார்த்து மீனாக்ஷியும் கேசவனும் கலக்கமுற்று ஒருவாறு கைசோர்ந்திருந்தார்கள். அவர்களை ரகுராமன் உதறி யெறிந்து விடுகிறான். தப்பித்துக்கொள்வதற்கேனும் தைரியங் கொள்வதற்கேனும் அவகாசம் இல்லாதிருந்த வீராகவன் கையிலிருந்து பிரம்பைப் பிடுங்கிக்கொண்டு அவனைக் கீழே தள்ளிப் பளீர் பளீரென அவன் உடம்பில் நாலு பக்கங்களில் வீறுகிறான்) இப்போது உன் இரத்தத்தைக் குடிப்பேன். நான் குட்டிச்சாத்தான், நான் சங்கிலிக் கருப்பன், நான் மாடன், நான் காட்டேரி.

வீரராகவன் —(தன்னைக் காக்கும்படி இரங்கிய குரலோடு கூவுகிறான்) ஓ, இந்தப் பாதகன் கையினின்றும் என்னைத் தப்புவியுங்கள்! என் எலும்புகளெல்லாம் நோகின்றன. இன்னும் மேலும் மேலும் அடித்துக்கொண்டே இருக்கிறான். கேசவா! மீனாக்ஷி! பாகீரதி! வந்து என்னைக் காப்பாற்றுங்கள். கண்

தெரிந்து நான் இந்த வலையில் ஏன் சிக்கிக்கொண்டேன்? கேசவனும் மீனாக்ஷியும் பாகீரதியும் தங்களை யறியாமல் சிரித்துக்கொண்டு, ரகுராமனைப் பிடித்து ஒரு மூலையிற் கட்டிப் போடுகிறார்கள்).

கேசவன் — வீரராகவா! மாந்திரிகர்கள் பேய்களை யடிப்பதைப் பலதடவை பார்த்திருக்கிறேன். பேய்கள் மாந்திரிகனை யடிக்கப் பார்த்தது இந்தத் தடவைதான் (சிரிக்கிறான். மீனாக்ஷியும் பாகீரதியும் கூடச் சிரிக்கிறார்கள்).

வீரராகவன் — (திகைத்து எழுந்திருக்கிறான்) இரக்கமில்லாத பாபிகளா! நான் துன்பப்படுவதைப் பார்த்து நகைக்கிறீர்களா?

கேசவன் — இல்லை, இல்லை, வீரராகவா; ஆனாலும், அந்தக் காட்சி வெகு வேடிக்கையாயிருந்தது.

ரகுராமன் — என்னை அவிழ்த்துவிடுங்கள். நான் இவன் இரத்தத்தைக் குடிக்கட்டும்.

வீரராகவன் — (தனக்குத்தானே) ஆ, இப்போது அவனை நன்றாகக் கட்டிப் போட்டிருக்கிறார்கள். பயம் இல்லாமல் அவனைப் பிரம்பினால் அடிக்கலாம். (பிரம்பை யெடுத்துக்கொண்டு ரகுராமனை நோக்கிப் போகிறான்).

மீனாக்ஷி — என் கணவனை மறுபடி அடிக்க விடமாட்டேன்.

வீரராகவன் — ஏன்? அவன் என்னை அவ்வளவு பலமாக அடித்தானே.

மீனாக்ஷி — பதிலுக்குப் பதில் செய்வதற்காகவா நீ அவனை மறுபடி அடிக்கப்போகிறாய்?

வீரராகவன் — இல்லே, ஆனல், மாந்திரிகர்களுக்குமேல் பேய்கள் ஆதிக்கங்கொள்ள விடக்கூடாது. (மறுபடி முன் செல்கிருன்)

மீனுக்ஷி — நீ அவனே அடிக்கப்போனல், கட்டியிருக்கிற கயிற்றை யறுத்து அவரையும் உன்னேயும் இவ்வறையில் தனியே விட்டுவிடுவேன்.

வீரராகவன் — நீ ராக்ஷஸி! (பின்னுக்குப் போகிருன்) கேசவன் மீதும் ரகுராமன் மீதும் பிராது கொடுக்கிறேன்.

கேசவன் — என்ன குற்றத்திற்காக?

வீரராகவன் — என்னே அடித்ததற்காக ரகுராமன் மீதும், அவனுக்குச் சாதகமாக இருந்ததற்கு உன்மீதும்.

கேசவன் — அவனுக்கு எப்படி நான் உட்கையாயிருந்தேன்.

வீரராகவன் — என்னே இங்கே அழைத்துவந்து, அவன் என்னே அடித்தபோது சிரித்ததனல்

கேசவன் — நல்லது. பிராது கொடு. அதனல் உனக்கு என்ன வருகிறதென்று பார்ப்போம்.

வீரராகவன் — எனக்குக் கொடுக்கிறதாகச் சொன்ன தக்ஷிணேயைக் கொடு.

கேசவன் — எந்த தக்ஷிணே? நீ என்ன செய்துவிட்டாய்? அவனே அடித்தாய். அதற்குப் பதில் அவனல் அடிப்பட்டாய். வேறு என்ன செய்தாய்? நீ

போய் தக்ஷிணைக்காக ஸிவில் வழக்கு ஒன்றும் செய். ஸிவில் கிரிமினல் என்னும் இரண்டு விதமாகவும் பரிகாரந்தேடு.

வீரராகவன் — அதெல்லாம் விளையாட்டுக்குச் சொன்னேன். என் தக்ஷிணையைக் கொடு.

கேசவன் — கொடுக்கவே மாட்டேன்.

வீரராகவன் — அப்படியானல் பிராது ஒன்று கொடுக்கிறேன். வியாச்சியம் ஒன்று தொடர்கிறேன்.

கேசவன் — அப்படியே செய்.

வீரராகவன் — இதுவரையில் இவ்வளவு வெட்கக் கேடாக நான் அடிப்பட்டதும் இல்லை, ஏமாற்றப் பெற்றதும் இல்லை. ஆனல், நீங்களெல்லாரும் இதற்காகத் துன்பம் அனுபவிப்பீர்கள். பிசாசுகள் அவன்மீது பிடிவிடாமல் இருக்கும்படி செய்கிறேன்.

கேசவன் — அப்படியானல், உனக்கு மேலும் மேலும் அடிக்கடி அடிவிழும். அதுதான் பயன். இனி நீ வெளியே போ. (வீரராகவனை வெளியே தள்ளி உள்ளே கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொள்கிறான்).

வீரராகவன் — உங்களெல்லாரையும் சபிக்கிறேன். போக்கிரிகளா! நீங்களெல்லாரும் பாதாள நரகத்திற்குப் போவீர்களாக! (தனக்குத்தானே) இப்படி நான் கத்துவதனல் பிரயோசனம் என்ன? கேடு கெட்ட கழுதையாவேனே யல்லாமல் வேறு இல்லை. வீட்டுக்குப்போய் உடம்பை நன்றாகத் துடைத்துக்

கொண்டு குளிர எண்ணெய் தேய்த்துத் தலை முழுகு கிறேன். இனிமேல் பேய்பிடித்த ஆண் பிள்ளை களுக்குச் சிகிச்சை செய்ய நான் ஒருபோதும் ஒப் புக்கொள்ள மாட்டேன், மாட்டவே மாட்டேன்.

(திரை.)

களம் - 3.

[பத்து நாள் கழிந்தபின் - மாலை 6 மணிப்பொழுது - எற்றுமானூர் கோவில் - ராமனும் நாராயணனும் முக மண்டபத்தில் நிற்கிறார்கள்.]

ராமன் — இந்தக் கோயிலுக்குத் தினந்தோறும் எத்தனை யாத்திரிகர்கள் வருகிறார்கள்!

நாராயணன் — இங்கே வருகிறவர்களிற் பெரும் பாலார் தங்கள் வீட்டுப் பெண்டுகளுக்குப் பிடித் திருக்கிற பேய்கள் போக வேண்டுமென்று வருகிறார் கள். அவர்களிற் கொஞ்சம்பேரே குணப்பட்டுத் திருப்தியாகப் போகிறார்கள்.

ராமன் — நீ நினைக்கிறதுபோல அத்தனை கொஞ் சம் பேரல்ல. வருஷந்தோறும் நூற்றுக் கணக் கான ஜனங்கள் சொஸ்தமடைந்து போகிறார்கள்.

நாராயணன் — அது எனக்குச் சந்தேகமா யிருக் கிறது.

ராமன் — உனக்கு எதுவும் சந்தேகந்தான். உல கத்திலுள்ள துன்பங்களுக் கெல்லாம் சந்தேகமே உனக்கு நிரந்தர பரிகாரம்.

நாராயணன்—உலகத்துத் துன்பங்களுக்குக் காரணங் கண்டுபிடிக்க வேண்டுமானல் அப்படிப்பட்ட சந்தேகபுத்தி இருக்கவேண்டியது அவசியமே.

ராமன்—இதோ பார் நாராயணு! இங்கே ஒருவருக்கும் சொஸ்தமாகிறதில்லை யென்று சொல்கிருயா? அப்படியானல் வருஷா வருஷம் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வருவானேன்.

நாராயணன்—சில பேருக்கு அவர்களுக்குள்ள பக்தி விசுவாசத்தினுல் குணமாகிறது, வேறு சில பேருக்கு இடம் மாறுவதனுலும், சுற்றுமுள்ள சந்தர்ப்பம் முதலியன வேறுபடுவதனுலும் குணமுண்டாகிறது.

ராமன்—இதோ ரகுராமன் வருகிருன். சகேவனும் மீனுக்ஷியும் அவனை அழைத்துக்கொண்டு வருகிருர்கள். (கேசவனும் மீனுக்ஷியும் ரகுராமனும் வருகிருர்கள்).

நாராயணன்—என்ன, ரகுராமா! உனக்கு இன்னுஞ் சொஸ்தமாக வில்லையா?

ரகுராமன்—குட்டிச்சாத்தான் நீடூழி வாழி.

ராமன்—முதலில் இவனை நீ * திருக்கணங்கோட்டுக்குக் கொண்டுபோ யிருக்கலாமே.

---

* மலையாளத்தில் ஒரு சிறிய கோவில். பேய் பிசாசுகளின் பீடை நீங்குவதற்காகவும், மோசடியாகவைத்த விஷ மருந்துகள் முதலியன கக்கி வெளிப்படுவதற்காகவும் அநேக ஜனங்கள் அந்தக் கோவிலுக்குப் போவார்கள்.

கேசவன் — அங்கே கொண்டுபோ யிருந்தேன். அங்கிருந்த பெரியார் ஒருவர் ஒரு சட்டியில் ஔஷத மிட்டு மந்திரித்த பெரிய பாற் பாத்திரத்தை இடது கையில் வைத்துக்கொண்டு, சிறு கிண்ணத்தில் அந்தப் பாலை வார்த்து இவனுக்குக் கொடுத்தபோது இவன் பெரிய பாத்திரத்தை அவர் கையிலிருந்து வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு எல்லாப் பாலையும் ஒரே மூச்சிற் குடித்துவிட்டான். அங்கே காத்துக் கொண்டிருந்தவர் பலர் மந்திரித்த பால் இல்லாமல் ஏமாந்துபோக வேண்டியதாயிற்று.

நாராயணன் — கேசவா! ரகுராமனுக்கு இங்கே சொஸ்தமாகு மென்று நீ நம்புகிறாயா?

மீனாக்ஷி — தடையென்ன. அவருக்குச் சொஸ்த மாகும். நாராயணா! ஆதியில் நீ ஒருவன்தான் என் யஜமானருக்கு நல்லபுத்தி சொன்னவன். அந்த வார்த்தையை அவர் ஏற்கவில்லை. இப்போது நீயே முன்னின்று அவருக்குச் சொஸ்த புத்தி யுண்டாகு மாறு துணைசெய். வா, கோயிலுக்குள்ளே போய்ப் பேயோட்டும் நம்பூத்திரியைக் கண்டு பேசுவோம். (**பிரம்மதத்தன்** என்னும் நம்பூத்திரி வருகிறான்).

ராமன் — (பிரம்மதத்தனை நோக்கி) புதுப்பேயொன்று வந்திருக்கிறது.

பிரம்ம — (கேசவனையும், ரகுராமனையும், மீனாக்ஷியையும் பார்த்து) எங்கே?

நாராயணன் — அதுகூட உமக்குத் தெரியவில்லையா? பேயாடிகளைச் சொஸ்தப் படுத்துகிறவர் நீர் தானு?

பிரம்ம — கேலிபண்ணுதே. நோயாளிகளைக் குணப்படுத்துவது நான் அல்ல. ஈசுவரன் குணப் படுத்துகிருன். நான் அவரைப் பணிந்தொழுகும் காரியஸ்தனே.

நாராயணன் — நிரம்பப் பணிவுதான். அந்தப் பணிவினுல் பிரயோசனம் ஒன்றும் இல்லையென்று நினைக்கிறேன்.

பிரம்ம — நல்லது. எனக்குத் தெரியாதென்று நினைக்காதே. நோயாளி இவள்தான் (மீனுக்ஷியைச் சுட்டிக் காட்டுகிருன்)

நாராயணன் — ஹ! ஹா! ஹா! நீங்கள் உத்தேசமாகச் சொல்வதுபோலவே நீங்கள் செய்யும் பரிகாரமும் இருக்குமானல், இந்த எளிய ஜனங்கள் இவ்வளவுதூரம் வந்திருக்கவேண்டாமே.

பிரம்ம — இங்கே ஒரே ஸ்திரீதான் இருக்கிருள், அப்படியானல் வேறுயாருக்குப் பிசாசு பிடித்திருக்கிறது? அவள் வெளியே இருக்கிருளா?

நாராயணன் — பெண் பிள்ளையல்ல, ஆண் பிள்ளையே. அந்த ஆண்பிள்ளை இதோ இருக்கிருன். (ரகுராமனைச் சுட்டிக் காட்டுகிருன்).

ரகுராமன் — நான் குட்டிச்சாத்தான்: இந்தப் பருத்த மனிதனுடைய உடம்பிலுள்ள இரத்தத்தை

யெல்லாம் சீக்கிரத்தில் உறிஞ்சிவிடுவேன். (பிரம்மதத்தனை நோக்கி நடக்கிறான். பிரம்மதத்தன் ஓடி அடுத்த அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு, 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று ஓலமிடுகிறான்).

நாராயணன் — (நகைத்துக்கொண்டு) இவரை ஏன் நீ சொஸ்தப் படுத்தக்கூடாது?

பிரம்ம — (அறைக்குள்ளிருந்தே) பிசாசு பிடித்த பெண்பிள்ளைகளைச் சொஸ்தப்படுத்துவதே எனக்குப் பெருங் கஷ்டமான காரியம், இந்த ஆளைச் சொஸ்தப்படுத்துவது முடியாத காரியம். இவன் கண்ணும் பல்லும் என் உடம்பே லக்ஷியமாயிருக்கின்றன. இவனை அப்பால் கொண்டுபோங்கள். கொண்டுபோகா விட்டால் போலீஸாரை வரவழைப்பேன்.

நாராயணன் — கோவிலிலிருந்து ஜனங்களை அப்புறப்படுத்துவதற்கு உனக்கு என்ன அதிகாரம்? அவனோடு நாங்களெல்லோரும் இங்கேயே இருப்போம். உன்னாலானதைச் செய்.

பிரம்ம — சாயங்காலம் 7-மணிக்குப் போலீஸ்காரர் வழக்கம்போல் 'ரோந்து' சுற்ற வருகிறவரையில் நான் கதவைத் தாளிட்டுக்கொண்டு இப்படியே உள்ளே இருப்பேன். ஆபத்துக்கிடமான இந்த ஆள் சுதந்தரமாக விடுபட்டிருக்கிற வரையில் நான் வெளியே வரவேமாட்டேன். இவனுக்குப் பிசாசு பிடிக்கவில்லை. அது பொய். கடந்த $17\frac{1}{2}$ வருஷத்து

அனுபவத்தில் எனக்குத் தெரிந்தவரையில் புருஷனுக்கு ஒருபோதும் பிசாசு பிடித்ததில்லை.

நாராயணன் — (கேசவனையும் மீனாக்ஷியையும் ரகுராமனையும் ராமனையும் பார்த்து) இங்கே காத்திருப்பதிற் பிரயோஜனம் இல்லை. கோவிலுக்குள்ளே போவோம்.

(அவர்கள் ஐவரும் உள்ளே போகிறார்கள்.)

கேசவன் — அந்த மண்டபத்திலிருக்கிற பெண்டுகள் மூன்று பேர் யார்?

ராமன் — அவர்கள் பிசாசு பிடித்தவர்கள்.

கேசவன் — அவர்களண்டைபோய், அவர்களுக்குச் சொஸ்தமாய் விட்டதா என்று பார்ப்போம்.

(அந்த ஸ்திரீகளினண்டை அவர்களெல்லாரும் போகிறார்கள்.)

முதல் மாது — என் குழந்தையைத் தின்னப் பார்த்தேன். ஆனால், அது மிகத் தந்திரசாலியாயிருக்கிறது; என் பற்களுக்கிடையில் நழுவிப் போயிற்று. மந்திரவாதி என்னை இரக்கமின்றி அடித்தான்.

ரகுராமன் — மந்திரவாதியை நான் போடுபோடென்று போட்டுக் கைகூசாமல் அடித்தேன். அவன் இரத்தத்தை உறிஞ்சியிருப்பேன், என் பெண்டாட்டி யென்று சொல்லிக்கொண்டு ஒரு பெண்பிள்ளையும், மைத்துனன் என்று சொல்லிக்கொண்டு ஓர் ஆண்பிள்ளையும் என்னைத் தடுத்து விட்டார்கள். உண்மையில் எனக்குப் பெண்டாட்டியும் இல்லை மைத்துனனும் இல்லை.

இரண்டாம் மாது — எனக்குப் பிசாசு பிடித்திருக்கிறதென்று சொல்லுவார்கள். உண்மையில் நான்தான் பிசாசைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குள்ளே இல்லாவிட்டால் பிசாசு வேறு எங்கே இருக்கிறது ?

மூன்றும் மாது — எனக்குள்ளே மூன்று பிசாசுகள் இருக்கின்றன.

ரகுராமன் — எனக்குள்ளே நான்கு பிசாசுகள் இருக்கின்றன.

மூன்றும் மாது — (கிரீச்சென்று சத்தமிடுகிறுள்) நான் இப்படியும் அப்படியும் கூத்தாடுவேன். (கூத்தாடுகிறுள்—மற்ற மாதர்கள் இருவரும் கடகடவென உடல் குலுங்கிக் கொண்டு அவளுக்கிணங்கக் கூத்தாடுகிறுர்கள் — ஜனக்கூட்டம் கூடுகிறது.)

நாராயணன்—நாம் இங்கிருந்து போய்விடுவோம். இது வேடிக்கை பார்க்கத்தக்க இனிய காட்சியன்று. இதோ நமது பிரம்மதத்தன் போலீஸ்காரனேடு வருகிறுன்.

(பிரம்மதத்தனும் போலீஸ்காரனும் வருகிறுர்கள்).

போலீஸ்காரன் — (பிரம்மதத்தனைநோக்கி) உன் இரத்தத்தைக் குடிக்க வந்த துஷ்டன் யார் ?

பிரம்ம — (ரகுராமனைச் சுட்டிக்காட்டி) அதோ இருக்கிறுன்.

போலீஸ்காரன் — (ரகுராமனைப் பார்த்து) இவன் இரத்தத்தைக் குடிக்கப் போகிறேனென்று சொன்னுயா?

ரகுராமன் — ஆம், சொன்னேன். குடிக்கத் தான் இன்னும் விரும்புகிறேன்.

போலீஸ்காரன் — ஏன் ?

ரகுராமன் — அவன் உடம்பில் கொழுப்பு மிகுந்திருப்பதனலே (எல்லாரும் சிரிக்கிறார்கள்).

போலீஸ்காரன் — நீ யார் ?

ரகுராமன் — நான் குட்டிச்சாத்தான்.

போலீஸ்காரன் — நான் பார்த்ததற்குள்ளே அகந்தைகொண்ட பிசாசு நீயே. (இராமனைப் பார்த்துத் திரும்பி) அவனுக்குப் பிசாசு பிடித்திருக்கிறதா ?

ராமன் — சந்தேகம் இல்லாமல் அவனுக்குப் பிசாசு பிடித்திருக்கிறது. பேயைப் போக்கடித்துக் கொள்வதற்கு இங்கே வந்திருக்கிறான். ஆனல், அவனைப் பார்த்துப் பயப்பட்டுப் பிரம்மதத்தன் அவனுக்குச் சிகிச்சை செய்யமாட்டேனென்கிறான்.

பிரம்ம — (போலீஸ்காரனைப் பார்த்து) முற்றும் காரணம் இல்லாமலா நான் பயப்படுகிறேன் ?

போலீஸ்காரன் — இல்லை, உனது பருமனைப் பார்த்தால் தௌஷ்டிக பிசாசு எதனுக்கும் ஆசையாகத்தான் இருக்கும். எத்தனை கோவில் பிரஸாதங்கள் உன் தேகத்தில் பொதிந்திருக்கின்றன ?

ராமன் — போலீஸ்காரா ! வழக்கமாயுள்ள தீர்த்தமும் புஷ்பப் பிரஸாதமும் ரகுராமனுக்குக் கொடுக்கும்படி பிரம்மதத்தனுக்குச் சொல்லு.

பிரம்ம — நீங்களெல்லாரும் என்னைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதானல் நான் அவனுக்குப் பிரஸாதம் கொடுக்கிறேன்.

போலீஸ்காரன் — அது நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீ போய், தீர்த்தமும் புஷ்பமும் கொண்டுவா. (பிரம்மதத்தன் பிரஸாதம் கொண்டுவந்து, ஒவ்வொருவருக்கும் கொடுத்த பின் கடைசியில் கை நடுங்கிக்கொண்டு ரகுராமன் கையில் கொடுக்கிறான்.)

ரகுராமன் — வா, நான் உன் இரத்தத்தைக் குடிக்கட்டும்.

பிரம்ம — சீ போ, பேயே!

ரகுராமன் — இந்தப் பூசாரியின் உடம்பு வரள இரத்தத்தை யெல்லாம் குடித்துவிடுவேன். தோலும் எலும்பும் மாத்திரமே பாக்கி வைப்பேன். (அவன் மீது பாய்கிறான் — பிரம்மதத்தன் ஓடிக் கர்ப்பக் கிருகத்திற்குள் புகுந்து கதவை மூடிக் கொள்கிறான்). கோபாலனது குழந்தையை நான் கொன்றேன். குழந்தைகளின் எலும்பு மாலை யணிந்து எத்தனையோ தடவை சுடு காட்டிற் கூத்தாடி யிருக்கிறேன்.

பிரம்ம — (உள்ளே இருந்து) போலீஸ்காரா, அவனை வெளியே தள்ளிக்கொண்டு போய்விடு. இவ்வுபகாரத்தை மறவேன்.

போலீஸ்காரன் — அவனைத் துரத்தி விடுகிறேன் (ரகுராமனை நோக்கிச் செல்கிறான். ரகுராமன் அதிவேகமாக ஓடி வாயில் வழியாகத் தப்பித்துக் கொள்கிறான்.)

மீனுக்ஷி — அவர் போய் விட்டாரே! அவர் போய் விட்டாரே! அவரை நாம் பிடிப்பது எப்படி?

நாராயணன் — வாருங்கள். நாமெல்லோரும் அவனைத் தேடிப் போவோம். ஊருக்குள்ளே அவனைத் தனியே போகவிடுவது அபாயகரமாகும்.

போலீஸ்காரன் — அது சரியே. அபாயகரந்தான். (*ராமன், நாராயணன், மீனுக்ஷி, கேசவன், போலீஸ்காரன் எல்லாரும் போகிருர்கள்.*)

பிரம்ம — (*கதவைத் திறந்துகொண்டு சாக்கிரதையாக வெளியே வருகிருன் — தனக்குத் தானே*) இன்றைக்கு எனக்கு நல்லவேளை. கிரகயோகம் நன்ருக இருக்கிறது. முகமண்டபத்திற் கடுத்த கதவைச் சாத்திவிடுகிறேன். அந்தப் பையல் திரும்பி வந்தாலும் வரக்கூடுமே. நான்கு பிசாசுகளும் சேர்ந்து அவன் ஒருருவாய் வந்திருக்கிருனென்று நிஜமாக நம்புகிறேன். அவனுடைய துஷ்ட எண்ணங்கள் மிகப் பயங்கரமா யிருக்கின்றன. என்னை உறிஞ்சி வரட்ட ஆசைப்படுகிருனே. அந்தக் கொடுமையை எண்ணிப்பார். (*திரை.*)

களம் - 4.

[*அதே தினம் சாயங்காலம். எற்றுமானூர் - அப்புவையருடைய ஹோட்டல் — மாலை 7-30 மணிப்பொழுது. பத்து பேர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர்கள்.*]

முதலாவான் — இன்றைக்குப் போசனம் நேர்த்தியா யிருக்கிறது. அப்புவையருக்கு இன்றைக்குக் 'குசால்' பிறந்தாற் போல் தோன்றுகிறது.

அப்புவையர் — சாப்பாடு முடிகிற வரையில் பொறுத்திரு. அபூர்வமான பதார்த்தம் ஒன்று வரப் போகிறது.

இரண்டாவான் — பாயஸமா?

அப்புவையர் — சந்தேக மென்ன?

சாப்பிடுகிறவர்க ளெல்லாரும் — ஜே! இன்றைக்கு என்ன விசேஷம், அப்புவையரே?

அப்புவையர் — விசேஷம் ஒன்றும் இல்லை. ஏன்? இது வரையில் நான் உங்களுக்குப் பாயஸம் வைத்துப் போடவில்லையா?

முதலாவான் — போட்டிருக்கிறீர், உண்மையே ஆனால், ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு காரணம் இருந்தது.

அப்புவையர் — நல்ல ஹோட்டல்காரன் தன்னிடம் சாப்பிடுகிறவர்களுக்கு அப்போதைக் கப்போது ஏதாவது நேர்த்தியான பக்ஷியம் செய்து போடுவதற்குத் தனிக் காரணமே வேண்டியதில்லை.

முதலாவான் — அது நிஜமே. ஆனால், இதற்கெல்லாம் ஏதாவது காரணம் இருக்க வேண்டுமே. அப்புவையரே! அந்தக் காரணத்தை எனக்குச் சொல்லும். நாங்களும் உங்களுடன் கூடிக் களிப்போம்.

அப்புவையர் — நீங்கள் வற்புறுத்திக் கேட்பதனுல் சொல்லுகிறேன். இந்த மூவாயிர ரூபாய்க் குறி* யில் எனக்கு முதற் சீட்டு வீழ்ந்தது.

எல்லாருமாக — உமக்கு மங்களம் உண்டாகுக! அப்பு ஐயரே! விசேஷ காரணம் ஏதோ ஒன்று உமக்கு இருக்கு மென்று எங்களுக்குத் தெரியும்.

அப்புவையர் — நிரம்பப் பாயஸம் சாப்பிடுங்கள். (எல்லா இலைகளிலும் பாயஸம் போடுகிறுன்) இப்படி அவசரமாக ஹோட்டலுக்குள்ளே ஓடி வருகிறது யார்? (சுழன்று வெறித்த பார்வையும் தலைவிரிகோலமுமாக ரகுராமன் வருகிறுன்.

ரகுராமன் — நான் குட்டிச் சாத்தான் என்னும் பேயரசன். நான் குடிப்பதற்கு மானிட இரத்தம் வேண்டும். ஆ! உன் இரத்தம் போதும் (வாயைத் திறந்துகொண்டு அப்புவையர் மீது பாய்கிறுன். தன் பணப் பெட்டியை வைத்துவிட்டு அப்புவையர் வெளியே ஓடுகிறுர். சாப்பிடுகிறவர்களெல்லாரும் பாயஸத்தை இலையிலே வைத்து விட்டு 'பிசாசு! பிசாசு! பிசாசு!' என்று கூவிக்கொண்டு தலைகால் தெரியாமல் வாசலுக்கு ஓடுகிறுர்கள். 'நான் மானிட இரத்தம் குடிக்க வேண்டும். உன்னுடையது போதும், உன்னுடையது போதும்!' என்று கூவிக்கொண்டு ரகுராமன் பின்றொடர்கிறுன். தெருவில் பெரிய குழப்பமும் கூச்சலும் உண்டாயின. தெரு இருள் மூடி

---

* சிலர் சேர்ந்து மாதந்தோறும் பணம் வசூல் செய்து வந்த தொகையைச் சீட்டுக் குலுக்கி எவர் பெயருக்குச் சீட்டு வருகிறதோ அவருக்குக் கடனுகக் கொடுக்கும் நிதி. அந்தத் தொகையை அவர்கள் குறிப்பிட்ட காலம் வரையில் மாதந்தோறும் பகுதி பகுதியாகக் கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

இருந்தது. ஹோட்டலி லிருந்த விளக்கு காற்றினல் அணைந்து போயிற்று. இது சரியான சமயமென்றெண்ணித் திருடனொருவன் ஹோட்டலுக்குள் நுழைகிருன்.)

திருடன் — (தனக்குத் தானே) என் தொழிலை நடத்துவதற்கு என்ன மகத்தான சந்தர்ப்பம்! நான் கொஞ்சம் தீக்குச்சிகள் கொண்டுவராமற் போனேனே! ஆனல், இந்த வேளையில் ஹோட்டலுக்குள் புகுவதற்கு இவ்வளவு நல்ல சமயம் வாய்க்குமென்று யார் ஊகித்திருக்கக்கூடும். அப்புவையர் பிசினரி; எங்கேயாவது அவர் பணம் சேர்த்து வைத்திருப்பார். நான் உள்ளே புகுந்து தேடிப் பார்ப்பேன். உள்ளே ஒரே இருட்டாக இருக்கிறதே. (உள்ளே போகிருன்) ஓ தெய்வமே! இங்கே என்ன இருக்கிறது? (பாயலத்தின்மீது கால் வைத்து வழுக்கி நெடுஞ்சாண் கிடையாகக் கீழே விழுகிருன். அப்பு ஐயர் போலீஸ்காரனை அழைத்துக் கொண்டு விளக்குடன் வருகிருர்.)

அப்புவையர் — நல்லவேளை. என் பணப்பெட்டி பத்திரமாய் இருக்கிறது. அங்கே என்ன படுத்துக் கிடக்கிறது? அது மற்றொரு பிசாசோ? (நடுங்குகிருன்)

போலீஸ்காரன் — அப்படித் தான் போல் இருக்கிறது. ஆனல், இது திருட்டுப் பிசாசு. அடே அப்பனே எழுந்திரு (திருடனை மேலே தூக்குகிருன்)

திருடன் — நான் திருட வரவில்லை. இங்கே என்ன நடக்கிறதென்று பார்க்கவே வந்தேன்.

போலீஸ்காரன் — அப்படியானல் நீ உள்ளே ஏன் நுழைந்திருக்க வேண்டும்? அன்றியும், சென்ற வரு

ஷம் நீ தண்டனை அடைந்தவனென்று எனக்கு ஞாபகம் வருகிறது.

திருடன் — யஜமானே! இந்த தடவை என்னை விட்டுவிடும். இனிமேல் புகாருக்கு இடம் வைக்க மாட்டேன்.

அப்புவையர் — படவா! என் பணப்பெட்டியை நீ திருட வந்தாய். அதற்காகத்தானே? (அவன் விலாவில் தன் கையினால் குத்துகிறான்) என் ஹோட்டலில் சாப்பிடுகிறவர்களுக்கு இன்றைக்கு நான் பாயஸம் பண்ணிப் போட்டது நல்லதாயிற்று. இல்லாவிட்டால் என் பணப்பெட்டி போயிருக்கும். அதில் 562 ரூபாய் 7 அணா 2 தம்பிடி இருக்கிறது.

திருடன் — ஓ. அவ்வளவு இருக்கிறதா?

அப்புவையர் — நல்ல வேளையாக அது உனக்குத் தெரியாது போயிற்று. ஏ கான்ஸ்டபிள்! இவனுக்கு ஓர் உதை கொடுத்து அனுப்பிவிடு. ஏனெனில், அவன் எதற்காக உள்ளே வந்தானென்று ருஜுப்படுத்துவது கஷ்டமாகும். இந்நாளில் மாஜிஸ்ட்ரேட்டுகள் அவ்வளவு விபரீதமானவர்களாய் இருக்கிறார்கள்.

போலீஸ்காரன் — அவர்கள் பேரில் குற்றம் சொல்லாதேயும். அதற்கெல்லாம் சட்டந்தான் காரணமாகும். குற்றவாளிகள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்ளும்படி நாங்கள் எங்களிஷ்டம் போலச் செய்யக் கூடுமானால் ஒவ்வொரு 'கேஸு' ருஜுவாகும்.

அப்புவையர் — நல்லது, நல்லது, அதைப்பற்றி அபிப்பிராய பேதம் இருக்கிறது. இப்போது திருடனை அனுப்பிவிடு.

போலீஸ்காரன் — ஓடிப்போடா, அசட்டு பயலே? திருட்டுத் தொழிலும் உனக்கு நன்றாகத் தெரியாது. அதற்குரிய சாமர்த்தியமும் உனக்கில்லை (திருடனைக் காலால் உதைக்கிறான். அவன் தலைவணங்கிக் கும்பிட்டுச் சிரித்துக் கொண்டே ஓடிப்போகிறான்.) என்ன ஐயா, அப்பு ஐயரே! இன்று என்னவோ பாயஸம் செய்திருக்கிறீர்!

அப்புவையர் — ஆம். உட்கார்ந்து கொஞ்சம் பாயஸம் குடி.

போலீஸ்காரன் — இங்கே குடிப்பதைக் காட்டிலும் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய் நிதானமாய்க் குடிப்பேன்.

அப்புவையர் — நீ சொல்வதன் அர்த்தம் எனக்குத் தெரியும். இங்கே கொஞ்சம் குடி. பெண்ஜாதி பிள்ளைகளுக்குக் கொஞ்சம். வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோ.

போலீஸ்காரன் — கொடுத்தால் சந்தோஷம்தான். எவனோ ஒருவன் பிசாசு பிடித்தவனைக் கண்டவுடனே நீங்களெல்லாரும் இவ்வளவு பயங்காளிகளாக ஓட்டம் பிடித்தது ஆச்சரியமா யிருக்கிறது.

அப்புவையர் — சங்கதி என்னவென்றால், வந்தவன் பிசாசு பிடித்த மனிதன்தானோ, அல்லது

பிசாசு தானே என்று எங்களுக்குத் தெரியவில்லை. அப்போது இருட்டுவேளை. அந்த மங்கலான விளக்கு வெளிச்சத்தில் எங்கள் கண்ணுக்குத் தெரிந்ததெல்லாம் உப்பின முகமும் தலைவிரி கோலமும் பயங்கரமான குரலுந்தான். அது இருக்கட்டும், எல்லா சங்கதியும் தெரிந்த பிறகு நீயே அவனைப் பிடிக்கப் பயப்பட்டாய். நாராயணனும் ராமனும் உதவி செய்யாவிட்டால் நாம் அவனைப் பிடித்திருக்கவே முடியாது.

போலீஸ்காரன் — ஆனல், அவர்கள் இருவரும் அவனுடைய ஊர்க்காரர். அவன் என்ன செய்வான் என்ன செய்யமாட்டானென்று அவர்களுக்குத் தெரியும். முதலிலிருந்து அவன் சங்கதி யெல்லாம் அவர்களுக்குத் தெரியும். ஆதலால், அவர்கள் தைரியமாக விவகரித்தது ஸகஜம்.

அப்புவையர் — உன்னை இன்னும் அதிகமாக வருத்தப்படுத்த மாட்டேன். வந்து கொஞ்சம் பாயஸம் சாப்பிடு.

போலீஸ்காரன் — அந்தப் பசங்களெல்லாம் எவ்வளவு பாயஸத்தைப் பாழாக்கினர்கள்!

அப்புவையர் — அவர்கள் வேண்டுமென்று வீணாக்கவில்லை. பாயஸங் குடிக்க ஆரம்பிக்கும் போது பயமுறுத்தித் துரத்தப்பட்டார்கள்.

போலீஸ்காரன் — இப்போது அவர்கள் இலையை விட்டெழுந்து போனதனலே மறுபடி வந்து உட்கார்ந்து உண்ணக்கூடாது போலும்.

அப்புவையர் — உண்ணலாகாது.

போலீஸ்காரன் — ஐயோ பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்?

அப்புவையர் — பாயஸம் குடிக்காமற் போக வேண்டியதே. இனி, வா (இருவரும் உள்ளே போகிறார்கள்.)

(திரை.)

அங்கம் - 5.

களம் - 1.

[ஒரு மாதத்திற்குப் பிறகு தேனூர் கிராமம் — கோபாலனுடைய வீடு. இரவு 8 மணிப்பொழுது கோபாலனும் ஜானகியும் வீட்டிற்குள்ளே உட்கார்ந்திருக்கிறார்கள்.]

கோபாலன் — வெளியே நல்ல நிலா எரிக்கிறது. நாம் முற்றத்தில் உட்கார்ந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்போம். சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் பார்த்துப் பூரிப்போம்.

ஜானகி — சந்திரனும் நக்ஷத்திரங்களும் எனக்கு இனிமையாகத் தோன்ற. வேண்டுமானல் நீங்கள் போய் வெளியே உட்காருங்கள். உங்களுக்குச் சமக்காளம் போட்டுமா ?

கோபாலன் — நீயும் வராவிட்டால் நான் மாத்திரம் போகமாட்டேன்.

ஜானகி — நான் வரமாட்டேன்.

கோபாலன் — நீ ஏன் அவ்வளவு மனச் சடைவாயிருக்கிறாய் ?

ஜானகி — காரணம் உங்களுக்கே தெரியும்.

கோபாலன் — நடந்துபோன விபத்துக்களை நினைத்து வருத்தப் படுவதனால் பயனென்ன? குழிப் பிள்ளையை யெடுத்து இழவு கொண்டாடாதே.

ஜானகி — ஆனாலும் நமது சுந்தரத்தை நினைத்துப் பாருங்கள். எவ்வளவு சிறுவயது, எவ்வளவு சுறுசுறுப்பு, என்ன பிரேமை. அப்படிப் பட்டவன் இறந்துபோய் விட்டானே, போய் விட்டானே, போய் விட்டானே!

கோபாலன் — (கண்ணிலிருந்து நீர் தாரையாக ஒழுக) ஜானகீ!............ (குன்றிக் கீழே விழுகிறான்).

ஜானகி—(அழுதுகொண்டே கணவனைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறாள்) வாருங்கள், இறந்த நம் குழந்தையை யெண்ணி அழுவோம். அவன் இறந்து போனது முதல் இது வரையில் நாம் இப்படி ஒரு நாளும் செய்ததில்லை. என் கண்ணீர் உங்கள்மேல் விழ, உங்கள் கண்ணீர் என்மீது விழ நாம் இருவரும் கதறிக்கட்டிக் கொண்டு வாய் விட்டலறி அழவேண்டுமென்று வெகு நாளாக என் மனம் துடித்துக் கொண்டிருந்தது. (இருவரும் இறுக அணைந்துகொண்டு சிறிதுநேரம் ஓலமிடுகிறார்கள்)

கோபாலன் — உனக்கு இருந்த இந்த ஆசையை எனக்கு ஏன் முன்னாலே தெரிவிக்கவில்லை?

ஜானகி — சில விஷயங்கள் வாய்விட்டுச் சொல்ல முடியாது. அவரவர்களே ஊகித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கோபாலன் — நீ ஒன்றுமே செய்கிறதில்லை. அந்தக் கண்மணி குழந்தை இறந்து போனது முதல் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாயே யொழிய வேறொன்றும் செய்கிறதில்லை.

ஜானகி — அதோடு என் மனம் முறிந்துபோய் விட்டது; வாழ்க்கையில் இனிமையற்றது. மாறாத் துக்கம் மூண்டது.

கோபாலன் — ஆனால், மற்றக் குழந்தைகளையும் என்னையும் கொஞ்சம் நினைத்துக் கொள்.

ஜானகி — உங்கள் நினைவினாலேயும் இந்தக் குழந்தைகளை நினைத்துமே நான் இன்னும் உயிர் வைத்துக் கொண்டு இருக்கிறேன்.

கோபாலன் — துக்கத்தையே பாராட்டிக் கொண்டிருக்காதே. அந்த நினைவை யெல்லாம் ஒழி. இல்லாவிட்டால் பைத்தியம் பிடிக்கும்.

ஜானகி — எனக்குப் பைத்தியம் பிடித்துப் போயிற்றோவெனப் பல தடவை நானே நினைத்ததுண்டு.

கோபாலன் — அம்மாதிரி எண்ணங்களை யெல்லாம் விட்டுவிடு. (முத்தமிடுகிறான்) இப்போது என்னுடன் வெளியே வந்து நிலவின் அழகை அனுபவி. (மெதுவாக அவளைப் பிடித்து இழுக்கிறான்).

ஜானகி — நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன். உங்களையும் குழந்தைகளையும் தவிர வேறு எனக்கு இவ்வுலகில் ஒன்றுமே இல்லை.

கோபாலன் — மீனாக்ஷி நமக்குச் செய்ததையெல்லாம் நினைத்து இப்போது மனப் பூர்த்தியாகப் பச்சாதாபப் பட்டுத் துக்கிக்கிறாளென்று கேள்விப் படுகிறேன்.

ஜானகி — அதனால் என்ன பிரயோசனம்? சுந்தரத்திற்கு உயிர் கொடுத்து அவள் எழுப்ப முடியாது.

கோபாலன் — ரகுராமன் பைத்தியம் பிடித்துப் பிதற்றிக்கொண்டிருக்கிறானும். அவனைச் சொஸ்தப் படுத்த முடியாதென்று திருக்கணங் கோட்டிலும் ஏற்றுமானூரிலும் சொல்லி விட்டார்களாம்.

ஜானகி — மீனாக்ஷிக்காக நான் விசனப் படுகிறேன்.

கோபாலன் — ஆமாம். ஆனால், அவளுக்கு நேர்ந்த அவஸ்தை நியாயமானதே யாகும்.

ஜானகி — அதைச் சொல்லாதேயுங்கள். ஸ்திரீயின் மனம் எப்போதும் சஞ்சலமானது. துக்கம் நேர்ந்த காலத்தில் ஸ்திரீகள் அநேக விதமான கொடிய பழி மொழிகளைப் பேசுவார்கள்.

கோபாலன் — அவள் உன்னை நேரே பார்த்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ள விரும்புகிறாள்.

ஜானகி — முன்னரே நான் அவளை மன்னித்து விட்டேன். ஆனால், அவளை நேரே பார்க்க எனக்குப் பிரியம் இல்லை. நேரே பார்த்தால் சுந்தரத்தின்

ஞாபக மெல்லாம் எனக்கு வந்து விடும். என்னைக் கொன்று விடும்.

கோபாலன் — நல்லது, இப்போது போய் வெளியே உட்காருவோம்.

(திரை.)

களம் - 2.

[பன்னஞ்சாத்தனூர் கிராமம் கேசவன் வீடு மாலை 9 மணிப் பொழுது. கேசவன், நாராயணன் மீனாக்ஷி, பாகீரதி ஆகிய எல்லாரும் கூடி ஆலோசிக்கிறார்கள்.]

நாராயணன் — நான் உங்களெல்லாருக்கும் ஒரு வார்த்தை உறுதியாகச் சொல்லுகிறேன். பிசாசு என்பதே இல்லை. மந்திரவாதிகளும் பேயாடிகளும் தங்களுடைய சொந்த லாபத்தைக் கருதி மனத்தினாற் கற்பனை செய்தது அது.

மீனாக்ஷி — அப்படியானால் கடவுள் என்பதும் புரோகிதர்களாலும் ஆசாரியர்களாலும் தங்களுடைய சொந்த லாபத்தின் பொருட்டுக் கற்பனை செய்யப்பட்டதே யாகும்.

நாராயணன் — இல்லை. முற்றும் அப்படியாகாது. ஆனாலும் புரோகிதர்களும் ஆசாரியர்களும் தங்களுடைய சுயநலங் கருதிக் கடவுளுக்கு அங்க அவயவங்கள் அமைத்திருக்கிறார்கள். படைத்தவன் ஒருவன் இல்லை யென்றால் உலகம் ஏற்பட்டது எப்படி யென்று சொல்லமுடியுமா ?

மீனாக்ஷி — பிசாசாவது பிசாசுகளாவது உண்டென்று சொல்லாமல் உலகத்தில் நடக்கிற குற்றங்

களுக்கும் பாபங்களுக்கும் காரணம் என்ன சொல்வது? பிசாசுகளே இல்லையென்றால் என் கணவன் இப்படியானதற்கு என்ன சொல்வாய்?

நாராயணன் — பிசாசுகள் இருக்கின்றனவென்னும் நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்பிசாசுகளுள் தான் ஒருவனென்றோ நால்வரென்றோ அவன் பிரமைகொண் டிருக்கிறானென்பது தெளிவாகத் தெரிகிறது.

மீனாக்ஷி — அவரை ஒரு மந்திரவாதியை விட்டு வேறு மந்திரவாதியிடம் மாறி மாறிக்கொண்டு போனோம். கோயில் கோயிலாக எத்தனையோ கோயில்களுக்குக் கொண்டு போனோம். எவ்வளவோ பணத்தை அவருக்காகச் செலவிட்டோம். அடுக்கடுக்காகத் தாய்த்துக்களைச் செபம் பண்ணி அவர் இடுப்பிற் கட்டினோம். அவை யெல்லாம் ஏறக்குறைய 8 ராத்தல் எடை இருக்கும். இத்தனை பண்ணியும் ஒரு பிரயோசனத்தையும் காணோமே. தெய்வங்கள் கொடுத்த ரக்ஷைகள் பிசாசுகளை வெருட்டி யோட்ட முடியவில்லை யென்று தோன்றுகிறதே.

நாராயணன் — ரக்ஷைகள் கொடுத்தது தெய்வங்களல்ல, பூஜாரிகளே.

மீனாக்ஷி — இரண்டும் ஒரே அர்த்தம் தான்.

கேசவன் — இந்த வீண் விவாதத்தை விட்டு விவகாரமாகப் பேசுவோம். ரகுராமனுக்கு ஸ்வஸ்த புத்திவருமாறு செய்வது எப்படி? இப்படியெல்லாம்

அலைந்து திரிந்து அலுத்துப் போனேன். அவனை யும் அவன் வழி வகைகளையம் பார்த்தால் எனக்குத் தலைநோகிறது. தான் யார் என்பதும் தான் செய்ய வேண்டிய காரியம் என்னவென்பதும் அவனுக்கு ஞாபகமே வருவதில்லை யென்று தோன்றுகிறது. சென்ற இரண்டு மாதங்களாகச் செய்தது போல நாம் அவன் பின்னல் எப்போதுமே அலைந்துகொண் டிருக்க முடியாது. இப்போது இருக்கிறபடி பார்த் தாலும் நான் மேலே செய்யக்கூடிய காரியம் ஒன் றுமே தோன்றவில்லை. மீனுக்ஷிக்காக விசனப்படு கிறேன். ஆனல், நான் வேறு என்ன செய்யக் கூடும் ?

மீனுக்ஷி — அண்ணு ! உன்மீது நான் குற்றங் கூறவில்லை. தமையன் செய்யக்கூடியது அத்தனை யும் செய்தாய் ; அதற்கு அதிகமும் செய்துள்ளாய்.

கேசவன் — இத்தனை பாடுபட்டதற்கு ஏதாவது பிரயோசனம் இருந்தால் நன்ருயிருக்கும்.

பாகீரதி — நாராயணன் ஏதாவது ஆலோசனை சொல்லுகிருனே, பாருங்கள்.

நாராயணன்—அவனுக்கு நன்ருக ஓய்வு கொடுங் கள். கோயிலுக்குக் கோயில் கொண்டு போய், ஒரு மந்திரவாதியை விட்டு மற்றொரு மந்திரவாதியிடம் கொண்டு போய் அவனுக்கு மனவெழுச்சி உண் டாக்காதிருங்கள். மந்திரவாதிகளையும் பேய்பிடித்த வர்களையும் கண்டால் அவனுக்குக் கிளர்ச்சி யுண்டா

கும். அவன் அமைதியாக ஓரிடத்தில் இருக்கட்டும். தினந்தோறும் காலையில் பச்சை ஜலத்தில் ஸ்நானம் செய்வியுங்கள். அவனெதிரில் தேவ ஸ்தோத்திரங்களைப் பாராயணம் செய்வியுங்கள். நான் சொல்லக் கூடிய ஆலோசனை அதுதான். நான் போய்வருகிறேன்.

கேசவன் — ஒரு லாந்தர் எடுத்துக்கொண்டுபோ.

நாராயணன் — வெளியில் நல்ல நிலா வெளிச்சம் இருக்கிறது. லாந்தருக்கு அவசியம் ஏது? இனி மறுபடி ஒரு சமயம் உங்களைப் பார்க்கிறேன் (நாராயணன் போகிறான்.)

கேசவன் — ரகுராமனுடைய வியாதிக்கு அவன் சொல்லிய பரிகாரம் பண்ணிப் பார்க்கத் தக்கதே யெனத் தோன்றுகிறது.

பாகீரதி — அதோடு, கஷ்டமும் இல்லாமல் பணச் செலவும் இல்லாமல் பண்ணக்கூடிய பரிகாரம் அது ஒன்றே. மீனாக்ஷி! நீ என்ன சொல்லுகிறாய்?

மீனாக்ஷி — எனக்கு வாழ்க்கை வெறுத்துப்போயிற்று.

பாகீரதி — அப்படி ஏன் சொல்லுகிறாய்? நாங்கள் செய்யக்கூடியதெல்லாம் செய்து விட்டோமல்லவா?

மீனாக்ஷி — நீங்கள் செய்தீர்கள். நீங்கள் செய்யவில்லையென்று நான் சொல்லவில்லை. ஆனாலும்,

என் கணவனுடைய ஸ்திதியைப் பார்த்தால் வாழ்க்கையில் எனக்கு ருசியே தோன்றவில்லை. இந்தத் துன்பத்திற்கெல்லாம் நானே காரணம் என்னும் நினைவு என்னை வருத்துகிறது. அவர் பூர்வஸ்திதிக்கு வந்து ஆளாகிறவரையில் எனக்குச் சந்தோஷமே இராது.

கேசவன் — நாமெல்லோரும் வெளியே போய் உட்காருவோம். நிலா வெளிச்சம் அழகாயிருக்கிறது. நாராயணன் சொன்ன பரிகாரத்தைச் செய்யத் தொடங்குவோம். ரகுராமனையும் வெளியே அழைத்துக் கொண்டுவா. (ரகுராமனுடன் எல்லோரும் வெளியே போகிறார்கள். 'நான் குட்டிச்சாத்தான். நான் குடிப்பதற்கு இரத்தம் வேண்டும்' என்று கத்திக்கொண்டு ரகுராமன் ஓடுகிறான்.)

கேசவன் — அவன் நாசமாய்ப் போக! மறுபடியும் அவன் அலைந்தாடப் போய்விட்டான். நாராயணனுடைய முட்டாள் கொள்கையே இதற்குக் காரணம்.

பாகீரதி — நாராயணன்மீது குற்றம் சொல்லாதேயும். ரகுராமனைப் பிடித்து வைத்திருந்ததனால் நற்பயன் ஒன்றும் இல்லையென்பது நிச்சயம். அவன் போகிற வழியே விட்டால் காலக்கிரமத்தில் அவன் வேகந்தணிந்து தானகவே ஓய்ந்து போகக்கூடும்.

கேசவன் — அது சந்தேகம்தான்.

பாகீரதி — வேறு என்ன செய்யக்கூடும்?

கேசவன் — ஒன்றும் செய்யமுடியாது. மீனாக்ஷிக்காக விசனப்படுகிறேன்.

மீனாக்ஷி — எனக்காக விசனப்படாதே. அவனுடைய பைத்தியத்திற்கு நான் காரணமாயிருந்தேன்.

பாகீரதி — அது பைத்தியம் என்று ஏன் சொல்கிறாய்? அது பிசாசு பிடித்ததனாலுண்டான பீடையல்லவா?

மீனாக்ஷி — நாராயணன் சொன்னதைப் பற்றி ஆழ்ந்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறேன். முடிவில் அவன் சொல்லியதே சரியென்று தீர்மானித்துவிட்டேன். பிசாசு என்பதே இல்லை. என் கணவனுக்கு உண்டாயிருக்கிற தொந்தரவெல்லாம் மனக்கிளர்ச்சியினால் ஏற்பட்ட பிரமை. அது இப்படிப் பைத்தியம் போலக் காண்கின்றது.

கேசவன் — பலே! மீனாக்ஷி! மனத் தெளிவில் இப்போது நீ இரண்டாம் படிக்கு வந்திருக்கிறாய். இப்பொழுது என்னசெய்ய நினைக்கிறாய்?

மீனாக்ஷி — அவரைத் தேடிக்கொண்டு போகிறேன்.

கேசவன் — நான் உன்னுடன் வர முடியாது. தேடித் தேடி நான் அலுத்துப் போயிருக்கிறேன்.

மீனாக்ஷி — நீ வர வேண்டாம். இன்றிரவு நல்ல வெளிச்சம் இருக்கிறது.

கேசவன் — ஆயினும், உன்னைப் போன்ற பெண் மகள் தனித்துத் துணிந்து வெளியே போவது நல்ல தல்ல, யுக்தம் அல்ல, கௌரவமும் அல்ல.

மீனாக்ஷி — கணவனைத் தேடிச் செல்வதைக் காட்டிலும் கௌரவமான காரியம் வேறொன்றும் இல்லை. வெளியே துணிந்து போவதனால் அபாயம் வரக்கூடுமென்றும், அது அயுக்தமான காரியமென்றும் சொல்லுகிறாய். உயிர்போய் விடுமே என்னும் பயம் எனக்கு இல்லை. என் மானத்தையோ எந்த விதத்திலும் அதற்குப் பங்கம் வராமற் காத்துக் கொள்வேன்.

கேசவன் — இப்படித் தேடுவதற்கு எல்லை ஏது? இது எங்கே முடிவுறும்?

மீனாக்ஷி — தேடுவது இதுவே கடைசித் தடவையாகும்.

கேசவன் — அடுத்த முறை தேடுகிற வரையில்.

மீனாக்ஷி — இல்லை. இதுவே கடைசியாகத் தேடுகிறதென்று நான் உனக்கு உறுதியாகச் சொல்வேன். இது வரையில் நாம் செய்ததில் தப்பு என்னவென்று கண்டு கொண்டேன். நாம் அவரைப் பலவந்தமாக வீட்டுக்குக் கட்டியிழுத்து வந்திருக்கக் கூடாது. நல்ல வார்த்தை சொல்லியே இந்தத் தடவை அழைத்து வரவேண்டும்.

கேசவன் — நல்ல வார்த்தை சொன்னால் அவனுக்கு ஏறுமென்று நினைக்கிறாய் போலும்.

மீனாக்ஷி — நல்லது. அது பயன்படா விட்டால் அதைப் பற்றிப் பேச்சே இல்லை. நான் திரும்பி வந்து விடுவேன். இனி அவரைப் பற்றிக் கவலை கொள்ளமாட்டேன். நான் அறுதலியென்று நினைத்துக் கொள்கிறேன், அல்லது, கைவிடப் பெற்ற பெண்டெனப் பாவித்துக் கொள்கிறேன். நல்ல வார்த்தையினால் அவரை வசப்படுத்திக் கொண்டுவர முடியுமானால் அவரைச் சொஸ்தப் படுத்திவிடலா மென்று நம்புகிறேன்.

பாகீரதி — இவள் சொல்வது சரியாகவே இருக்கிறது.

கேசவன் — நல்ல வார்த்தையினால் அவனைத் திரும்பிவரச் செய்யலாகுமென்று நீ நிஜமாக நினைக்கிறாயா?

பாகீரதி — ஒரு வேளை அவன் திரும்பி வரலாம். எப்படி யிருந்தாலும் பரீக்ஷை பண்ணிப் பார்த்து விடுவது நல்லது.

கேசவன் — அவனுக்கு எவ்வளவு பைத்தியமோ உனக்கும் அவ்வளவு பைத்தியந்தான்.

பாகீரதி — அதி சாக்கிரதை எப்போதுமே பயன் படாது.

மீனாக்ஷி — நான் போய் வருகிறேன்.

கேசவன்—கொஞ்சம் பொறு. தேடுவது இதுவே கடைசித் தடவை யென்று நீ சொல்வதனால் நானும் வருகிறேன். என் தங்கை கணவனைக் கடைசியாகத்

தேடும் பொழுது நான் அவளுக்குத் துணை செய்ய வில்லை யென்னும் அபவாதம் எனக்கு இல்லாதிருக் கட்டும். பாகீரதி கதவைச் சாத்திக்கொண்டு, நாங் கள் திரும்பி வருகிற வரையில் உள்ளே இரு.

பாகீரதி — நீங்கள் எப்பொழுது திரும்பி வரு வீர்கள்?

கேசவன் — நாங்கள் எப்படிச் சொல்ல முடியும்? ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்தாலும் வரலாம், பன்னிரண்டு மணி நேரமானலும் ஆகலாம், திரும்பி வராமற் போனலும் போகலாம். கடைசியாகத் தேடு வது கடைசிப் பிரயாணத்திற் கொப்பாகும்.

பாகீரதி — அப்படிப்பட்ட அசட்டு வார்த்தை யொன்றும் சொல்லாதேயுங்கள். லாந்தர் எடுத்துக் கொண்டு போம் (லாந்தர் கொடுக்கிருன்.) கயிறு வேண் டாமே, நிச்சயந்தானே!

மீனுக்ஷி — நிச்சயந்தான்.

கேசவன் — சரி. நாங்கள் போய் வருகிறேம். (லாந்தரை எடுத்துக் கொள்கிருன் — கேசவனும் மீனுக்ஷியும் போகிருர்கள்.) (திரை.)

களம் - 3.

[சுடுகாடு — பின்னிரவு 1 மணிப் பொழுது. ஒரு பிணம் எரிந்து கொண்டிருக்கிறது — ரகுராமன் அதைச் சுற்றிக் கூத்தாடுகிருன். — மீனுக்ஷியும் கேசவனும் அடுத் துள்ள தொரு புதரில் ஒளிந்து கொள்கிருர்கள்.]

ரகுராமன் — (கூத்தாடுகிருன் — தனக்குத் தானே) நானே அந்தப் பிசாசு. நானே உன்னைச் சாகச்

செய்தேன். நரகத்திலுள்ளது போல நருடைய தேகம் எரிவதைக் கண்டு நான் களிக்கிறேன். அங்கே தீ மிக்க கடுமை. அருகிலிருந்து பார்த்து ஆனந்திக்க முடியாது. ஆனல், இங்கேயோ தீ இத மாயிருக்கிறது. பார்த்துப் பூரிப்பதற்குச் செளகரிய மாயிருக்கிறது. பிணத் தீயில் குளிர்காய்வது எவ்வ ளவு புதுமையான வழி! மனதுக்கு இது எவ்வளவு ஆறுதலா யிருக்கின்றது! களேபரக்காரன் உயிரோ டிருந்தால் இதற்கு இடம் கொடுத்திருக்கவே மாட் டான். ஆனதனுலேயே இது அனுபவிப் பதற்கு இவ்வளவு ஏற்றதா யிருக்கின்றது. ஹா! ஹா! ஹா! தலே வெடிக்கிறது. ஐயோ பாவம். நீ உயிர்த் திருந்தபோது எண்ணமிட்டு எண்ணமிட்டு, உன் தலே ஒரு போதும் வெடிக்கவில்லே; இப்போது அது தீயி ஞல் வெடிக்கிறது. உன் பெயர் எனக்குத் தெரி யாது. ஆனல் உண்மையில் நீ தர்மிஷ்டன். வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியலாகாது. இப்போது இவனுடைய தேகம் என்ன சுகம் அளிக் கிறதென்று இவனுக்குத் தெரியாது.

நான் பிசாசுகளுக்குப் பிணேப்பட்டுள்ளேன். ஒரு காலத்தில் எனக்கு மீனுக்ஷி என்னும் ஒரு மனேவி இருந்தாள். அவளும் பேய்ப் பக்தி யுள்ளவளே. வரிசைக்கு நான்காகத் தரம்வாரி நான்கு வரிசைப் பிசாசுகளே ஒன்றை யொன்று பார்த்துக்கொண் டிருக்கும். பிராணிகளுள் சரஸ ஸல்லாபத்திற்குரிய நண்பர்கள் பிசாசுகளே. ஆனல், அவை தங்கள்

தங்களுடைய அந்தஸ்தை மிகப் பாராட்டிக் கொள்ளும். அந்தஸ்துக்குக் குறைவு ஏற்பட்டால் பொறுக்க மாட்டா. ஒவ்வொரு பிசாசும் இத்தனை உயரம் இருக்கவேண்டுமென்னும் நிர்ணயம் உண்டு. அதற்கு எள்ளளவும் ஏறக்கூடாது. அதுவல்லாமல் பணங் கொடுக்கா விட்டால் ஒரு பிசாசும் ஒரு காரியமும் செய்யாது. இதுவும் அவைகளின் அகந்தைக் குறியதே. ஆனல், அகந்தை மேற்கொண்டு உயர நில்லாமல் தாழ்ந்து வந்து குடிகளோடு சரஸமாக இணங்கும். கடவுளைப்போல அவை ஜனங்கள் தன்னைத் தேடி வரவேண்டுமென்று காத்திருப்பதில்லை. அவைகளைக் காணவேண்டுமென்று நோக்கம் சிறிது கொண்டவர்களையும் அவைகளே வெளிவந்து சந்திக்கும். அவை ஜன நாயகர்களைப் போலவும் நடந்து கொள்ளும். தங்களைப் பின்பற்றிப் பலர் நடக்க வேண்டும் என்னும் ஆசை அவைகளுக்கு உண்டு. பின் பற்றுகிறவர்கள் எத்தன்மையராயினும் அவைகளுக்கு அக்கரை இல்லை. இவ் விஷயத்தில் அவை கடவுளைப்போலத் தம்மை அடுத்து வழிபடுகிறவர்களுக்கு அசாத்தியமான ஆசார அனுஷ்டானங்கள் இருக்க வேண்டுமென்றும் குணவிசேஷம் இருக்க வேண்டு மென்றும், பொறுக்கி யெடுத்தவர்களாக இருக்க வேண்டுமென்றும், நிர்ப்பந்தப் படுத்துவதில்லை. கடவுளையும் பிசாசுகளையும் ஆராதிக்கிறவர்களே மானிடரிற் பெரும்பாலராவர். அவர்கள் கடவுளைத் தொழுகிறோம் என்னுங் காரணத்தால்

பிசாசுகளைக் கைவிடார்; பிசாசுகளையுங் கூட வழி படுவார்கள்.

ஆகையினலே தேவதைகளுக்கும் பிசாசுகளுக்கும் என்றென்றைக்கும் தீராப்போர் உண்டு. இந்தப் போரில் நான் பிசாசு பக்ஷம்; என் மனைவி மீனுக்ஷி அப்படியல்ல. அவள் பிசாசுகளைக் கைவிட்டாள். நான் பிசாசுகளின் பக்ஷமே. நானே பிசாசுகள். ஹோ! ஹோ! ஹோ! (கூத்தாடுகிறன்).

மீனுக்ஷி — (கேசவனிடம் காதோடு) நீ பேசாமல் சும்மா இரு. நான் போய் அவரைப் பிடித்துக் கொள்கிறேன். உன்னைக் கூப்பிடுகிற வரையில் நீ நகராதே.

கேசவன்—(மெதுவாக) நல்லது அப்படியே யாகட்டும். ஆனல், இப்போது போய் அவனைச் சந்திப்பது ஆபத்துக் கிடமாகுமென்று தோன்றுகிறது.

மீனுக்ஷி — (மெதுவாக) என்ன கஷ்டம் வந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் (புதருக்குள்ளிருந்து வெளியே வருகிறுள்).

ரகுராமன் — (அவளைப் பார்த்து) இந்தப் பயங்கரமான வேளையில் இங்கே வருகிறது யார்? பகைவியாகிய பத்திரகாளியா? அவள் எப்பொழுதும் பிசாசுகளுக்கு விரோதி. நான் அவளோடு போர் செய்வேன் (மீனுக்ஷியை நோக்கிப் போகிறுன்).

மீனுக்ஷி — யஜமானரே!

ரகுராமன் — ஓ பத்திரகாளி! உன் இரத்தத்தை உறிஞ்சுவேன்.

மீனாக்ஷி — (அவனை நோக்கி முன்சென்று) உறிஞ்சு. (மீனாக்ஷியின் இடது தோளிற் கடித்து ரகுராமன் கொஞ்சம் இரத்தம் உறிஞ்சுகிறான்).

ரகுராமன் — ஓ! ஓ! இரத்தம் எவ்வளவு சூடாயிருக்கிறது? நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன்? எனக்கு மூர்ச்சையாகிறது (தேகந் தெரியாமல் கீழே விழுகிறான்).

மீனாக்ஷி — கேசவா! இங்கே வா (கேசவன் வருகிறான்).

கேசவன் — நாம் இப்பொழுது என்ன செய்வோம்?

மீனாக்ஷி — இவருக்கு நினைவு வந்தவுடனே வீட்டிற்குக் கொண்டுபோய் அமைதியாக வைப்போம். இவருக்கு இருந்த பிரமை முற்றித் தணியலாயிற்று.

கேசவன் — உன்னைக் கடித்த புண் எப்படி இருக்கிறது? அவன் இரத்தத்தை உறிஞ்சும் பொழுது நீ ஏன் கூக்குரலிட வில்லை?

மீனாக்ஷி — அந்தத் தண்டனை எனக்கு உரியதே. நான்தான் எல்லாவற்றிற்கும் காரணம். அவர் என் இரத்தத்தை யெல்லாம் அடியோடு உறிஞ்சி முன் இருந்த ஸ்வஸ்த புத்தி மேற்கொள்வாரானல் எனக்குத் திருப்தியே. நீ போய், ஆற்றிலிருந்து கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா.

கேசவன் — நல்ல வேளையாக ஆறு அருகில் இருக்கிறதே.

மீனாக்ஷி — ஏன், நம்முடைய சுடுகாடுகளெல்லாம் ஏதாவதொரு ஆற்றை யடுத்தாவது ஓடையை யடுத்தாவதே இருக்கின்றன.

கேசவன் — அது ஏன் அப்படி அமைந்திருக்கின்றது என்று உனக்குத் தெரியுமா?

மீனாக்ஷி — தெரியாது. ஏன் அப்படி?

கேசவன் — இந்து வாயிருப்பவன் எவனும் கங்கைக் கரையில் இறக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். இந்த ஒவ்வொரு நதியும் ஓடையும் கங்கையின் பிரதிநிதி யென்று நினைக்கப்படுகின்றது.

மீனாக்ஷி — நல்லது. இப்போது போய் உடனே கொஞ்சம் ஜலம் கொண்டுவா.

கேசவன் — எதில் கொண்டு வருவேன்?

மீனாக்ஷி — இந்தக் கொட்டாங்கச்சியில் (தரையில் ஒன்றைப் பொறுக்கி யெடுத்துக் கேசவன் கையில் கொடுக்கிறாள்) பிணத்தை நன்றாய் எரிய விடும்பொருட்டு இந்தக் கொட்டாங்கச்சிகளை இங்கே கொண்டுவந்திருப்பார்கள். இப்போது நாம் இதை இந்தக் காரியத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்கிறோம். நீ போ. (கேசவன் போகிறான்).

மீனாக்ஷி — (தனக்குத்தானே) ஓய்ச்சல் ஒழிவில்லாமல் அலைந்துகொண் டிருந்தவர் இப்போது தூங்கு

கிற குழந்தையைப் போலச் சாதுவாய்க் கிடக்கிறார். இயற்கையாகவே பரிகாரம் ஏற்பட்டு விட்டது. காலக் கிரமத்தில் மனோவியாதி தானாகவே சமனமாய் விட்டது. அவருக்கு இருந்த அடங்காத இரத்த தாகம் அவர் உதட்டில் இரத்தம் பட்டவுடனே அடங்கிப் போயிற்று. அவர் இரத்தத்தைக் குடித்தபோது எனக்கு உற்சாகமா யிருந்தது. சந்தோஷமாய் வாழ்ந்த பழைய நாளில் என் குழந்தைகளுக்குப் பால் கொடுத்துக்கொண் டிருந்தபோது இருந்த மகிழ்வுணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. விதியின் வகைகள் தெரியொணாதவை. வேளையில்லாத இந்த வேளையில், பிணத்தீயின் சாயலில் என் கணவனுக்கு இருந்த மனஸ்திதி தலைகீழாக மாறத் தொடங்கியது. அவருடைய கண்களை முத்தமிட்டு அவருக்கு உணர்ச்சி யூட்டுவேன். (முத்த மிடுகிறாள்) அவருடைய உதடுகளையும் நான் முத்தமிடுவேன். அப்படி நான் முத்த மிட்டு நெடுங் காலமாயிற்று. (பலமுறை முத்த மிடுகிறாள்) அவருடைய உதடுகள் என் முத்தத்தை யேற்று எதிர் கொள்ளவில்லை. ஆயினும், அவை இனிக்கின்றன. நான் சொல்வது அவருக்குக் காது கேளா திருக்கும் இந்த வேளையில் அவரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவேன். ரகுராமரே! ரகுராமரே! அன்பான ரகுராமரே! (ஒவ்வொரு தடவையும் முத்தமிட்டுக்கொண்டே அப்படிக் கூப்பிடுகிறாள்) ஆ! கண்ணைத் திறக்கிறாரே. (கலக்கமுற்று எழுந்திருக்கிறாள்).

ரகுராமன் — நான் எவ்விடத்தில் இருக்கிறேன்? (கண்ணைத் துடைத்துக் கொள்கிருன்) ஆ, மீனுக்ஷீ! நீ மீனுக்ஷிதானே!

மீனுக்ஷி — ஆருயிரே! நான்தான். வேறு யார்?

ரகுராமன் — இந்தப் பிணம் ஏன் இங்கே எரிந்து கொண்டிருக்கின்றது?

மீனுக்ஷி — ஏனென்ருல், இவ்வுடலுக் குரியவன் இறந்தான் போலும்.

ரகுராமன் — இது யாருடைய பிணம்?

மீனுக்ஷி — எனக்குத் தெரியாது.

ரகுராமன் — எவருடைய பிணம் தகனம் செய்யப்படுகின்ற தென்று தெரியாமலே நீ இந்தத் தகனக் கிரியைக்கு வந்திருக்கிறது விசித்திரமாயிருக்கிறதே. 'ரகுராமா', 'ரகுராமா' என விளித்துக் கொண்டே நீ என்னை முத்தமிட்ட தேனே?

மீனுக்ஷி — (மனங் குழம்பி) உமக்கு உங்கள் நினைவு இல்லை. தேகந் தெரியாமற் கிடந்தீர்கள். நான் முத்தமிட்டு நெடுநாளாயிற்று.

ரகுராமன் — கெட்ட கனவொன்று கண்டேன். எனக்குப் பிசாசு பிடித்திருந்ததாகவும், நான் உன் இரத்தத்தைக் குடித்ததாகவும் கனக்கண்டேன். நிஜமாக நான் உன் இரத்தத்தைக் குடித்தேனு?

மீனுக்ஷி — இல்லை, நீங்கள் குடிக்கவே இல்லை.

ரகுராமன் — உண்மையாக நான் குடித்தேன். உனது இடது தோளைக் காட்டு. (அவளது இடது தோளைப் பார்க்கிறான்) இதோ காயம் இருக்கிறதே. ஆ! கொடிய மிருகப் பிராயமானேனே; இப்பொழுது நான் என்ன செய்யக்கூடும்?

மீனாக்ஷி — அன்பரே! அந்தக் காயத்தை முத்த மிடுங்கள். அது ஆறிப்போகும்.

ரகுராமன் — எவ்வளவு இனிமையான பரிகாரம், எவ்வளவு லகுவானது. (அந்தக் காயத்தைப் பல முறை முத்த மிடுகிறான்) பரிகாரங்க ளெல்லாம் இவ்வளவு இனிமை யாகவும் இலகுவாகவும் இருக்குமா! அடே! இந்த வேளையில் இங்கே வருகிறது யார்?

மீனாக்ஷி — வருகிறவன் கேசவன், உங்கள் மைத்துனன்.

ரகுராமன் — ஓ! கேசவன். அவன்தானா? பாகீரதியின் புருஷனல்லவா?

கேசவன் — அவன் தான்.

மீனாக்ஷி — அண்ணா! நீ ஏன் இத்தனை நேரம் தாழ்த்து வந்தாய்?

கேசவன் — ஓ! நான் முன்னரே வந்துவிட் டேன். ஆனால், ரகுராமன் கண்ணைத் திறப்பதைப் பார்த்தேன். அவனுக்குத் தன் நினைவு தனக்கு முற்றும் வரட்டுமென்று காத்திருந்தேன்.

மீனாக்ஷி — (மிக வெட்கப்படுகிறாள்) ஏன் அப்படிக் காத்திருந்தாய்? (ஒருபுறமாக) இவன் பாகீரதியிடம்

சொல்வது நிச்சயம். அவள் நல்லவளா யிருந்த போதிலும் பெண்டுகளுக்குரிய சுபாவத்தின்படி சிரிக்காமல் இருக்கமாட்டாள். நாளைக்குக் கிராமத் தில் எல்லாரும் உள்ளபடி வர்ணித்துப் பேசிக்கொள் வார்கள். ஆனல், அவர்கள் என்ன சொல்லிக் கொண்டால் எனக்கு என்ன ? என் கணவன் முன் போலச் சொஸ்தமாகி விட்டால் எனக்குப் போதும்.

கேசவன் — கவலைப்படாதே, மீனாக்ஷீ ! நான் பாகீரதிக்குச் சொல்லமாட்டேன்.

மீனாக்ஷி — (நாணுகிறாள்) இங்கே வா. அந்த ஜலத்தைக் கொடு. (அதை வாங்கிக் கொண்டு ரகுராமனது முகத்தை அலம்புகிறாள்.)

ரகுராமன் — நான் நிரம்ப இரத்தம் குடித் தேனா ?

மீனாக்ஷி — ஒரு சொட்டோ இரண்டு சொட்டோ குடித்தீர். அதைப்பற்றிக் கவலைப்படாதேயுங்கள்.

ரகுராமன் — பிசாசின் ஏவலால் உன் இரத்தத் தைக் குடித்தேன். அந்தப் பிசாசுகள் அநியாயக் காரப் பாவிகள். அந்தப் பிசாசுகளின் சம்பந்தமே வைத்துக்கொள்ள மாட்டேன். அவைகளை யெல் லாம் கைவிட்டேன் என்று சபதம் செய்கிறேன். சத்தியமாகச் சொல்கிறேன்.

மீனாக்ஷி — (கண்களில் நீர்ததும்ப அவனை அழுந்த அணைத் துக் கொண்டு) இந்த வார்த்தை கேட்க எனக்குப் பரம சந்தோஷமா யிருக்கிறது.

கேசவன் — வா, இனிப் போவோம். இந்தச் சங்கதிகளை யெல்லாம் கேட்டுப் பாகீரதி மிகக் களிப் புறுவாள். கடைசியில், நாராயணன் சொல்லிய பரிகாரமே சிறந்தது.

(திரை)

களம் - 4.

[ஒரு மாதத்திற்குப் பிறகு. பெருங்குளம் கிராமம் காலை 8 மணி நேரம் — தெருவில் ஈகுராமன் வீட்டுக்கு எதிரே — மீனுக்ஷியும் கேசவனும் பாகீரதியும் வருகிருர்கள்.]

மீனுக்ஷி — கடவுள் புண்ணியம்! அடகு மீட்டாய் விட்டது. அண்ணு, உன் தயாளத்திற்கு எல்லை இல்லை.

கேசவன் — பிசாசுகளிடத்து ஈசுவரனுக்குப் பிராண பயம் உண்டாகாதிருந்தால், என் தயாளம் மிகவும் எல்லையற்றதாக இருக்கத் தக்கதாகும். வீட்டை மீட்கிறவரையில் பிசாசுகளை யெடுத்து எறிய வேண்டாமென்று நாராயணயன் சொல்லிய ஆலோசனை நல்லதாயிற்று. அந்த நிலைமையில் ஈசுவரன் தனக்குச் சேரவேண்டிய கடன் தொகை முழுமைக்கும் செல்லாக ரூ. 75 வாங்கிக்கொண்டு சந்தோஷமாகச் சீட்டைக் கிழித்தெறிந்தான்.

பாகீரதி — ஆனல், மற்ற இருவருமோ ரூ. 110-க்குக் குறைந்து வாங்கிக்கொள்ள மாட்டோ மென்று பிடிவாதம் பண்ணினர்களே. அது ஏன்?

கேசவன் — ஏனென்றால், அந்தப் பாத்திரங்களி லாவது நகையிலாவது பிசாசுகள் இல்லை. வீட் டிலோ, 16 பிசாசுகள் இருந்தன. மிருகங்களின் இரத்தத்தினால் வீடெல்லாம் அசுத்தப்பட்டிருந்தது. நம்முடைய நல்லதிருஷ்டத்தினால் பாத்திரங்களும் நகையும் நம் கைக்குத் திரும்பி வந்தன. அவை களைத் திருப்பி வாங்குவோம் என்னும் எண்ணம், அந்தக் கடுவட்டிக்காரர்களுக்கு இல்லவே இல்லை. அவை தமக்கே ஜீர்ணமாய்ப் போகுமென்று அவர் கள் நினைத்திருந்தார்கள். அவர்களுக்கு விரோத மாகச் சாக்ஷி சொல்வேனென்று நாராயணன் பய முறுத்தாவிட்டால் அவர்கள் அவைகளைத் திருப்பிக் கொடுத்திருக்கவே மாட்டார்கள்.

மீனாக்ஷி — நாராயணன் மிக நல்லவன். அவ னிடத்திற் களங்கம் இல்லை. என் கணவனை உள்ளே கொண்டு வருமுன் பிசாசுகளின் ஜாடையே வீட்டில் இல்லாமற் செய்ய வேண்டுமென்று அவன் சொல்லிய ஆலோசனை நிரம்பச் சரியானது. இப்போது நாம் கதவைத் திறந்து பிசாசுப் பொம்மைகளை யெல்லாம் எடுத்தெறிந்து அவைகளைக் காலால் துவைப்போம். பிறகு வீட்டைச் சாணம் நீரினால் கழுவி மெழுகிப் பரிசுத்தப்படுத்துவோம். இந்தக் கிராமத்தா ரெல்லா ரும் ஏன் கூட்டம் கூடுகிறார்கள் ?

கேசவன் — இங்கே என்ன வேடிக்கை நடக்கிற தென்று பார்க்க வந்திருக்கிறார்கள் போலும். பிசாசு களைப் பிரதிஷ்டை செய்தபோது பார்த்தவர்கள்

இப்போது அவை எடுத்தெறியப் படுவதைப் பார்க் கட்டுமே (கிருஷ்ணன், ராமன், முத்து, ருக்மிணி முதலானவர் களும் கூட்டமாகப் பையன்களும் வருகிறார்கள்.)

கிருஷ்ணன் — என்ன செய்யப் போகிறீர்கள்?

மீனாக்ஷி — பிசாசுப் பொம்மைகளை யெடுத் தெறிந்து, அவைகளைக் காலால் மிதிக்கப் போகிறோம்.

கிருஷ்ணன் — ஓ! அப்படிச் செய்யாதீர்கள். உனக்கும் இந்தக் கிராமத்திற்கும் இன்னும் அதிகத் தீங்கு வரக்கூடும். ஏனென்றால் இப்படிச் செய்கிறவர் களுக்குச் சொல்லொணுத் தீங்கு நேரிடு மென்று நாகனும் மற்றவர்களும் சொல்லி யிருக்கிறார்கள்.

மீனாக்ஷி — அந்த மோசக்காரர்களைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. இத்தனை துன்பத்திற்கும் அவர்கள் தான் காரணம். பிசாசுகளைப் பிரதிஷ்டை செய்வதற்கு ஆக்ஷேபித்தாயே. அவைகளை எடுத் தெறிவதற்கும் ஏன் ஆக்ஷேபிக்கிறாய்?

கிருஷ்ணன் — பிரதிஷ்டை செய்த பிறகு இப்படி அவைகளை முறை துறையின்றி எடுத்தெறியலாகாது. உத்தமமான காரியம் என்னவென்றால், கூரையைப் பிரித்து விட்டு வெயிலும் காற்றும் மழையும் அடித்து வீட்டைப் பரிசுத்த மாக்கவிட வேண்டும். இதோ நாராயணன் வருகிறான். அவனைக் கேட்போம். (நாராயணனும் திரிவிக்கிரமனும் வருகிறார்கள்.)

மீனாக்ஷி — நான் ஒருவரையும் கேட்க வேண் டாம். இதோ அவர்கள் போகிறார்கள் (கதவைத் திறந்து

இரண்டு குட்டிச்சாத்தான் பொம்மைகளையும் இரண்டு சங்கிலிக் கருப்பன் பொம்மைகளையும் எடுத்துத் தெருவில் வீசியெறிந்து உடைக்கிறாள். அவை சுக்கல் சுக்கலாக உடைந்து போகின்றன.)

கிராமத்தவர் சிலர் — ஓ! மீனாக்ஷி! இந்தக் காரியம் இராத்திரியிலேயாவது செய்யக்கூடாதா?

மீனாக்ஷி — *(உடைந்த துண்டுகளை மிதித்துத் துவைத்துக் கொண்டு)* உங்களாலானதைச் செய்யுங்கள் சண்டாளப் பிசாசுகளா! உங்களைக் காலால் மிதித்து நசுக்கினேன் என்னும் சமாதானமாவது எனக்கு ஏற்படட்டும் *(விஷமமாக மிதிக்கிறாள்.)*

திரிவிக்கிரமன் — நானும் சில பிரதிமைகளையெடுத்தெறிந்து உடைத்து மிதிக்கலாமா, மீனாக்ஷி.

மீனாக்ஷி — உனக்கு இஷ்டம் இருந்தால், செய். *(திரிவிக்கிரமனும் மற்றப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் உள்ளே நுழைந்து, பிரதிமைகளையெல்லாம் வெளியே எடுத்து வந்து, தெருவிற் போட்டு உடைத்து மிதிக்கிறார்கள்.)*

கிருஷ்ணன் — நாம் எடுத்தெறிந்து மிதித்தவை நான்கு பிசாசுகளே. பிசாசுகள் 66 கோடி இருக்கின்றன.

மீனாக்ஷி — இந்தியன் ஒவ்வொருவனும் தினந்தோறும் நான்கு பிசாசுகளை மிதித்து ஒழிப்பானுனால், 66 கோடி பிசாசுகளும் அரை நாளுக்குள் மிதித்து ஒழிக்கப் பெறும்.

கிருஷ்ணன்—அவை யெல்லாம் இவ்வாறு மிதித்து நசுக்கப் பெறின், வீரராகவனுடைய கதி என்னவாகும்?

நாராயணன் — ஒதல்லோ (Othello) வைப் போல 'என் தொழில் பாழாய்ப் போயிற்று' என்று அழு வான். (எல்லாரும் சிரிக்கிறார்கள்) ஆனால், ஒதல்லோ வைப் போலல்லாமல் அவன் வேறு தொழில் மேற் கொள்வான் (மறுபடி சிரிக்கிறார்கள்) அடா, இது என்ன வானாலும் சரி பெருமழை பெய்கிறது. தாரை தாரை யாகப் பொழிகிறதே! (மழை பலமாகப் பெய்கிறது) பிசாசுகளின் துணுக்குகளை அடித்துக்கொண்டு போகக் கடவுள் பொழியும் மழை இது. ஹர! ஹர! மகாதேவா!

எல்லாரும்—ஹர! ஹர! மகாதேவ! கோவிந்தா, கோவிந்தா.

நாராயணன் — ரகுராமனையும் மீனாக்ஷியையும் பிசாசுப் பீடையினின்றும் விடுவித்த திருவருள் வாழி! பிசாசின் வசப்படுவது எவ்வளவு எளிது. அதன் கையினின்றும் விடுபடுவது எவ்வளவு கஷ்டம். நாமெல்லோரும் "ஹர ஹர மகாதேவ" என்று ஆர்வத்தோடு ஆர்ப்பரித்துப் பிரிந்து போவோம். (ஹர ஹர மகாதேவ என்று கூவுகிறான்)

எல்லாரும்—ஹர! ஹர! மகாதேவ! கோவிந்தா! கோவிந்தா!

(திரை)

சுபம்! சுபம்! சுபம்!